# யாத்திரை ஞானம்



இந்திரா
சௌந்தர்ராஜன்



# பதிப்புரை

எழுத்தாளர்கள் சிறுகதை, நாவல் மட்டும் எழுதினால் போதும் என்று இருந்துவிட முடியாது. இப்பொழுது பக்திப் பத்திரிகைகளும் நிறைய வெளிவரத் தொடங்கியுள்ளன. எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய பக்திக்கட்டுரை யாத்திரை ஞானம். பலமுறை திருப்பதிக்கு பாதயாத்திரை சென்று வந்த அனுபவம், 'யாத்திரை ஞானம்' நூலாக வெளி வருகிறது.

எழுத்தாளர் பரணீதரன் நாடகம், கார்ட்டூன் என பல்துறை வித்தகராயிருந்தாலும் ஆலய தரிசனம் கட்டுரைகள் புகழ்பெற்றவை. காலம் கடந்து நிற்பவை.

அதே போல், இந்திரா சௌந்தர்ராஜனுக்கு. பக்தி விஷயங்களைப் பற்றி எழுதுவதிலும் அவரது திறமை பளிச்சிட்டிருக்கிறது.

இந்நூலைப் படித்ததும் இந்த ஆண்டோ, அடுத்த ஆண்டோ அவசியம் அந்த திருப்பதி பாதயாத்திரையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி விடுகிறார்.

முடிகாணிக்கை கொடுப்பதாக வேண்டிக் கொண்டு அங்கு போன பின் முடிகாணிக்கை கொடுக்க மனம் வராமல் ஒரு அன்பர் பட்டபாடு மெய் சிலிர்க்க வைக்கும் அனுபவம்.

"கடவுளை நம்பினோர் கை விடப்படார்" என்ற பழமொழியை மெய்ப்பிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள

ஒரு சில மெய்யன்பர்களின் வாழ்க்கை அனுபவங்கள் நம்மிடமும் இறை நம்பிக்கையை மனதில் ஆழமாகப் பதியச் செய்கிறது.

ஏழுமலையானையே தொழில் பார்ட்னராக்கிக் கொண்டு தொழிலில் செழித்து, லாபத்தில் அவர் பங்கை காணிக்கையாகச் செலுத்திவரும் ஒரு அன்பரின் அனுபவத்தை படித்து பலர் வெங்கடாசலபதியை தங்கள் தொழில் பங்குதாரராக ஆக்கிக்கொண்டதும் நிஜம்.

சென்னை, பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜத்தின் ஆன்மீக சமூக நலப்பணிகளை படிக்கும் அன்பர்கள் தாங்களும் அதில் பங்கு கொண்டு தம்மாலான பொருளு தவியைச் செய்யவேண்டும் என்ற உணர்வு நூலைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டால் அதுவே இந்த நூலின் சிறப்பாகும்.

இந்நூலைப் படித்துவிட்டு திருப்பதிக்கு மாலா தாரணம் செய்து கொண்டு திருப்பதி பாதயாத்திரை புறப்படும் ஒவ்வொரு அன்பர்களும் அவசியம் படிக்க வேண்டிய நூல் என்பதில் ஐயமில்லை.

**பதிப்பாளர்**

# 1

# யாத்திரை ஞானம்

''திருப்பதிவரை பாதயாத்திரை போய்வரலாமா?''- நான் பணியாற்றும் TVS சுந்தரம் பாசனர்ஸின் .பர்சனல் மானேஜர் திரு. ரமேஷ் என்னிடம் கேட்டபோது, ஒரு வினாடி மலைப்பாகத்தான் இருந்தது எனக்கு...

''பாதயாத்திரையா?''

''ஆமாம் ஸ்வாமி...மெட்ராஸ்ல இருந்து கிளம்பி நாலுநாள் நடை. வரீரா?''

''ஏன் பஸ்ல போனா ஆகாதா...இல்ல இதுதான் என்ன போக்குவரத்து வசதியில்லாத கற்காலமா?''- நான் இப்படி திருப்பி கேட்பேன் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

ஏனென்றால் நான் நாத்திகன் அல்ல. நெற்றி நிரம்பிய ஸ்ரீசூரணம்-நாள் தவறாது சந்தியாவந்தனம் என்று இந்த இன்டர்நெட் யுகத்திலும் சில ஆசாரங்களை விட்டு விடாதவன். ஸ்ரீ வைஷ்ணவன். எனவே, ஏதோ ஒரு நம்பிக்கையில் கேட்டுவிட்டார், என் பதில் கேள்வி யால் சற்றுபாதிப்பும் ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் அவர் சொன்ன பதிலில் எனக்கு உடன்பாடு ஏற்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

''பறந்து செல்லக்கூடிய வழி இருக்கு சௌந்தர் ராஜன். ஆனாலும் சரீரப்பிரயாசையோடு அவனைச் சென்று பார்க்கும்போது ஏற்படும் அந்த சுகத்தையும், நெருக்கத்தையும் அனுபவித்துப் பார்த்தால்தான் உணர முடியும்.

இந்த சரீரத்தால் எவ்வளவோ தவறுகளை செய்கிறோம். அதற்கு பரிகாரமாக இந்த சரீரத்தையே பக்தி ரதத்தில் பூட்டி அந்த ரதத்தை கட்டி இழுத்துச் செல்வதில் உள்ள சுகத்தை வார்த்தைகளில் சொன்னால் புரியாது. ஒருமுறை வந்து பாருங்களேன் புரியும்'' என்றார்.

காய்கறி வாங்கி வரக்கூட சுசுகியில் போய்வரும் அளவு நடை செத்துப்போன நான் 'சரி இதுவும் ஒரு அனுபவம்'' என்று கருதி ''சரி'' என்று சொல்லிவிட்டேன்.

''சபாஷ் மாலாதாரணத்துக்கு வந்துடுங்கோ...'' என்றார் அடுத்து.

''மாலாதாரணமா?''

''ஆமாம்...மாலை போட்டுக்கறதுக்கு பேர்தான் மாலாதாரணம்.''

''இந்த சபரிமலைக்கு போறவா போட்டுப்பாளே அப்படியா?''

''எக்ஸாக்ட்லி.''

''புதுசா இருக்கே?''

''எது?''

''இப்படி நடை...அதுக்காக மாலைங்கறது...''

''இன்னும் இருக்கு...மாலை போட்டுண்ட பிறகு காவி வஸ்த்ரம்தான்! தினசரி இரண்டுக்கு குறையாத

குளியல், நடுவேளை விரதம் அப்புறமா நாவடக்கம், புலனடக்கம் சதாபாலாஜி பத்தின சிந்தனை...''

—அடுக்கிக்கொண்டே போனார் திரு. ரமேஷ். முதலில் இது சாத்யமா என்று தோன்றிற்று. பின் இது அவசியமா என்று கேள்வி எழும்பிற்று. இப்படி இருந்து என்னை வந்து சேவித்தால்தான் அருளுவேன் என்று பாலாஜி சொன்னானா?''—கேள்விகள் தொடர ஆரம் பித்தது. இதன் காரணமாக,

''யோசிச்சு சொல்றேன்...'' என்று அவரிடம் சொன் னேன். அவருக்கு புரிந்துவிட்டது. 'இவன் வரப் போவ தில்லை' என்று. அதன்பிறகு திருப்பதி பாதயாத்திரை பற்றி பேசுவதையே அவர் விட்டுவிட்டார்.

இருந்தாலும் ஒருநாள் பக்கத்து வீட்டுக்காரர் திருப்பதி போய் விட்டு வந்ததாக கூறி லட்டு பிரசாதம் தந்தபோது திருப்பதி ஞாபகம் வந்து மனைவியிடம் சொன்னேன். அடுத்த நொடியே அவள், ''ஏன் மாலை போட்டுக்கலை?'' என்றுதான் கேட்டாள்.

''ஏன் போட்டுக்கணும்?'' நான் வாதம் புரியத் தயாராகிவிட்டேன்.

''போட்டுக்கறது நல்லது. அது ஒரு விரத அடை யாளம்.''

''அடையாளமா? விளம்பரமா?''

''விளம்பரம்னே வெச்சுப்போம்...என்ன தப்பு? உங்களை பாத்துட்டு நாலுபேர் மாலை போட்டுண்டா நல்லதுதானே?''

''எதையும் ஒரு அர்த்தத்தோட செய்யணும்.''

''மாலை போட்டுக்கறதுல அர்த்தமில்லையா?''

''எனக்கென்னவோ அது ஒரு அலட்டலாதான் படறது. கடவுளை ஏமாத்த போட்ற வேஷம் மாதிரி கூட ஒரு ஃபீலிங்.''

''உங்களுக்கு நல்லவிதமாகவே தோணாதா?''

'என்ன நல்லவிதம்...மாலை போட்டுண்டா சுத்த பத்தமா இருக்கணுமாம். அது சாத்யமா?''

''சாத்யப்படுத்திக்கணும்.''

''சரி சாத்யப்படுத்திக்கறேன். அப்படின்னா கடவுள் அருள்மாலை போட்டுண்டவனுக்குதானா? மத்தவாளுக்கு இல்லையா...அதாவது சாதாரணமா கோவிலுக்கு போய்ட்டு வர்ரவாளுக்கு கிடையாதா?''

''இது என்ன அபத்தமான கேள்வி? அவாளுக்கும் உண்டு.''

''என்ன சொல்றே நீ. அவாளுக்கும் உண்டுன்னா எதுக்கு சுத்தபத்தம்? எதுக்கு விரதம்? எதுக்காக கால்நடை...? எல்லாமே அர்த்தம் இல்லாத செயல் தானே?''

—என் கேள்வி அவளை கோபப்படுத்தியது. திருப்திப் படுத்தவில்லை. யோசிக்க வைக்கவில்லை.

''உங்களை திருத்தவே முடியாது...'' என்று ஒரு கரிப்பு கரித்துவிட்டு போய்விட்டாள்.

எனக்குள்ளும் ஒரு தீர்மானம். இதற்கெல்லாம் ஒரு பளிச் விடை கிடைக்காதவரையில் நாலுபேர் செய்கிறார்களே என்பதற்காக நாமும் செய்யக்கூடாது என்று வைராக்யமாய் இருந்தேன்.

இந்த நிலையில் திரு. ரமேஷ் மாலை போட்டுக் கொண்டு பக்திப்பழமாக மாற ஆரம்பித்துவிட்டார். எனக்கு சிரிப்புதான் வந்தது.

திரு. ரமேஷ் லேசுப்பட்ட மனிதர் இல்லை. பர்சனல் டிபார்ட்மென்ட்டில் பதினைந்து வருஷ அனுபவம் உடையவர். மனோதத்துவம் படித்தவர். லேபர் பிரச்சினைகளில் புகுந்து வெளிவரத் தெரிந்தவர். பிறர் மனங்களைப் படித்து வேகமாக உள் ஓடுவதை புரிந்து கிரகித்து அதற்கு பதில்களை தயாராக வைத்திருப்பவர்.

சுருக்கமாக சொல்வதானால் இந்த உலகம் 'பர்சனல் மானேஜர்களை மூளைக்காரர்களாகத்தான் கருதி வந்திருக்கிறது.

புத்திதான் அவர்கள் பலம் எதிலும் 'ஏன் எதற்கு எப்படி?' என்கிற வியாஜ்யம் உள்ளவர்கள் அவர்கள்.

நானறிய பல பர்சனல் மேனேஜர்கள் பரம நாத்திகர்கள். இவர்களோடு பேச நேர்ந்தால் நாமும் பொட்டை அழித்துக் கொண்டு 'அறிவே தெய்வம்' என்று ஆட ஆரம்பித்து விடுவோம் ஸ்ட்ராட்டஜி, எஃபீஸியன்ஸி என்று சிந்திக்க தொடங்கிவிடுவோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு திரு. ரமேஷ் மிக மாறுதலாகவும் பரம பக்தராகவும் இருப்பதே எனக்கு பெரிய ஆச்சரியத்தை தந்தது. அத்தோடு அவரது பக்தியில் துளி கல்மிஷத்தை சலனத்தை சஞ்சலத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

வார்த்தைக்கு வார்த்தை 'பாலாஜி' என்கிற பக்திப் பரவசம். இவரே இப்படி இருக்கிறார் என்றால் நம்மைப் போல பல கேள்விகளை கேட்டுக் கொள்ளாமலா இவர் இருந்திருப்பார்? அதற்கு ஒரு விடை திவ்யமாக கிடைத்திருக்குமோ?

இதை அவரிடமே கேட்டு விட்டேன்.

''உங்களுக்கு இந்த விரதம் மாலை எல்லாம் அலட்டலா பகட்டா தெரியலையா...சுத்த பத்தமா விரதம் இருக்க முடியறதா?''

''ஏன் முடியாது சௌந்தர்ராஜன்? இருக்கணும் கறதுக்காக தானே அனுஷ்டிக்கறோம். நாள் பூரா குப்பை விழற வீட்டை ஒரு தடவை கூட்டி சுத்தப்படுத் தற தில்லையா? வருஷம் பூரா எப்படி எப்படியோ இருந்துடற சரீரத்தை அந்த மாதிரி ஒரு தடவை கட்டிப் போட்டு சுத்தப்படுத்திக்கதானே இந்த மாதிரி விரத கலாச்சாரம்?''

'ரொம்ப சரி...இப்படி விரதம் இருக்கிறவாளுக்கு ஒரு பலன்...இல்லாதவாளுக்கு ஒரு பலன்னு ஆண்டவன் தருவது பாரபட்சமில்லையா?''

''இதுல ஆண்டவனுக்கு எங்க இருக்கு தொடர்பு? ஆத்துக்கு குளிக்கப் போறவன் ஒருத்தன் குளிச்சு முடிச்சு தனது துணியையும் அழுக்கு போக தோய்ச்சு எடுத் துண்டு திரும்பும்போது ஒரு குடம் ஜலத்தையும் எடுத் துண்டுவரான்.

இன்னொருத்தன் போய் குளிச்சுட்டு மட்டும் வரான் இன்னொருத்தனோகரைமேல நின்னு ஆத்தை வேடிக்கை மட்டும் பாத்துட்டு வரான்.

மூணு பேரும் மூணு விதமா ஆத்தை அணுகறா அணுகறதுக்கு தகுந்த மாதிரி பலன்களை அடையறா...

ஆறு இதுல எங்க பாரபட்சமா நடந்துண்டுது. அதை பயன்படுத்திக்கறவா செயல்கள்ளதான் பார பட்சங்கள்?''

''அப்படின்னா, நம்ம பக்திங்கறது ஒரு பாத்திரம். கடவுள்ங்கறது ஒரு ஆறு...பயன் படுத்திக்கறது நம்ம பாடுங்கறேளா?''

''இல்லையா பின்னே?''

—இந்த பதில் எனக்கு சற்று நிறைவைத்தந்தது. பாரபட்சங்கள் ஏற்றத் தாழ்வுகள் கடவுளிடம் இல்லை.

நமது செயல்பாடுகளால் நம் மூலமாக தோன்றுவது தான் அது...

அத்துடன் திரு. ரமேஷ் சொன்ன விரத உதாரணமும் எனக்கு மிகப் பிடித்திருந்தது.

வருடம் முழுக்க எப்படி எப்படியோ இருக்கும் சரீரம் இனி சில தினங்களுக்காகவாவது ஒரு கட்டுப்பாட்டோடு அதுவும் பாலாஜியின் பேரருளை உத்தேசித்து கட்டுப்பாட்டோடு ஐம்புலன் சுருக்கி உள்ளொளி பெருக்க ஒடுங்கப் போகிறது. ஒடுங்கட்டுமே...

நல்லதுதானே? அடுத்த க்ஷணமே ''நானும் மாலா தாரணம் செய்துக்கறேன்'' என்று சொல்லி மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலுக்கு சென்று பிரார்த்தனை செய்து கொண்டு மாலையும் தரித்துக் கொண்டேன்.

தனியாக அல்ல... மணி என்கிற நண்பர் வெங்கட சுப்ரமணியோடு. திரு. மணி மாலை போட்டுக்கொண்டது ஒரு பெரிய கதை செருப்பில்லாமல் நூறு தப்படி நடக்க முடியாது மணியால். அத்தனை பித்தவெடிப்பு கொண்ட பாதம் மணியுடையது.

எந்த தைரியத்தில் இந்த பாதயாத்திரைக்கு துணிந்து மாலை போட்டுக்கொள்கிறார்...?

# 2

**மா**லாதாரணத்திற்கு மணி வந்து நிற்பதைப் பார்த்து எனக்கு அதிர்ச்சி, ஆனந்தம் எல்லாம் என்று தான் சொல்லவேண்டும். பித்தவெடிப்புப் பாதங்களை உடைய மணியால் செருப்பில்லாமல் எங்குமே போக முடியாது. அப்படிப்பட்ட மணி கிட்டத்தட்ட 160 கி.மீ.

நடந்து திருப்பதிக்கு நானும் வருகிறேன் என்றால் அதிர்ச்சியாக இருக்காதா என்ன?

ஆனாலும், 'அனைத்தையும் அந்த கோவிந்தன் பார்த்துக் கொள்வான்' என்கிற நம்பிக்கை மணியிடம் இருப்பதை உறுதிபட என்னால் பார்க்க முடிந்தது. இந்த நம்பிக்கையுடைய துணையாக மணி கிடைத்தது ஒருஆனந்தமான விஷயம் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால், எது மணியை மாலாதாரணத்திற்கு தூண்டியது என்று தெரிய வேண்டாமா?

மணியின் வாயாலேயே அதற்கான பதில்... "நான் எனக்காக நடக்கலை. என் அம்மாவுக்காக...! அம்மாவோட உடல்நலம் தினம் ஒரு மிரட்டாவது என்னை மிரட்றது. அப்பாதான் போய் சேர்ந்துட்டார். அம்மாவும் இல்லைலன்னா அது என்ன வாழ்க்கை? அதுலேயும் நாங்க நன்னா இருந்தூண்டு அவளை ராஜபோகமா வெச்சுக்க முடியற நிலையில் பாழாப்போன வியாதி வந்து பயமுறுத்தறது.

வியாதிங்கறது பாவவினை இல்லை ஏதோ ஒரு கர்ம வினை. இது தீரத்தான் நடக்கவிரும்பறேன். என் பிரயாசைக்காக அந்த வெங்கடேசன் எங்கம்மாவுக்கு பூரண நலம்கற ஒரே ஒரு வரம் தந்தா போதும்..."

சாதாரணமாக யாரும் தங்கள் பிரார்த்தனைகளை வெளியில் சொல்ல மாட்டார்கள். ஆனாலும், மணிக்கும் எனக்கும் உள்ள இணக்கம் அதை சொல்ல வைத்தது.

மணி இதை சொல்லும்போது என்னுள்ளும் ஒரு கோரிக்கை இருக்கும் என்று நான் சொல்லாமலே வாசகர்களுக்கு தெரியும்.

அது என்ன என்பதை பின்னால் கூறுகிறேன். என்னதான் பிரார்த்தனை எனக்குள் இருந்தாலும் அவ்வப்

போது இந்த மாலாதாரணம். காவிவேட்டி யாத்திரை பற்றிய எண்ணங்கள் எனக்குள் என்னை சற்று கிச்சு கிச்சு மூட்டிக்கொண்டே இருந்தன.

'உழைப்போம் பிழைப்போம்' என்றில்லாதபடி மனிதனுக்கு எதற்கு தெய்வம்? அதற்கு எதற்கு கோவில்' குளங்கள்? அங்கெல்லாம் எதற்கு ஐதீகங்கள்? அதை வைத்து பிழைப்புகள்?-இப்படி ஆரம்பித்துவிடும்.

எனக்கு மட்டுமா? அனேக இன்றைய இளைஞர்கள் இதைப்போல விடை- தெரியாத ஆயிரக்கணக்கான கேள்விகளால் சூழப்பட்டுள்ளனர்.

பொட்டில் அடித்தமாதிரி ஒரு விடையைச்சொல்லி, தெளிவை உருவாக்கி வழிநடத்த இன்று யாருக்குமே தெரியவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நெற்றிக்கு திலகம் இடுவதில் ஆரம்பித்து, பூணூல் ஏன் தரிக்கிறோம், பஞ்சகச்சம் ஏன் உடுத்துகிறோம். கீழே விழுந்து ஏன் வணங்குகிறோம் என்று சாதாரண கேள்விகளுக்கு கூட பதில் சொல்ல இன்று பலருக்கு தெளிவில்லை.

'ஏதாவது அர்த்தம் இல்லாமலா இதெல்லாம் இருக்கும்?' என்று திரும்பிக் கேட்க மட்டும்தான் அவர்களுக்கு தெரிகிறது. அடுத்து தெரிந்து என்ன செய்யப் போகிறோம் என்கிற அசிரத்தை.

மொத்தத்தில் குருடன் யானையை தொட்டுப் பார்த்து அதன் உறுப்புகளை உணர்ந்தமாதிரி ஆன்மீகத்தை நாம் நம் விருப்பத்திற்கு உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

அதனாலேயே அவ்வப்போது ஆன்மீகம் தொடர்பான விஷயங்கள் ஒருபொழுது நம்பிக்கைக்கு உரிய

தாகவும், மறுபொழுது எதிர்ப்பதமாகவும் போய்விடுகிறது.

இப்படிப்பட்ட நிலையில் ஞானதீபம் போன்ற இதழ்கள் தோன்றி, சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் 'இந்து மதம் சொல்வது என்ன?' என்று சொல்ல ஆரம்பித்தது எனக்கெல்லாம் மிகுந்த புத்துணர்ச்சியைத் தந்தது.

அதிலும் காஞ்சி மாமுனிவரின் பதில்களும், விளக்கங்களும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

ஒருவகையில் இந்த யாத்திரையில் நான் ஈடுபட அந்த மாமுனியும், இன்று அவரைப் பின்தொடர்ந்து இந்து தர்மக்காவலராக விளங்கும் ஜெயேந்திர சரஸ்வதி அவர்களும், விஜயேந்திரர் அவர்களும் மிகப்பெரிய காரணங்கள்.

நடந்தே இந்த இன்டர்நெட் யுகத்திலும் இவர்கள் உலகின் பல பாகங்களுக்கு செல்வது நமக்கு தெரியும். சில இடங்களுக்கு வாகனத்தில் சென்றாலும் அது இன்றைய காலத்தில் தவிர்க்கமுடியாத விஷயம் என்பதும் தெரியும்.

இப்படி இந்த மாமுனிவர்களே நடந்து செல்லும் போது, நாம் என்ன பெரிய என்று ஒருகேள்வி துணைக்கு வந்து விட்டது.

என்னதான் எனது சுயவிருப்பு வெறுப்புக்காக நான் நடந்தாலும், அந்த பாலாஜியின் பேரருளைப் பெற்றிடும் ஆசை காரணமாக உடல் உள்ளம் இரண்டில் தற்காலிகமாவது ஒரு சுத்தத்தை ஏந்திப் பிடிக்கிறேன்.

நான் மட்டுமா?

என்னைப் போல ஆயிரம் ஆயிரம்பேர் இத்தனை பேர்களும் ஒருசேர கோவிந்தராம சங்கீர்த்தனத்துடன்

நடந்தால் நடக்கும் வழியெல்லாம் அந்த பேரருளின் அலைவீச்சு உருவாகிறதே.

இது கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. அதிலும், கலகமும், ரகளையும், ஜாதிச்சண்டையும், குண்டுவீச்சுக்களும் பெருகி ரத்தக்களமாய் மண்மாறி வரும் வேளையில், இப்படிப்பட்ட யாத்திரைகள் தானே மனிதனை மனிதனாக காட்டுகின்றன, அன்பு வளர்க்கின்றன!

எனது யாத்திரையும் துவங்குவதற்குமுன்பே இப்படி பல தரப்பட்ட சிந்தனைகளால் கேள்விகளால் பட்டைத் தீட்டப்பட்டு நின்றது.

புரட்டாசி மாதத்தில் இறுதிச் சனிக்கிழமையன்று மலையில் அந்த மாதவனை தரிசிக்கும்படியாக திட்டமிட்டிருந்தனர். அதற்கு முன்பாக ஒரு கல்யாண உற்சவ நிகழ்ச்சி நடைபெறும். அதில் பாதயாத்திரை அன்பர்கள் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்று நாங்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தோம்.

இந்த கல்யாண உற்சவம் பற்றி நான் கேள்விப்பட்ட போது ஒரு சாதாரண ஐதீகச்செயல்பாடாக இருக்கும் என்று மட்டுமே கருதியிருந்தேன். ஆனால். நேரில் பார்த்தபோது உச்சிமுதல் பாதம்வரை சிலிர்த்துப் போனது.

அடேயப்பா! என்ன ஒரு பிரமாண்டமான கூட்டம்...!.

# 3

திருமலை மண்ணில் கூட நான் அப்படி ஒரு கூட்டத்தைப் பார்த்ததில்லை. இது மிகையில்லை. உண்மை

சத்யம்! இந்தக் கட்டுரைத் தொடர் வாசிக்கும் அன்பர்கள் இதை இந்த வருடம் புரட்டாசியில் நடக்கும் கல்யாண உற்சவ சமயத்தில் பார்த்து அனுபவித்து அறியலாம்.

எத்தனை பிரம்மாண்டம்.

சுமாராக ஐம்பதாயிரம் பேர் இருக்கக் கூடும்.

பெரம்பூர் ரயில் கல்யாண மண்டபத்தில்தான் கல்யாண உற்சவம் நடக்கிறது. பெரம்பூரே திரண்டு வந்த மாதிரி அப்படி ஒரு கூட்டம்.

தெய்வத் திருமணமல்லவா?

பக்தர்கள் தங்களை பெண்வீடு மாப்பிள்ளை வீடு என்று வரித்துக் கொண்டு ஒரு ராஜகுமாரனின் திருமணத்திற்கு செல்வது போல சீர்வரிசையும் சிறப்புமாக வந்ததைப் பார்த்து அசந்து போனேன்.

கல்யாண மேடையின் முக்கால் பாகத்தை சீர் தட்டுக்கள் ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. மண்டபம் மொத்தத்தையும் வண்ணமயமான தோரணங்களாலும் விளக்குகளாலும் அலங்கரித்திருந்தனர்.

காய்கறித் தோரணம் இதில் ஸ்பெஷல்.

இது என்ன புது ஐதீகம்?

கேட்டபோது விடை கிடைத்தது.

ஒரு காய்கறி வியாபாரியின் கைங்கர்யம் அது.

பாலாஜி திருமண வைபவத்திற்கு ஒரு முறை ஒத்தாசிக்கப் போக வியாபாரம் பல மடங்கு பெருகியதாம், பாலாஜி கைவிடவில்லை. அந்த நன்றியை அவர்தான் எதில் உயர்ந்தாரோ அதன் மூலமாகவே காட்டி விட்டிருக்கிறார். காய்கறிக்காரருக்கே அவ்வளவு இருந்தால் பூக்கடைக்காரர்கள் இளைத்தவர்களா என்ன? லாரி கொள்ளாத பூக்களால் மேடையை மண்டபத்தை இந்திர சந்திர அந்தரலோகமாக்கி விட்டார்கள்.

இந்த லோகத்தில் தான் பெருமாளும் தாயாரும் ஜன சமுத்திரம் நடுவில், கோவிந்த நாம சங்கீர்த்தன முழக்கத்திற்கு இடையில் மாலை மாற்றி மாங்கல்ய தாரணமும் நிகழ்த்திக் கொள்கின்றனர்.

கண் கொள்ளாக் காட்சி!

பவித்ரமான அதி அற்புத காட்சி.

ஸ்லாக்யமான மந்திர பாராயணங்கள் மலர் தூவல் களுடன் நடக்கும் இந்த கல்யாண உற்சவத்தில் பாத யாத்திரை அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி எறும்பாய் இயங்கியாக வேண்டும். சின்ன தவறு வந்து விடக்கூடாது. அன்னதான பிரசாதம் நிகழ்ச்சியின் தலையான அம்சம்.

தெய்வத் திருமணத்திற்கு வந்து ஒருவர் கூட விருந் துண்ணாமல் தாம்பூலம் தரிக்காமல் போகக் கூடாது என்கிற தங்கள் ஆசையை எதிர் பார்ப்பை ஈடேற்றுவது தான் யாத்திரை நிகழ்த்தப் போகிற அன்பர்களின் கடமையாக இருக்கிறது.

சாதாரணமாக கூட்டம் பெருகும் இடத்தில் விதி கள் கட்டுப்பாடுகள் தளர்ந்து போய்விடும் விஷயங்கள் பலகீனுசாக இழுபடும்.

ஆனால் இங்கு ராணுவகட்டுப்பாட்டோடு நிகழ்ச்சி கள் நடக்கப் பார்த்து அசந்து போனேன்.

அனைத்துக்கும் காரணம் ஒரு நபர் என்றறிந்த போது அதை விட கூடுதலான ஆச்சர்யம் ஏற்பட்டது.

''அதோ இருக்காரே சேஷன்...அவர்தான் இந்த பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜத்தின் செகரட்டரி எங்களுக்கு அந்த பெருமாளுக்கு அடுத்து அவர் தான்...'' எனறு பர்சனல் ஆபீசர் ரமேஷ் கை காட்டிய சேஷன்

என்கிற அந்த மனிதர் பார்க்க ஒரு பக்கிரி சன்யாசி போலதான் இருக்கிறார், ஆனால் மிகப் பெரிய நிர்வாகியாக் கண்ணாலேயே கட்டளைகள் இட்டு வேலைகள் வாங்குகிறார்.

என் வாழ்வில் நான் பார்த்தரியாத ஒரு அற்புத கல்யாணம் அது நான் பெற்ற இன்பத்தை ஞானதீபம் அன்பர்களும் பெற இந்த ஆண்டு சமாஜம் நிகழ்த்தும் கல்யாண உற்சவத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

எப்படியோ கல்யாண உற்சவம் பார்த்ததில் மனதில் ஒரு குதூகலம். சலனமும் சஞ்சலமுமான என் பக்தியில் ஒரு பளிச்சென்ற புத்துணர்ச்சி.

அது கலையாமல் நின்று கொண்டிருக்கும்போது தான் ''எழுத்தாளரா?'' ;என்று கேட்டபடி என்னை நெருங்கினார் ஒரு அன்பர்.

ஆம் என்றேன்.

''பாதயாத்ரை வரப் போறாளா?''

''ஆமாம்...''

''ரொம்ப அற்புதமான அனுபவமா இருக்கும். சேஷன் அண்ணா தலைமைல போக கொடுத்து வெச்சுருக்கணும் வந்து பாருங்கோ தெரியும்...'' என்று பேச்சை வளர்த்தினார்.

''ஆமாம் எவ்வளவு பேர் வருவா?'' நானும் தொடர்ந்தேன்.

''இந்த தடவை இருநூற்றி பத்து பேர்னு நினைக்கறேன்.''

''அடேயப்பா...அவ்வளவு பேரா...?''

''இதுல பாதிபேருக்கு மேல இருபது வருஷமா நடந்து போய் வர்றவங்க...''

''இருபது வருஷமாவா?''

''பின்ன என்ன நினைச்சீங்க இந்த இருபது வருஷத்துல சேஷன் அண்ணா மட்டும் நாப்பது தடவை போய் வந்துருப்பார் ''

''சரி இந்த பாதயாத்ரை இத்தனை வருஷம் நடத்துருச்சே...இதனால யாருக்கெல்லாம் என்னென்ன நன்மைகள் நடந்துருக்கு?''

நடப்பதால் என்ன பிரயோஜனம் என்பதைத்தான் நான் அப்படி சாதுர்யமாக கேட்டேன்.

''என்னவோ... எத்தனை மிராகிள்ஸ் தெரியுமா?'' அவர் திருப்பினார் என்னை.

''அதானே எனக்கு வேணும்?''

''உங்களுக்கு தெரியணும் தெரிஞ்சா உங்க எழுத்து மூலமா அது பலரை போய்ச் சேரும் என் பாலாஜி பெருமையும் விஸ்காரமாகும்'' என்று சொல்லி விட்டு கூட்டத்தில் ஒடிசலாக ஒடியாடிக் கொண்டிருந்த ஒருவரை சுட்டிக்காட்டி ''இவர் யார் தெரியுமா?'' என்று கேட்டார்.

''யார்?''

''அவர் பேர் நாகராஜன் இதய நோயாளியா ஒரு துவாரத்தோட இந்த சமாஜத்துக்கு ஒருநாள் வந்தவர். தான் சாகப் போறது உறுதின்னு தெரிஞ்சதாலேயோ என்னவோ போறதுக்குள்ள சில நல்ல காரியமாவது பண்ணுவோம்னு இந்த திருக்கல்யாணத்துல கலந்துண்டார்.

அன்னதானத்துல அன்னம் பரிமாறினார் எச்சில் இலை எடுத்தார், அப்படியே ஞாயிற்றுக்கிழமை சமாஜத்துல நடக்கும் பஜனைகள்ளயும் கலந்துண்டார்.

மெய் உருகி அழுது பாட்டு பாடினார். வலி இல்லாம என்னை உன் திருவடி சேர்த்துக்கோன்னார் நாங்கள்ளாமும் ரொம்ப வருத்தப்பட்டோம்.

ஒரு ஹார்ட் பேஷண்ட் இப்படி ஓடியாடக் கூடாதுன்னு சொன்னோம். அவர் கேக்கலை ஆனா அதிசயம் பாருங்க, ஒரு அற்ப முயற்சியா ஹார்ட் சர்ஜரிக்காக அவர் அட்மிட்டானப்போ டெஸ்ட்டுல எந்த கோளாறும் தெரியலை.

டாக்டர்கள் இவருக்கு ஒரு குறையும் இல்லையே எதுக்கு ஆபரேஷன்னு திருப்பி கேட்டிருக்கா.

அது எப்படி...? மூணு மாசம் முந்தி பார்த்த ஒரு குறை எந்த மாத்திரை மருந்தும் இல்லாம சரியாகும்? அவருக்கு புரிஞ்சு போச்சு. நேரா சன்னதிக்கு வந்தார். நெடுஞ்சாண் கிடையா கீழே விழுந்தார். இன்றைய தினம் வரை அவர் சர்வீஸ் தொடர்ந்துண்டு இருக்கு. அவருக்கு இது மறு ஜென்மம்..."

அன்பர் சொன்னதை தொடர்ந்து அவரை நான் கவனித்தேன். பாலாஜி நாம ஸ்மரணைபோடு மெய் உருகபாடிக் கொண்டிருந்தார்.

அன்பர் தொடர்ந்தார்...

"இதைவிட ஒரு பயங்கர அனுபவம் இருக்கு" என்றவர்

"நீங்க பேயை பார்த்திருக்கீங்களா" என்று கேட்டார். எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

"நாங்க பேயை பார்த்ததும் தப்பிச்சதுமான ஒரு அனுபவம் இருக்கே" என்றார்,

"சொல்லுங்கள்..." என்று கூட்டத்தில் இருந்து விலகி அவர் சொல்லப் போவதை கேட்க ஆயத்தமானேன்...

# 4

**பா**லாஜியின் கல்யாண உற்சவம் கோலாகலமாக ஒரு பக்கம் நடந்தபடி இருக்கிறது. மறுபுறம் எனது ரசனைக்கும் தேவைக்கும் தீனி போட்டபடி இருக்கிறார் அன்பர். நாகராஜன் எனும் அன்பரின் இதய நோய் நிவாரணம் பற்றி மெய்சிலிர்க்கச் சொன்னவர், சம்பந்தமே இல்லாமல் பேயைப் பற்றிச் சொல்லவும் என் சுவாரஸ்யம் பலமடங்கு பெருகிவிட்டது.

''என்ன சார் புதிர் போட்றீங்க...பாலாஜி தரிசனம் வேண்டி விரும்பி நடக்கும் பாதயாத்திரை அன்பர்களுக்கும் பேய்களுக்கும் என்ன சம்பந்தம்?''-என்று ஒருமாதிரி சீண்டிவிட்டேன். அவர் கொட்டிக் கலக்கவே ஆரம்பித்து விட்டார்.

''இருக்குன்னா ...நிறைய இருக்கு! 1977-ம் வருஷத்து பாதயாத்திரைல நடந்த சம்பவம் இது...எப்பவும் திருப்பதின்னா திருத்தணி ரூட்தான் எல்லாருக்கும் ஞாபகம் வரும். நாங்களும் அந்த ரூட்லதான் போனோம். மொத்தமா 48 பேர்னு நினைக்கிறேன்.

தெளிவில்லாத பாதை! மேடுபள்ளமும் ஆனாலும் அதிகம். பாதி பேருக்கு மேல பாதி வழியிலேயே போதுண்டா சாமின்னு புலம்ப ஆரம்பிச்சுட்டா.

இப்பமாதிரி வழி நெடுக அப்ப உபசரிப்பு கிடையாது. பாத யாத்திரைங்கறது ஒரு பயங்கர விஷயமா, அனுபவமா நினைச்ச காலகட்டம் அதுன்னும் சொல்லலாம்.

பஸ்சும், ரயிலும் இருக்கச்சே எதுக்கு இப்படி வருத்திக்கணும்னு அசால்ட்டா சொன்னவாளும் உண்டு.

மொத்தத்தூல ஊக்கம் உற்சாகம் குறைவு. நடக்கறவா மனசுக்குள்ள அவன் மேலான அசைக்கமுடியாத நம்பிக்கை ஒண்ணுதான் துணை...இந்த நம்பிக்கையோட நடக்கச்சேதான் ராத்திரி ஒரு இடத்தூல தங்கும்படி நேர்ந்தது.

சரியான காட்டுப்பகுதின்னு நினைக்கறேன். எட்டுன தூரத்துக்கு வெளிச்சமில்லை. எங்ககிட்டேயும் சிலர் கிட்டதான் டார்ச் லைட்ஸ்! அதுவும் செல் தீர்ந்துபோய் அழுது வடிஞ்சுது.

எது எப்படி இருந்தா என்னன்னு கால்வலி தாளாம படுத்துட்டோம். ஆளுக்கு ஒரு மூலையில் துண்டை விரிச்சு...எனக்கு திடீர்னு இயற்கை உபாதை ஏற்பட்டது. சிறுநீர் கழிக்கலாம்னு கொஞ்சம் எழுந்து டார்ச் லைட்டை போட்டுண்டு நடந்தேன். கொஞ்ச தூரம் போயிருப்பேன். யாரோ அழற மாதிரி ஒரு சப்தம்.

நம்ம கூட வந்தவர்தான் யாரோ வலிதாங்காம அழறாளோன்னு நினைச்சுண்டு சிறுநீர் கழிச்சுட்டு திரும்பும்போது அழுகை சப்தம் பலமா கேட்டது.

யாரது அழறதுன்னு கேட்டதுக்கு பதில் இல்லை. சரி, வெட்கப்பட்டுண்டு அழறத நிறுத்திட்டான்னு நினைச்சு காலெடுத்தா திரும்ப அழற சத்தம். கூடவே சிரிக்கற சப்தமும் கேட்டது. எனக்கு ஒரு மாதிரி ஆயிடுத்து. அப்ப கொஞ்சம் தள்ளி கன்னங்கரேல்னு உருண்டையா ஒரு உருவம் தெரிஞ்சது. இருட்டுல கரி இருட்டாத் தெரிஞ்ச உருவத்தோட கண்ணிரண்டும் தீப்பிழம்பா இருந்தது.

''எனக்கு தூக்கி வாரிப்போட 'கோவிந்தா'ன்னு பலமா சொல்லிண்டு ஓட ஆரம்பிச்சேன். படுத்துண்டு

இருக்கற இடத்துக்கு வந்தா யாரையும் காணோம். டார்ச்சை அடிச்சு பார்த்தா ஆளாளுக்கு கிளம்பி போயிண்டிருக்கா.''

திடீர்னு என் தோள் மேல ஒரு கை. திரும்பினா கம்பீரமா ஒரு மனுஷன்!

''இங்க படுக்காதீங்க...இது தப்பான இடம்.கிளம்புங்கன்னு'' சொல்றான் அவன்.

''தப்பான இடம்னா?''

''கிட்டதட்ட சுடுகாடு மாதிரி. உம்...உம்...கிளம்புங்க யாத்திரைதாரர்களுக்கு உடல்தூய்மை ரொம்ப முக்கியம். போற வழில ஒரு குளம் வரும் அதுல குளிச்சிடுங்க. குளிச்சிட்டு நடங்க...''-அவன் சொல்லச் சொல்ல எனக்கு ஆச்சரியம். இந்த ராத்திரியில. இவன் எங்க இருந்து வந்தான். நாங்க யாத்திரை போறவாங்கறது அவனுக்கு எப்படித் தெரியும், இப்படி பல கேள்விகள் எனக்கு. நீ யாருப்பான்னு கேட்க திரும்பினா ஆளக் காணோம்... இப்ப நினைச்சாலும் சிலிர்க்கறது.

''அது யாருன்னு நினைச்சீங்க...?''

''பரமசிவனா?''

''வேற யார் வருவா...அதன் பிறகு அந்த பக்கமா நாங்க யாத்திரையே போகலை. 78ல் இருந்து ஊத்துக் கோட்டை - நாகலாபுரம் வழிதான்...சுருட்டப்பள்ளின்னு ஊத்துக்கோட்டை தாண்டி ஒரு ஊர். எங்கேயும் சிவனை உருவத்தோட பார்க்கமுடியாது. அதுலையும் படுத்துண்டு இருக்கற சிவனை பார்க்கவே முடியாது.

அந்த ஊர் தரிசனத்துல அந்த சிவதரிசனம் ஒரு ஸ்பெஷல் தரிசனம்..ஆலகாலம் உண்ட சிவன் கண்டத்துல விஷத்தைத் தாங்கி படுத்துண்டு இருக்கிற இடம்.

யாத்திரைதாரர்கள் மனசுலயும் விஷம் இருக்குமில்லையா...அதை அந்த சிவன் வாங்கிக்கணும்னுதான் பாலாஜி ரூட்டை மாத்தி விட்டானோ என்னவோ...?''

எனக்கு அன்பரின் யூகம் சிரிப்பை தந்தது. பேயிடம் இருந்து காப்பாற்றியவன் பாலாஜி. சரி! பேய்களை கட்டிப் போடாமல் இதென்ன டைரக்ஷனை மாற்றி நடந்து வரும்படி செய்வது...தெய்வமும் பேய்க்கு அஞ்சி விட்டதா? இது தெய்வத்துக்கு அழகா... இதென்ன மிரட்டல்...? என் புத்தி மிக மலிவாக கேள்வி கேட்டது.

தற்செயல் நடவடிக்கைகளை புத்தி எப்பொழுதும் இப்படித்தான் ஜோட்டுக்கட்டிக் கொள்ளும். எனவே இதுவும் அந்த ரகம்தான் என்று நினைத்துக் கொண்டேன். அதற்கு கன்னத்தில் அறைகிற மாதிரி பதில் தந்தார் ஒரு பெரியவர்.

''என்ன எழுத்தாளரே...பேய் பார்த்த சம்பவம் ஏதோ பிரமை மாதிரி தோண்றதா உமக்கு...?''— கேட்டார்.

''கிட்டதட்ட அப்படித்தான் நினைக்கறேன். பேயாவது பிசாசாவது...எனக்கு நம்பிக்கை இல்லை. மீறி இருக்குன்னா அந்த பாலாஜி கண்ணுல காட்டாமலே உங்களை நடத்திக் கூட்டிண்டு போயிருக்கணும். காட்டி அப்புறமா காப்பாத்த ஓடி வந்து, இந்த பக்கம் இனி வராதீங்கேன்னு சொல்றதெல்லாம் மனுஷ செயல்மாதிரி இருக்கு. தெய்வச் செயல் மாதிரி இல்லை''-என் கருத்தை கேட்டு சிரிக்கும் அவர் நிதானமாகச் சொல்கிறார்

''என் அப்பா ஒரு பாலாஜி பக்தர் அவருக்கு நான் ரொம்ப லேட் இஷ்யூ...கிட்டதட்ட அவரோட நாப்பதாவது வயசுல பிறந்தேன். நான் பிறந்த உடனே எனக்கு திவசம் பண்ண ஒரு பிள்ளை பிறந்துட்டான் எனக்கு இனி கவலையில்லைன்னு கூத்தாடினாராம்.

அப்படிப்பட்டவர் இறந்த பிறகு அவருக்கான தெவசம் தர்ப்பணம் எதையுமே நான் செய்யலே. ஏன்னா இறந்த உயிர் எங்க போறது, என்ன ஆறதுன்னு தெரியாம வெட்டிக் காரியம் பண்ணமாட்டேன்னு சொல்லிண்டு இருந்த நான் ஒரு நிர்பந்தத்தால சும்மா ஒரு ஜாலி ட்ரிப்பா யாத்திரைல கலந்தூண்டேன்.

அப்படி கலந்துண்ட ட்ரிப்புலதான் என் கண்ணால அந்த பிசாசைப் பார்த்தேன். உயிரோட மறுபக்கம் எப்படிப்பட்டதுன்னும் தெரிஞ்சுண்டேன். அந்த நரக நிமிஷங்களை நீங்க அனுபவிச்சா தான் புரிஞ்சுக்கமுடியும். அன்னியில இருந்து இன்னிவரை ஒழுங்கா தெவசம் தர்ப்பணம் பண்றேன். பித்ரு கடன் வைக்கலை. பாலாஜி பிசாசை காட்டினது எனக்காக... என் அப்பாவோ பக்திக்காக...பாதை மாத்தி விட்டதுலையும் ஆயிரம் அர்த்தம் இருக்கு. இப்போ போற பாதைலதான் காக்கவாக்கம்கிற கிராமம் இருக்கு. புதுப்பெரியவர் விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஊர். அவங்க வீட்ல எல்லோருக்கும் ஒருவேளை போஜனம். அப்படியே ஒரு அகண்ட நாம பஜனை

அப்றமா சுருட்டப்பள்ளி... அப்றமா நாகலாபுரத்துல வேதம் காத்த நாராயண தரிசனம்னு வரிசையா அர்த்த பூர்வமான விஷயங்கள் நிறைய...

எழுத்தாளரே...பாலாஜி சித்தம் பத்தி நம்மால ஒரு சின்ன அணுவளவு கூட புரிஞ்சுக்க முடியாது.

குதர்க்கமா கேள்வி கேட்காதேள்.

பாலாஜின்னா பெரும் பொருள். பெரும் பொருள்னா பாலாஜி...''

—பெரியவர் என்னை பிடி பிடி என்று பிடித்து விட்டார். எனக்கும் மனநிறைவு. ஒரு சம்பவம்

எத்தனையோ மனக்கதவுகளை திறந்து விடுவதை புரிந்து கொண்டேன். என்னுள் திறந்து கொண்ட கதவுகள் உட்பட...

நடுவில் திருக்கல்யாணம் சடங்குகள் ஒரு முடிவுக்கு வருகின்றன. அன்னதானமும், பிரசாத வினியோகமும் நடந்து முடிகிறது. தற்காலிகமாக மதுரை கிளம்ப வேண்டிய முஸ்திபு என்னிடம். திரு.சேஷனிடம் சொல்லிக் கொண்டு கிளம்பத் தயாரான போது சேஷன் நறுக்கென்று கேட்டார்.

''திருக்கல்யாண வைபவம் எப்படி இருந்தது?''

''அமர்க்களம்''

''இப்படி ஒரு வார்த்தைல சொன்னா எப்படி. சமாஜத்தோட நோக்கம் அமர்க்களம் பண்றது மட்டுமல்ல...''

''அப்படின்னா?''

''அமெரிக்கையா தியானம் பண்றதும்தான். அதுக்காக ஆனந்த நிலையம்னு ஒரு கட்டடம் கட்டிண்டு வரோம். பிச்சை எடுத்து தான் கட்டிண்டு வரோம். அங்க தியானம் பழகறது மட்டும் நோக்கமில்லை. ஏழைகளுக்கு அன்னதானம், ஏழைப் பெண்களுக்கு இலவச திருமணம், மாணவர்களுக்கு புக்பேங்குன்னு நிறைய சமூக நலத் திட்டம் இருக்கு.

இந்த அமர்க்களத்துக்கு கூடின கூட்டம் கொஞ்சம் அதுக்கு உதவணும்!

சேஷன் எங்கே வருகிறார் என்பது எனக்குப் புரிந்தது.

''நான் வேணா டொனேஷன் தரேன். மத்தவாகிட்ட கேக்க சொல்லாதேள். தெய்வீக காரியம் டொனேஷன்கற

விஷயத்துக்கு தற்சமயம் நாட்டுல சரியான மதிப்பு மரியாதை கிடையாது. அந்த போர்வைல தவறுகளும் நடக்கறதால'' என்று இழுத்தேன்.

''நீங்க தாங்கோ. அது போறும். பாலாஜிக்கு, தெரியும், யார்கிட்ட வாங்கிக்கணும்னு. வெறும் பக்தியை விட சமூக சேவை உடைய பக்திதான் இன்னிக்கு நாட்டுக்கு தேவை. அதுக்குதான் இந்த முயற்சி நாகரீக காலமில்லியா. நாலாவிதமான சிந்தனைகள் வரத்தான் செய்யும்'' என்றார்.

அழுத்தம் திருத்தமான கருத்து. மிகப்பிடித்துப் போனது. மனதார உதவினேன்.

அமெரிக்காவில் உள்ள என் சித்தப்பாவிடம் சொன்னதில், அவரும் மனதார உதவினார்.

இப்படி பல்லோரின் உதவியால், பெரம்பூர் படேல் ரோடில் அற்புதமாய் கட்டிடம் உருவாகி, ஜூன் 7 ஆம் தேதி நல்லி குப்புசாமி செட்டி, செங்கை சிவம் எம்.எல்.ஏ மயிலை குருஜி, டாக்டர் ராஜேஸ்வரி ஜெயராமன் போன்ற ஆன்மிக அன்பர்களால் திறந்து வைக்கப்பட்டு, அதன் சமூகநலப் பணிகள் ஆரம்பமாகி விட்டது

கட்டிடம் இன்னும் முழுமை பெற்று விட்டதாகச் சொல்ல முடியாது மாணவர்களின் புத்தக வங்கிக்கும் பாடப் புத்தகங்கள் தேவைப்படுகிறது.

ஆஸ்திக அன்பர்கள் இந்த கட்டுரை வாசிக்கையில் உதவத் திருவுள்ளம் கொண்டால் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா சாரிடபிள் ட்ரஸ்ட், ஆனந்த நிலையம், 81-படேல் ரோடு பெரம்பூர், சென்னை-11.

என்கிற முகவரிக்கு அனுப்பி பாலாஜி பேரருள் பெற வேண்டுகிறேன். ஒவ்வொரு நயாபைசாவும் பொறுப்

புடன் பெறப்பட்டு செலவு செய்யப் படுகிறது. மற்ற பக்த அமைப்புகள் இது போல சமூக பார்வை கொள்ள வேண்டியது அவசியம் என உணர்த்தும் செயல்பாடு இது.

மிக மகிழ்வான இத்தருணத்தில் ஆஸ்திக அன்பர்களுக்கு ஒரு பாலாஜி அன்பர் ஒரு தகவலைச் சொன்னார்.

"எத்தனை துயரம் இருந்தாலும் சனிக்கிழமை அதிகாலை நெய் விளக்கேற்றி வெங்கடேச சுப்ரபாதம் சொல்லி முடித்து ஒரு வாழைப் பழத்துடன் வெளியே வந்து பசு ஒன்றிற்கு அதை தீனியாக தந்து அதன் பின்பாகம் தொட்டு வணங்க அந்த துயரம் அன்றே நீங்கும் வழி வகையை காணலாம். இதை நான் அனுபவ பூர்வமாக உணருகிறேன்" என்றார்.

மிக சூட்சுமமான ஒருவிஷயம் இது. அன்பர்கள் துக்க நிவாரண பெற்றிட இச்செயல் வழி செய்யட்டும்.

அவரே இதன் நிமித்தம் தனக்கு நேரிட்ட ஒரு அனுபவத்தையும் கூறினார்...

# 5

அந்த அனுபவம் எனக்கு நிஜமாலுமே மெய் சிலிர்ப்பை உண்டாக்கியது. இந்த உலகத்தில்தான் எத்தனை எத்தனை புதிர்கள்? என்கின்ற கேள்வியையும் எழுப்பியது.

அன்பரின் தாயார் மிகுந்த உடல் நலக்குறைபாட்டில் இருந்திருக்கிறார். எவ்வளவோ மருத்துவம் செய்தும் பலனில்லை. அந்த சமயம் பார்த்து ஜாதகம் பார்க்கும் ஜோதிடர் ஒருவர் கட்டங்களை கணிதப்படுத்திப்

பார்த்துவிட்டு 'தற்சமயம் மாரகதிசை நடக்கிறது. மரணம் நிச்சயம்—மருத்துவம் செய்வது வீண் செலவு'— என்று கூறி விட அன்பர் மிகவும் குழம்பிப் போய் விட்டார்.

அந்த ஜோதிடர் சொன்னால் சொன்னதுதான். அத்தனை துல்லிய கணிப்பு அவருடையதாம். எனவே நண்பர் குழம்பியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தாய்க்கு செலவு செய்வதா? இல்லை செய்யாமல் விடுவதா? செய்யாமல் விட்டு அவர் மரணிக்க நேர்ந்தால், நீ மருத்துவம் பார்க்க யோசித்ததால், அதனால்தான் அவளுக்கு மரணம் இத்தனை சீக்கிரம் வந்துவிட்டது என்றுதானே உலகம் சொல்லும்?

உலகம் என்ன சொல்வது? உள்ளம் சொல்லுமே... சரி போய்த் தொலைகிறது என்று செலவழிக்கலாம் என்றாலோ கையில் வசதி இல்லை. அவருக்கு மிகக் குழப்பமாகிவிட்டது. இந்த நிலையில்தான் அவர் வீட்டுத் திண்ணையில் ஒரு பிச்சைக்கார சன்யாசி வந்து முடங்கியிருக்கிறார். போகட்டும் என்று அன்பரும் விட்டு விட்டார்

இறுதியில் வீட்டுக்குள் நடக்கும் இந்த குழப்பமும் அது தொடர்பான பேச்சுக்களும் அவருக்கு எப்படி எட்டியதோ, அன்பரை ஒருநாள் அழைத்து கேட்டிருக்கிறார்.

''என்னப்பா வீட்ல குழப்பமா?''

''ஆமாம்...கேட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''சும்மா சொல்லேன்...உன் மனபாரம்தான் கொஞ்சம் குறையட்டுமே...''

...அவர் கேட்கும் விதமும் தொனியும் அன்பரை நெகிழ்த்தவே. சரி என்று சொல்லத் தொடங்கினார். அனைத்தையும் கேட்டவர் எங்கே அந்த ஜாதகத்தை கொஞ்சம் கொண்டுவந்து காட்டேன் என்று சொல்ல அவரும் காட்டினார்.

அதைப் பார்த்தவர் ''விதிப்படி உன் தாய்க்கு ஆயுள் முடிந்துவிட்டது. இருந்தாலும் தர்மபலன் தாங்கிக் கொண்டிருக்கிறது!''—என்று கூற தர்மபலன் பற்றி ஒரு சிற்றுரையே அவர் நிகழ்த்தக் கேட்டிருக்கிறார் அன்பர்.

''அது எப்படி முடிந்த விதியை தர்மம் தாங்க முடியும்?''

''தர்மத்தால் மட்டுதான் தாங்கமுடியும். வேறு எதாலும் தாங்க முடியாது!''

''தர்மம் என்பது பிறருக்கு கொடுத்து வாழ்வதா இல்லை அறநெறிப்படி வாழ்வதா?''

''இரண்டும்தான்...''

''அப்படியானால் இரண்டும் கொண்டவன் நீண்ட காலம் வாழ்வானா? நம்ப முடியலையே?''

''நம்ப முடியலையா? என் கதையை கேள்.''

''என்னவோ தெரியல...திடீர்னு ஒரு அசூயை.பணம் காசுன்னு நாம சம்பாதிக்கறதுலையும் செலவழிக்கறது லையுமே காலத்தை வீணடிச்சுகிட்டு இருக்கோம். இது சரியான பாதை இல்லை. எங்க இருந்து வந்து அம்மா வயத்துக்குள்ள புகுந்தோம்கறது முதலே தெரிஞ்சுக் கணும்.

எங்க போகப் போறோம்கறதையும் தெரிஞ்சுக் கணும். அதான் சரியான முயற்சி. அதாவது பூர்வ

ஜென்மம், போகப்போற இடம் இதை தெரிஞ்சுக் கணும்னு தோணிச்சு.

பசி தாகம்லாம் எனக்கு அடங்கி ரொம்ப நாளாச்சு. வேறு எந்த ஆசைகளும் கூட கிடையாது. உன்லால நம்ப முடியாது. ஆனா இப்படி ஒரு மனநிலைல நான் தள்ளிப் புட்டேனா இல்ல தானா தோணினதா தெரியல.

எனவே மெல்ல ஆன்மீக வயப்பட்டேன்.

அதிகம் கோயிலுக்கு போக ஆரம்பிச்சேன்.

ஒருநாள் ஒரு ஜோதிச்சுடர் ஒண்ணு ஆகாசத்துல நெடுநேரம் என் கண்ணுக்கு மட்டுமே தெரிஞ்சது. அதன் பிறகு சுத்தமா பாதை மாறிப்போச்சு. கால் போன போக்குல போறேன். என் குடும்பத்துகிட்ட கூட என்னை தேட வேண்டாம்னு சொல்லிட்டேன். எனக்கு எப்ப வாவது பசிக்கும். அப்படி பசிச்சா அரைமணி நேரத்துல எனக்கு உணவும் கிடைச்சுடும். யாராவது கொண்டு வந்து தந்துடுவாங்க!

தங்கி உறங்கணும்னு தோணும்போது தன்னால திண்ணை தட்டுப்படும். தியானத்துல இருக்கும்போது பல குரல்கள் காதுல ஒலிக்கும். நானும் பல கேள்விகள் கேட்பேன். பதில் கிடைக்கும்.

"ரொம்ப ஆச்சரியமாயிருக்கு."

"இன்னும் இருக்கு கேள்..."

சனிக்கிழமை தோறும் காலை சூரியன் உதிக்குமுன் குளித்து சுப்ரபாதம் சொல் அல்லது கேள். பின் அகத்திக் கீரை ஒரு கட்டு, சில வாழைப் பழங்கள் இவைகளோடு ஒரு பசித்த பசுவிற்கு உன் வலக் கையால் உணவிடு. அதற்குப் பின் அது தின்று கொண்டிருக்கும் போதே அந்த பசுவைச் சுற்றிவா. சுற்றி வந்து பிருஷ்ட பாகத்தை தொட்டு வணங்கு. பின் கீழே விழுந்தும் வணங்கு. இந்த

நிலையில் பசு கோமியம் கழித்தால் அதை எடுத்து தலையில் புரோட்சித்துக் கொள்.

அதன்பின் உன் வேலையைப் பார். இதை 48 சனிக்கிழமை செய்து வா, நீ பெரிய செல்வந்தன் ஆவாய்—நோய் நீங்கப் பெறுவாய்-தர்மத்தின் புதல்வனாகவும் இருக்கக் காண்பாய்.

இந்த வணக்கத்தை, வழி பாட்டை காசுபணம் சேர வேண்டும் என்கிற சுயநலத்தோடு செய்யாமல் நித்ய கடமையாக செய்தால் அது மேலும் நலங்களைத் தரும்'' என்று கூறி இருக்கிறார்.

சொல்பவரோ ஒரு பக்கிரி சன்யாசி. அடுத்த வேளை சோற்றுக்கு, அடுத்தவரை நாட வேண்டிய நிலையில் உள்ளவர். இவர் செல்வந்தன் ஆவதற்கும் நோய் நீங்குவதற்கும் வழி சொல்கிறார். அன்பரிடம் மீண்டும் குழப்பம். தடுமாற்றம்.

''என்ன தம்பி... ஒரு பக்கிரி சொல்றதை எப்படி கேக்கறதுன்னு பாக்கறியா? நான் பக்கிரி இல்லப்பா ஒரு கோடீஸ்வரன்!'' என்று அவர் அடுத்த குண்டைத் தூக்கிப் போட அன்பரின் தடுமாற்றத்தில் இப்பொழுது புயலே வீசத் தொடங்கிவிட்டது.

''சத்யமா இதெல்லாம் பொய் இல்லை ஆனா காசை மட்டும் கையால தொடமாட்டேன். எனக்கு தேவையே இல்லை. உண்மை மட்டும் பேசுவேன். உள்ளதை சொல்வேன். போய்கிட்டே இருப்பேன். உன் சிக்கலுக்கு காரணம் கிரகங்கள்தான்.

அந்த கிரகங்கள் நான் சொன்ன வழி பாட்டை நீ செய்தா மகிழ்வார்கள். அதன் மூலம் முப்பத்து முக்கோடி தேவர்கள் வாழ்ற பசுவோட பசியாறுவதால அதன் பசி நெருப்பு அடங்கி அது உனக்கு தேவையான அருள் கதிரா மாறி உன்னை வந்து சேரும்.

தாகத்ல தவிக்கற ஒருவன் தங்கம் வைரத்தை விழுங்கினா தாகம் அடங்காது. தண்ணி குடிச்சாதான் அடங்கும். அது மாதிரி வினைகளை முறிக்கற பரிகாரங்கள் செய்து, அதன் கதிர்கள் நமக்கு சேரும்போது நமது வினை மாறுது. இதுதான் சூட்சுமம்.

ஏற்கனவே உன் தாய் பல பேருக்கு சும்மா சோறு போட்டிருக்கா. அதுல பல நல்ல ஆத்மாக்கள் பசி நெருப்பு அடங்கினதால அதன் அருள் கதிர் அவள் கணக்குல சேர்ந்து அவளை தாங்கிப் பிடிச்சுகிட்டிருக்கு. அவளுக்கும் வாழணும்னு ஆசை இருக்கறதால...இல்லேன்னா மோட்சப் பாதையை காமிச்சுருக்கும் இந்த கதிர்கள்.

இப்ப பசுவோட பசியை அடக்கு. அதையும் பாலாஜியோட வேதமந்திர ஒலி அலைகளை உச்சரித்த நிலையில் அடக்கு. உனக்கு க்ஷேமம் நிச்சயம். சனியின் கோபமும் குறையும்.

உலகத்துல ஆலயங்கள் இருப்பது இப்படி மனித குறைபாடுகளை தீர்க்கத்தான். செய்! சௌக்கியமா இரு.''

அந்த பக்கிரி சன்யாசி சொன்ன விதத்தில் நல்ல வாத்சல்யம். அன்பருக்கும் நல்ல நேரம் உரிய செய்தி உரிய நபரால் வீட்டுத் திண்ணையில் வைத்தே சொல்லப் பட்டிருக்கிறது.

'சரி, செய்துதான் பார்ப்போமே. காசு பணமா. ஒரு முயற்சி தானே...?' என்று செய்த அன்பர் இன்று லட்சாதிபதி. அதன்பின் எழுந்து அமர்ந்து இன்று வரை திடகாத்திரமாகவும் வாழும் அவர். தாய் கூட கல்யாண உற்சவத்திற்கு வந்திருக்கும் பல ஆயிரம் பேரில் ஒருவர்.

அவரையும் நண்பர் கை நீட்டிக் காட்டுகிறார்.

இது நான் கேட்ட மூன்றாவது கதை. நான்காவதை சொல்லுமுன் யாத்திரை அனுபவம் சிலவற்றைசொல்வது உசிதமாக இருக்கும் என கருதுகிறேன்.

இருநூற்றுச் சொச்சம் பேர் மாலாதாரணம் செய்து கூடிய வரையில் பவித்ரமாய் தேகசுத்தியோடு நாற்பது நாள்வரை விரதம் இருந்து யாத்திரை தொடங்கும் அன்று நடந்த நாமாவளி பஜனையிலும் கலந்து கொண்டோம்.

அனைவர்க்கும் ஒன்று போல உடை காவி வேட்டி துண்டு. ஒரு ஜோல்னாபை! ஒரே மாதிரி பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜம் பெயரில் பாலாஜி திரு உருவ படத்தோடு அன்பர்கள் காணிக்கையாக தந்த பை அது.

அத்துடன் உலர்ந்த திராட்சை பேரிச்சை முந்திரி என்று செறிந்த கெட்டுப் போகாத பழவகைகள். ஒரு டப்பாவில் அடைக்கப்பட்டு மஞ்சள் துணியால் சுற்றப் பட்டு தரப்படுகிறது.

இது, திருமலையில் தரிசனத்தின் போது சன்னதியில் நாமே திறந்து காட்டி நெய்வேத்யம் செய்து வீட்டுக்குக் கொண்டு செல்ல...!

(பலநூறு மைல் சுமந்து செல்லும் அருட்பிரசாதம் அங்கே பாலாஜியின் திருப்பார்வையும் பட்டு நிஜமாலுமே கல்பமூலிகைக்கு சமமாக மாறி விடுகிறது.)

அளவாக உடுத்திக்கொள்ள ஒரேஒரு மாற்றுத்துணி. அதிக சுமை கூடாது! சுமை இருந்தால் அது நமது தோள் தோலை வழட்டி எடுத்துவிடும் என்பதால். (புரியாமல் புத்தகம் பேண்ட் சட்டை மருந்து டப்பா என்று ஒரு பெரிய மூட்டையோடு போன நான் பைச்சுமையாலேயே இறுதியில் நடக்கும் ஒரு பாதசேவகன் ஆயினேன்.)

இத்தனையோடு கிளம்பும் அன்பர் படை தெய்வீக திருநாமத்தை சொன்னபடிரெட் ஹில்ஸ் வழியாகஊத்துக் கோட்டை நோக்கி நடையிடுகிறது. எனக்கு ஒரு கட்டத்துக்கு மேல் அந்த திருநாம உச்சரிப்பு எதனாலோ அலுப்பைத்தர ஊர்கதை பேசியபடி நண்பன் மணியுடன் நடக்கத் தொடங்கினேன்.

38 வருட வாழ்க்கையில் என் கால்கள் தொடர்ந்து முதல் முறையாக நடக்கப் போகிறது. உடம்பின் உறுப்புகள் ஒத்துழைக்க வேண்டும். வழியில் மரநிழல் தான் ஒதுங்க இடம். புல்தரைதான் மெத்தை போடப் பட்ட கட்டில்! கிணற்றில் இறைக்கப்படும் தண்ணீர்தான் தாகம் தீர்க்கப் போகிறது. புது அனுபவம். புது சூழ் நிலைகள் அவ்வளவும் தெய்வத்திருப்பேரருளால் எதிர் கொள்ளப்பட உள்ளன.

பாலாஜி பேரருள் கிட்டுகிறதோ இல்லையோ உடம் பின் ஆரோக்கியம் பற்றி தெரிந்து கொள்ள இந்த யாத்திரை பயன்படும் என்கிறார் ஒருவர்.

இந்த யாத்திரைக்கு பிறகு தூரம் நமக்கு ஒரு பெரிய விஷயமாக இருக்காது. கூப்பிடு தூரத்துக்கு கூட ஆட்டோவில், பஸ்ஸில், டூ வீலரில் போகும் போது மசமசப்புத் தனம் மாறிப்போகும் என்றார் இன்னொருவர்.

வாகனங்கள் நம்மை எவ்வளவு சோம்பேறியாக்கி விட்டது என்பதில் இருந்து அது நமக்கு எத்தனை பேருதவி செய்து கொண்டிருக்கிறது என்பது வரை ரத்த சுத்தமாக உணரப் போகிறோம் என்கிறார் இன்னொருவர்.

இன்று தானே இத்தனை வாகனங்கள்—அன்று அதாவது போன நூற்றாண்டுவரை சங்கரர் முதல் ராமானுஜர் வரை வாழ்ந்தோர் இப்படி நடந்துசென்று தானே திருத் தலசேவை செய்திருப்பார்கள். அவர்கள் பக்தியின்

ஆழத்தை நாம் உணர இது ஒரு நல்ல வாய்ப்பு என்று இன்னொருவர் கூறுகிறார்.

மொத்தத்தில் ஒருவர் கருத்தையும் புறந்தள்ள முடியாத ஒரு அனுபவ யாத்திரை தொடங்கிவிட்டது.

# 6

பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜத்தில் தொடங்கும் யாத்திரை கடந்த முறை இருநூற்றி பத்து பேரோடு தொடங்கியது.

கடந்த முறை தொடங்கிய போது சமாஜத்திற்கென்று கட்டிடம் இல்லை. ஒரு வீட்டு மாடியில் கூரையின் கீழ்தான் ஆராதனை, பஜனை எல்லாம்...

இந்த முறை சுமார் 15 லட்சம் மதிப்பில், கல்யாண மண்டபம் போல சமாஜத்திற்கென கட்டிடம் 'ஆனந்த நிலையம்' என்று, அதற்குப் பொருத்தமான பெயர்!

அதிலிருந்து 177 பேருடன் கிளம்பியது யாத்திரை. பெருமாள் உண்டியல் ஏந்தி திரு. முத்துக்கிருஷ்ணன் (ஜெனரல் மேனேஜர், லூகாஸ் டிவிஎஸ்) முன் செல்ல, நாங்கள் பின் தொடர்ந்தோம்.

முதல் நாள் நடை, காரனோடை வரை...சுமார் இருபத்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது காரனோடை. ரெட்ஹில்ஸ் தாண்டி ஆறேழு கிலோ மீட்டர்கள் பயணிக்க வேண்டும்.

இந்த யாத்திரையில் இந்த ஆண்டு கலந்து கொள்ளும் எனக்கு சில வித்தியாச அனுபவங்கள் ஏற்பட்டன. அதைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த 5 மாதங்களாய் யாத்திரை அனுபவங்களை எழுதி

வருகிறேன். ஒரு முதல் யாத்திரை முடிந்த உடனேயே அதை மகத்தான அனுபவமாகக் கருதிக் கொண்டு நான் கட்டுரை எழுத வந்தது எந்த அளவு சரி என்று எனக்குத் தெரியவில்லை.

ஏனென்றால் சமாஜத்தில் 25 வருடங்களாக யாத்திரை புரிந்த அன்பர்கள் ஏராளம் அதில் சேஷன் போன்ற சிலர் திருமலை வரை போனதோடு அங்கிருந்து மந்த்ராலயத்திற்கும் நடந்தது மிகப் பெரிய அனுபவம். கிட்டத்தட்ட 700 கிலோ மீட்டர்கள்.

இப்படிப் பல வருட அனுபவசாலிகளே தங்கள் அனுபவங்களை பெரிதென்று கருதாமல் தன்னடக்கமாக இருக்கும்போது, முதல் வருடம் ஒரு 170 கி. மீ. நடந்து விட்டு அதைப் பெரிதாகச் சிலாகித்து, நான் கட்டுரைத் தொடரையும் தொடங்கியது ஒரு நல்ல நோக்கத்திற்காக என்றாலும் இந்தக் கட்டுரைத் தொடரில் நாத்திக கருத்துக்கள், சிந்தனைகள், சந்தேகங்கள் இவைகளையும் ஆங்காங்கே தூவியிருந்தேன்.

அப்படித்தான் என் கடந்த யாத்திரை இருந்தது.

அதன் உச்சகட்டமாக திருமலையில் பக்தர்கள் சிலரைப் பார்த்து அவர்களின் செயல்பாட்டால் பக்தி மேல், என் பாலாஜி மேலேயே கோபம் கோபமாக வந்தது.

வரிசையில் நிற்கும் பக்தர்கள் ஒழுங்காகச் செல்லாமல் ஒருவரை ஒருவர் மிதித்துக் கொண்டு சென்ற வேகம்; அந்த பக்தர்கள் நடுவே பஜ்ஜி, வடை, காபி, டீ என்று விற்க வந்தவர்கள் அடித்த கொள்ளை, கோயிலுக்குள் காசு கொடுத்து வருபவனுக்கு ஒரு மாதிரியும் மற்றவர்களுக்கு வேறுமாதிரியும் தரிசனம் கிடைத்த முறைகள்; இவை எல்லாம் என்னைக் கொத்தின; குதறின.

இத்தனை தவறுகள் நடக்கும் ஒரு இடத்தில் தெய்வம் இருக்க முடியுமா? என்று முதல் கேள்வி பிறந்தது.

இருந்தால், அந்தத் தெய்வம் வேடிக்கை பார்க்கலாமா என்று அடுத்த கேள்வி எழும்பியது.

பாலாஜியை தரிசனம் செய்வதாலேயே நமது துன்பம் எல்லாம் தீர்ந்து விடுமா...? நாம் நல்ல மனிதர்களாகப் பண்போடு வாழ வேண்டாமா? பணத்தைக் கொடுத்து டிக்கட் வாங்கி பல பேரை மிதித்துத் தள்ளிக்கொண்டு முன் சென்று அந்த ஏழுமலையானைப் பார்த்து காலில் விழுந்து வணங்கி விட்டால், அதில் அதாவது அந்த வணக்கத்தில் மயங்க, பாலாஜி என்ன சராசரி அரசனா...?

இது சரிபா...பக்திப் பிரதேசத்தில் க்ஷேத்திரத்தில் அன்பும் பண்பும் அல்லவா தழைத்து வளர்ந்திருக்க வேண்டும்?

ஒருவரைப் பார்த்து மற்றவர் நீங்கள் முதலில் போங்கள். நீங்கள் முதலில் சென்று தரிசனம் செய்யுங்கள் என்று சொல்லி வழிவிடுவது இருக்கட்டும், நீங்கள் செய்யுங்கள் என அவர் அதை மறுப்பதும் தானே நல்ல மானுட இலக்கணம்?

இதெல்லாம் எதுவுமே திருமலையில் காணவில்லையே. ஏன்?

சினிமாவுக்குத் தரை டிக்கட்டுக்கு அடித்துக் கொள்வது போல ஒரு அடி தடி... பிளாக் டிக்கெட் வாங்குவது விற்பது போல சில ஏஜெண்டுகளின் குறுக்கீடு வேறு.

திருமலையா... சினிமா தியேட்டரா?

என்னுள் எழும்பிய கேள்விகள் இவை...குழம்பிப் போனேன். கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அங்கே பத்திரிகையையே பார்க்க முடியவில்லை. அது பயமாக, சுயநலமாக, ஒரு பழக்கப்படுத்தப்பட்ட செயலாகத்தான் தெரிந்தது.

எனவே பாலாஜி சன்னதி வாசலை அடைந்தபோது, கும்பிடத் தோன்றவில்லை குழப்பமாக இருந்தது. கும்பிடாமலே பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டேன்.

பெருமாளே தேவஸ்தான அமைப்பிடம் மாட்டிக் கொண்டு முழிப்பது போலெல்லாம் என்னுள் எண்ணங்கள்.

எனவே வணங்கவே தோன்றவில்லை. என் நிலையில் தான் என்னுடன் வந்த நண்பன் 'மணியும் இருந்தான். ஆனால் இந்த அலுப்போ, சலிப்போ, சிந்தனைகளோ மற்ற பாதயாத்திரை அன்பர்களுக்கு அறவே இல்லை.

அவர்கள் குறி எல்லாம் தரிசனம் தரிசனம் என்று மட்டுமே இருந்தது.

எனது இந்தக் குழப்பத்தையும் வேதனையையும் ஒரு சிறுகதையாகவும் வடித்து கல்கியில் அதை எழுதவும் செய்தேன்.

நமது [illegible] தீபத்திலும் யாத்திரை ஞானக் கட்டுரையாக எழுதினேன்.

ஆனால் அதில் ஒரு தவறை செய்துவிட்டேன்.

நாத்திகமாய் சிந்திப்பது தவறில்லை. ஆனால் அந்த சிந்தனையில் ஆத்திகத்தை நுழைத்து ஒரு பட்டி மன்றம் நடத்திவிட்டு இறுதியில் மனதில் நாத்திகத் தோடும், எழுத்தில் ஆத்திகத்தோடும் இருந்ததுதான் என் தவறு.

அதாவது என் ஆழ்மனது நினைத்ததை என் பேனா பேசவில்லை. அது பயத்துடனோ (அ) ஒரு பக்தி இயக்கப்

பத்திரிகையில் பக்திக்கு எதிராக எழுதுவது சரியாகாது என்று நினைத்தோ பக்தியை போலியாகப் பேசியது.

எனது இந்த மாறாட்டத்துக்கு அந்த பாலாஜி பாடம் கற்பிக்க நினைத்தானோ என்னவோ. இந்த ஆண்டு யாத்திரை கிளம்புமுன் என்னுடன் பேச ஆரம்பித்தான்.

என்னப்பா போன ஆண்டு போட்ட வேடத்தை இந்த ஆண்டும் போடப் போகிறாயா?

நடந்து வந்து என்னைப் பார்த்து பரிதாபப்படப் போகிறாயா?

எனது பக்தர் கூட்டத்தைப் பார்த்துக் கோபிக்கப் போகிறாயா?

இதற்கு ஏன் நடந்து வர வேண்டும். இருக்கும் இடத்தில் இருந்து செய்யலாமே...? என்று சொல்வது போல என்னை யாத்திரையில் கலக்கவிடாதபடி செய்ய முயன்றான்.

ஒரு தடை வந்தால் தற்செயல் எனலாம்.

இரண்டுக்கும் மூன்றுக்கும் கூட அதைச் சொல்ல லாம். ஆனால் தொடர்ந்து தடை மழையே பொழிந் தால்...?

இந்த ஆண்டு எனக்கு நேரிட்டது.

அதன் பின் விளைவாய் என் தவறுகள் எனக்குப்புரிய வந்தது. என் குழப்பங்களுக்கு விடைகள் கிட்டியது. தன்னடககம் ஏற்பட்டது. நான் ஒரு தூசு என்று எனக் குள் புரிதல் நிகழ்ந்தது.

அந்த தடைகள்?

எனக்கு என்னைப் புரிய வைக்க பாலாஜியின் பேரருள் நிகழ்த்திய விளையாடல்...? அடேயப்பா...

# 7

அந்த அனுபவம் மகத்தானது.

குழப்பத்தோடும், தெளிவில்லாமலும் யாத்திரையில் நான் பங்கு கொள்ளத் தேவையில்லை என்று பாலாஜி என்னைத் தடுத்தான்.

ஒரு முறையல்ல...இரு முறையல்ல...பலமுறை!

எனக்கு என்னையும் தன்னையும் புரியவைக்க அவன் நடத்திய சில நாடகங்களைப் பற்றி இந்த இதழில் எழுத ஆசைப்படுகிறேன்.

பாதயாத்திரை கிளம்பும்முன் ஒரு மாதம் உடற் சுத்தியோடும், உள்ள சுத்தியோடும் விரதம் இருப்பது என்பது யாத்திரைக்கு மிக நல்லது. அதன் நிமித்தம் புரட்டாசி 1 அன்று யாத்திரை புரிபவர்கள் மாலாதாரணம் செய்துகொள்வோம் துளசிமாலை தரித்து காவி உடுத்திக் கொண்டு யாத்திரை தாரனாக்குதல்தான் அந்த நிகழ்ச்சியின் உட்பொருள்.

அப்படி ஆகிவிட்ட பிறகு சிரத்தையுடன் விரதம் இருந்து பாலாஜி நினைப்பாகவே இருக்க இருக்க உள்ளமும் உடலும் கனிந்து வசப்படும்.

விரதத்துக்கு விரதமாய் இருக்க வேண்டும். உப்பு, புளி, காரம், வெங்காயம் நீக்கி—ரத்தஓட்டத்தில் காந்தத்தை புகுத்தி எண்ணங்களில் கோபம், தாபம், கிளர்ச்சிக்கு இடமில்லாதபடி செய்துகொள்ள வேண்டும். ஈரத்தரையில் படுத்து, வெறுங்காலில் நடந்து உடம்பை அது பழகி வைத்திருக்கும் சுக துக்கங்களில் இருந்து பிரித்து வைக்க வேண்டும்.

இப்படி உடம்பை சமஸ்காரம் செய்யும்போது உள்ளமும் ஒருவிதமாக மடங்கி அடங்கும். இந்த அடங்கலை வார்த்தைகளில் சொன்னால் புரியாது. அனுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

உடம்பு அடங்காத பட்சத்தில் உள்ளமும் அடங்காது.

ஆனால் என்னால் இந்த விரதத்தை விரதமாக அனுஷ்டிக்க முடியவில்லை. மர்மதேசம் ஷூட்டிங்கில் இடையறாது கலந்து கொள்ள நேர்ந்தது. காட்டுப் பகுதியில் ஷூட்டிங். எனவே பேண்ட் சர்ட்தான் வசதியான உடுப்பாகப்பட்டது.

உடையில் என்ன இருக்கிறது என்று சமாதானம் சொல்லிக் கொண்டேன். லாட்ஜில் மெத்தையில் படுத்து உறங்கினேன். ஏ. சி. அறை! வியர்க்காதபடி பார்த்துக் கொண்டேன். சாப்பாட்டிலும் குறை இல்லை. ஆக உடம்பும் மனமும் வயப்பட நான் நேர்த்தியாக விரதம் இருக்கவில்லை. இருக்க முடியவில்லை.

இந்த நிலையில் கிளம்பும் நாளன்று வீட்டில் மாவிளக்கு போட்டு பூஜை செய்வது வழக்கம்.

பெருமாளும் இங்கிருந்துதான் என் சட்டைக்காலரைப் பிடித்து இழுத்து நிறுத்த ஆரம்பித்தார்.

சரியாக பூஜிக்கத் தொடங்கிய நேரம். மணி அடிக்க மணியை எடுத்தேன். வெளியில் இருந்து மணி சப்தம் கேட்டது. திடுக்கிட்டு போய் யார் மணி அடிப்பது என்று எட்டிப் பார்த்தேன்.

பக்கத்து வீட்டுக்காரர் இறந்துவிட்டார். அதன் காரணமாக சாவு மணி அடிப்பவன்தான் வந்து அடித்துக் கொண்டிருந்தான்.

தூக்கிவாரிப் போட்டது.

மனதை தேற்றிக்கொண்டு கதவு ஜன்னலை தாழிட்டு விட்டு வந்து பூஜையைச் செய்தேன். பூஜைக்காக தேங்காய் உடைத்தேன். முழுவதுமாய் அழுகிப்போய் பல்லைக் காட்டியது.

அடுத்த அதிர்ச்சி...

சமாளித்து வேறு தேங்காயை எடுத்து உடைத்து பூஜையை முடிக்கும்போது அகல்விளக்கு நெருப்பு துண்டில் பற்றி எரிய கை பொசுங்க அணைத்தேன்.

புத்தி எல்லாம் தற்செயல் என்றது. இதைப் போய் எதோடாவது முடிச்சுப் போட்டுக்கொள்ளாதே என்றது. என் மனைவி மிகக் கலங்கினாள்.

''உங்கள் யாத்திரையை நினைத்தால் பயமாக இருக்கிறது''- என்று மூக்கைச் சிந்தினாள்.

''பைத்தியம் எல்லாம் மனப்பிரமை''— என்று தேறுதல் கூறினேன். அன்று இரவு கன்னியாகுமரி எக்ஸ்பிரசில் முதல் வகுப்பு ஏ சி யில் பயணம் செய்ய டிக்கட் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது.

அதற்கு முன் என் அப்பா அம்மாவை வணங்கிச் செல்ல ஆசைப்பட்டேன். அப்பா என் பொருட்டு என் பயணம் இனிதாக நடந்து முடிய எங்கள் குலதெய்வமான தாந்தோணி மலை பெருமாளை சேவித்துவிட்டு பிரசாதத்துடன் வந்து கொண்டிருந்தார்.

வரும் வழியில் அவரது வண்டி பிரேக் டவுனாகி பிரசாதம் என்னை அடையாமல் போனது.

(மனதைத் தேற்றிக் கொண்டு நான் வீட்டை விட்டு கிளம்பின ஐந்தாவது நிமிடம் அப்பா வீட்டுக்கு வந்திருக்கிறார் )

இந்த நிலையில் ஸ்டேஷனிலும் ரயிலைத் தவற விட்டேன். 10மணி ரயிலை பிடிக்க 10.30-க்கு போனேன்.

10 30-க்கு ஒரு ரயில் உண்டு. அந்த வண்டிதான் என்று தப்பாக நினைத்து விட்டேன்.

போனால் ரயிலும் இல்லை. டிக்கட்டிற்கும் பாதிதான் ரீஃபண்ட் கிடைத்தது. கிட்டத்தட்ட முன்னூறு ரூபாய் அபராதம் போல போய்விட்டது.

அடுத்து 11மணி அளவில் திருவள்ளுவர் பஸ் பிடித்து எப்படியாவது போய்விட முயன்றேன். பஸ்ஸில் நிறைய இடம் இருந்தது. எனது துரதிர்ஷ்டம் நான் போய் உட்கார்ந்த சீட்டுக்கு மேல் லக்கேஜ் கேரியரின் கூரான வளைந்த முனைபாகம் இருந்தது. பஸ் ஓடும்போது பின் பாகம் தூக்கியடித்ததில், தலை அதில் மோதிட வெட்டுக் காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டத் தொடங்கியது.

பஸ்ஸை நிறுத்திவிட்டு எல்லோரும் வந்து கட்டுப் போட்டு முதலுதவி செய்தனர்.

எனக்குள் தீர்மானமாகப் புரிந்து விட்டது.

ஒருதடை, இருதடையை தற்செயல் என்று நினைத் தேன். இப்படி அடுக்கடுக்காகத் தடை வந்தால் அதை என்னவென்பது...?

இருந்தும் முன் வைத்த காலை பின் வைப்பதில்லை என்று பயணத்தைத் தொடர்ந்தேன். பெருமாளுக்கும் கோபம் கூடியதோ என்னவோ? 'சீனிவாசா' என்கிற பெயர் கொண்ட லாரி ஒன்று கொட்டாம்பட்டி அருகே எங்கள் பஸ் மேல் மோத வண்டி நொறுங்கி நின்றது.

மணி பன்னிரெண்டு.

அனைவரும் இப்பொழுது நடுச்சாலையில்...

'நீ எப்படி வருகிறாய் பார்க்கிறேன்...' என்று காலம் என்னோடு மல்லுக்கட்டுவதை உணர்ந்து கொண்டேன். சரி இனியும் தன்னம்பிக்கை வசப்படுவதிலோ, முனைப்பு

காட்டுவதிலோ பலனில்லை என்று அந்த அர்த்தராத்திரியில 'பெருமாளே' என்று கைகூப்பினேன்.

'நான் ஏதோ தவறு செய்திருக்கிறேன். அதனால்தான் இத்தனை இடையூறு. அது எதுவாக இருந்தாலும் திருத்திக்கொள்கிறேன். என்னை மன்னித்து அழைத்துக் கொள். உன்னை சரணடைந்து விட்டேன். எனக்கு என் தவறு இன்னதென்று புரியவை.'—என்று நெஞ்சுருக பிரார்த்தித்து கொண்டேன். ஒரு திருவள்ளுவர் பேருந்து வந்தது. ஒரே ஒரு சீட் மட்டும் இருந்தது. தலையில்பட்ட அடி காரணமாக எனக்கு முன்னுரிமை கிட்டியது. ஏறினேன். பிரார்த்தனை நெகிழ்வோடு கண்ணயர்ந்து விட்டேன்.

கண் திறக்கும்போது மணி ஏழு!

மீனம்பாக்கம் விமான நிலையம் கண்ணில் தெரிந்தது. ஏழு மணி நேரத்தில் அந்த பேருந்து மதுரை அருகில் இருந்து சென்னை வந்திருக்கிறது. எனக்குள் ஒரே வியப்பு.

அதன் பின் எந்த இடையூறும் இல்லை.

ராஜ உபசரணை...மனிதன் செய்தால்கூட அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இயற்கை செய்தது. செல்லும்போது மூடிக்கொண்ட வானம், திரும்ப பெரம்பூர் வந்து இறங்கும்போதுதான் சூரியனை காட்டியது. அதுவரை நிழல்...நிழல்...கருணை நிழல்!

ஆகாசத்தையே அந்த ஆதிகேசவன் கட்டி வைத்தான்.

திருமலையிலும் அற்புதமான தரிசனம், அரை மணிக்குள் நடந்து முடிந்து விட்டது.

நினைக்க நினைக்க வியப்பு-மலைப்பு எல்லாம்.

கடந்த முறை நேரிட்ட ஒரு கசப்பான அனுபவம்கூட இந்த முறை இல்லை. புத்தி நாராயணா நாராயணா என்று அந்த ஜெபத்தில்தான் இருந்தது.

ஆகக்கூடிய சரண் புகுந்து மன்னிப்பைக் கோரிய போது கதவுகள் திறந்து கொண்டு வழி பிறந்தது.

அந்த சரணத்தின் போது என் தவறை எனக்கு புரிய வை என்று சொன்னேனல்லவா?

அது என்ன?

அதை யாத்திரை நடுவில் அந்த பாலாஜி எப்படி புரிய வைத்தான்?

# 8

பாதயாத்திரை தொடங்குமுன் எனக்கு தொடர்ச்சியாக நேரிட்ட தடைகளைப்பற்றி எழுதியிருந்தேன். துவக்கத்தில் அதை ஒரு தற்செயல் சம்பவமாகக் கருதியவன் போகப் போக அப்படி இல்லை என்று உணர்ந்து கொண்டதையும், பிரார்த்தித்துக் கொண்ட பிறகு தடைகள் நீங்கி யாத்திரை இனிதாக நடந்துமுடிந்ததையும் விவரித்திருந்தேன்.

'எனக்கு ஏன் அந்தத் தடைகள் நேரிட்டது?' என்கிற கேள்வி எனக்கு மட்டுமல்ல; இதை வாசிக்கும் அன்பர்களுக்கும் எழலாம்.

அதற்கு விடையும் எனக்கு யாத்திரையின் போதே கிட்டியது. பொதுவில் இந்தப் பாத யாத்திரையில் நான் பங்கு கொள்ளப் பல காரணங்கள் உண்டு.

தெரிந்தும் தெரியாமலும் சரீர ரீதியாகவும், மனோரீதியாகவும், நாம் பாவங்களைச் செய்து விடுகிறோம். அதற்கு அந்த சரீர ரீதியாகவே செய்யும் ஒரு பரிகாரம் இது, என்பது என் தாழ்மையான கருத்து.

அடுத்து, 'மெய்வருத்தம் கூலிதரும்' என்பது சான்றோர் வாக்கு. எனவே இந்த யாத்திரையின் மூலம் செலுத்தப்படும் பக்தியை வேங்கடவன் புறக்கணிக்க மாட்டான்; நிச்சயம் அருள் புரிவான் என்கிற திடமான நம்பிக்கை...

மூன்றாவதாக அடித்தளத்தில் நான் ஒரு எழுத்தாளன். யாத்திரையின் போது ஆயிரக் கணக்கான மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பைப் பெறுகிறேன். அவர்களது பேச்சு நடை, உடை, பாவனை என்று சகலத்தையும் கூர்ந்து கவனிக்கும் ஒரு வாய்ப்பு, இந்த யாத்திரையின்போது கிடைப்பதைப் போல வேறு எங்குமே கிட்டாது.

இப்படிப் பல காரணங்களை உத்தேசித்து நான் பங்கு பெறும் இந்த யாத்திரையில், இதுபோல எந்த உத்தேசமும் இல்லாமல், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வேங்கடவனைத் தொழ நடந்து வந்த சிலரைப் பார்த்தேன்!

அவர்கள் என் பிடறியைப் பிடித்து உலுக்கிவிட்டார்கள். அவர்களின் பக்தி நம்பிக்கை, மெய்வருத்தம், சலனமற்ற மனம் எல்லாமே அதிசயம் ஆச்சரியம்!

சிவகாசியிலிருந்து வந்திருந்தார் ஒரு அன்பர். இன்னமும் திருமணம் ஆகவில்லை அவருக்கு! நாங்கள் எல்லாம் எங்கள் யாத்திரையை சென்னை பெரம்பூரில் இருந்துதான் தொடங்குகிறோம். ஆனால் இந்த அன்பரோ தன் இல்லம் உள்ள சிவகாசியிலேயே பாதயாத்திரையைத் தொடங்கிவிட்டார்.

சிவகாசியில் இருந்து மதுரை, பின் அங்கிருந்து திருச்சி அதற்குப் பின் அங்கிருந்து சென்னை கிட்டத்தட்ட 15 நாட்கள் யாத்திரை அதற்கு மட்டுமே...

அதற்குப்பின் சென்னையிலிருந்து திருப்பதி...

இப்படி ஒரு யாத்திரையை அவர் கடந்த ஐந்து வருடங்களாகச் செய்து வருகிறார் என்பதைக் கேட்டு ஆடிப்போய்விட்டேன்.

சென்னையில் இருந்து திருப்பதிக்கு நடப்பதையே ஒரு மிகப்பெரிய சாதனையாக, வேள்வியாகக் கருதிய என் மனப்பான்மை மேல் அவர் ஒரு பெரிய குட்டு வைத்து விட்டார்.

நடராஜன் என்று ஒரு அன்பர்...

மயிலை லஸ் கார்னரில் மெடிகல் ஷாப் வைத்துள்ளார். இவர் யாத்திரை புரியத் தொடங்கி மாலை போட்டு விட்டால் மலை ஏறி இறங்கி அந்த மாலையைக் கழற்றும் வரை ஒரு வார்த்தைகூட பேசுவதில்லை. மௌன விரதம் அனுஷ்டிக்கிறார். சாதாரணமாக யாத்திரையின் போது பேச்சுத்துணை மட்டும் இல்லை என்றால் நடப்பது என்பது உலகிலேயே ஒரு செயற்கரிய செயல் போலத் தெரியும்.

ஆனால் இவரோ பல வருடங்களாக மௌன விரதமிருந்து பக்தி மலர்களை அந்த ஸ்ரீனிவாசனுக்கு அர்ப்பணித்து வருகிறார்.

இடையில் இவரை எப்படியும் பேச வைத்து விட வேண்டும் என்று சிலர் சீண்டிப்பார்த்தது உண்டு. ஆனால் அவர்கள் எல்லாம் தோற்றுப் போயினர்.

இப்படிப் பலப்பல பக்தர்கள்... சரணாகதி அடைந்து விட்டவர்கள்-சர்வம் அவனே என்ற முடிவிற்கு வந்து

தங்களையே அவனிடம் ஒப்படைத்து விட்டவர்கள் என்கிற ஒரு கூட்டமைப்பைப் பார்த்து பரவசப்பட்டுப் போனேன். எனது பக்தியும் யாத்திரையும் நோக்கமும் எத்தனை சிறியது என்பதும் புரிந்துபோனது.

பக்தியில் பெரியது சிறியது என்று ஒன்றும் கிடையாது. பெரிய பக்திக்கு ஒரு அருள்—சிறிய பக்திக்கு ஒரு அருள் என்று கடவுளும் பாகுபாடு பார்ப்பது கிடையாது. ஒரு புரிதலுக்காக அப்படி அளவிட்டுச் சொன்னேன்.

எனது பக்தி நோக்கம், இவர்கள்முன் மிக இளைத்துக் காணப்பட்டது. என்பதோடு, அதில் சந்தேகமும் அகங்காரமும் கூட நிறைய இருந்ததுதான் உண்மை.

பல்சுவை நாவல் என்றொரு மாத நாவல் வெளியீட்டில் எனது நாவல்கள் மாதம் ஒன்றாக வெளியாகி வருகின்றன.

அதில் தீபாவளி சிறப்பிதழில் நான் 'வைரம் வைரம் வைரம்' என்றொரு நாவலை, எழுதியிருந்தேன், அது ஒரு மர்மநாவல். அந்த நாவலில் வாழ்வில் உண்டென்றும், இல்லையென்றும் விவாதிக்கப்படும் விஷயங்களைத்தான் கருப் பொருளாக்கி நான் கதை செய்கிறேன்.

அதன்படி 'வைரம் வைரம்' நாவலில் ஒருவர் திருப்பதி பெருமாளை பார்ட்னராய் வரித்துக் கொள்வார். லாபத்தில் பங்கை வருடம் தவறாமல் உண்டியலிலும் சேர்ந்து விடுவார். அமோக விற்பனை நல்ல லாபம்! இந்நிலையில் அவரது மரணத்துக்குப் பிறகு அவரது மாப்பிள்ளை கடையை பார்த்துக் கொள்வார், அவர் லாபப் பங்கை திருப்பதிக்கு செலுத்தாமல் தானே வைத்துக் கொள்வார். அது மட்டுமல்ல அந்தத் தொகையைக் கொண்டு ஒரு தங்க திருப்பதி வெங்கடாஜலபதி உருவத்தைச் செய்து, அதை சிங்கப்பூருக்கும் கடத்த முயற்சி செய்வார். பெருமாள் உருவம்—சிங்கப்பூர்

கோவிலுக்குச் செல்கிறது. அவ்வளவும் ஐம்பொன் என்று அரசுக்கு சொல்லி கொண்டுபோக வேண்டும் என்பது அவர் எண்ணம். பெருமாள் உருவாகச் செய்தால், மற்றவர்களும் சந்தேகப் படமாட்டார்கள் என்பதும் அவர் கணிப்பு.

இப்படி அவர் திட்டமிட்டாலும், இறுதியில் அப்படித் திட்டமிடப்பட்டபடி நடக்காமல் அந்த திருப்பதி பெருமாள் உருவம் திருப்பதிக்கே போய் சேர்ந்து விடும். இதுதான் கதை!

இந்தக் கதையில் இந்த மாப்பிள்ளையின் திட்டமிடுதல்—அது முறியடிக்கப்பட்ட விதம் எல்லாமே பாலாஜியின் அருளால் நிகழும். நான் இதை ஒரு தனிச்செயல் சம்பவமாகவும் அந்தக் கதையில் வருணித்திருந்தேன்.

அதாவது அந்த தங்க வெங்கடாஜலபதி சிங்கப்பூர் கடத்தப்படாமல் குற்றவாளியும் பிடிபட பாலாஜியின், அருளும் காரணமாக இருக்கலாம். தற்செயல் சம்பவமாகவும் அது இருக்கலாம். எது நிஜம்? என்று கேட்டு முடித்திருந்தேன்.

ஒரு பொறுப்புள்ள எழுத்தாளனாய் கதை எழுதி தீர்மானமாய் முடிவு செய்யவேண்டிய நான், தற்செயலாகவும் இருக்கலாம் என்று எழுதியதுதான் நான் செய்த தவறு.

அந்தக் கேள்விக்கு விடை தருகிற மாதிரிதான் எனக்கான தடைகள் அமைந்தன. ஒரு தடை என்றால் தற்செயல். இரண்டு என்றாலும் தற்செயல். வரிசையாக தடைகள் என்றால்...?

அது தற்செயலா? இல்லை...

'என் பக்தனின் நம்பிக்கை சார்ந்த விஷயங்களில் ஏமாற்றத்துக்கே இடமில்லை' என்று பாலாஜி எனக்குப்

புரிய வைத்தார். என்னை மன்னித்து புரியவைப்பாயாக என்று வேண்டிக் கொண்டபிறகுதான் நான் இந்தக் கட்டுரைத் தொடரில் மேலே குறிப்பிட்ட மெய்யன்பர் களை எல்லாம் கண்டு மெல்ல என் பக்தி நிலைப்பாடு பற்றி அறிந்தேன்.

வேங்கடவன் விஷயத்தில் நம்பிக்கை. அவநம்பிக்கை என்று ஒருவர் எதில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் இரண்டும் கெட்டவர்களாக மட்டும் இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல...அந்த பக்தி நிலையை எழுத் தாக்கிப் பணம் பண்ணிக் கொள்ளக் கூடாது.

இதை எல்லாம் என்னையும் அறியாமல் அகந்தை பிரணமாகச் செய்து விட்டேன். அவனும் அதை எனக்கு யாத்திரையிலேயே புரிய வைத்தான்.

மிகச் சராசரி பக்தனான எனக்கே இப்படி ஒரு அனுபவம் என்றால், அவனை சரண்புகுந்த மற்ற அன்பர் களுக்கெல்லாம் எப்படி எப்படியெல்லாம் அனுபவங்கள் ஏற்பட்டிருக்கும்...?

# 9

எழுதி வரும் இந்த கட்டுரையைப் படித்துவிட்டு ஒரு அன்பர் என்னை சந்திக்க வந்தார்.

அவர் ஒரு கடைந்தெடுத்த நாத்திகவாதி என்பது அவர் பேச்சை தொடங்கிய நிமிடமே புரிந்துவிட்டது.

அவர் எனது கதைகளின் வாசகராம். என் எழுத் தென்றால் உயிராம். குறிப்பாக எனது மர்மக் கதை

களை மிக விரும்பி படிப்பாராம். ''இதை எல்லாம் எதற்கு சொல்கிறேன் என்றால், இத்தனை தூரம் என் மனம் கவர்ந்த நீங்கள் இந்த கட்டுரை எழுதியதன் மூலம் என்னை மிக யோசிக்க வைத்து விட்டீர்கள்'' என்று பீடிகை போட்டார்.

விஷயத்திற்கு வரப் பணித்தேன்.

''இந்தப் பாதயாத்திரை, மெய்வருத்தம், பஜனை, பாட்டு இதெல்லாம் மேல் நாட்டில் உண்டா'' என்று கேட்டார். இனி அவரோடு நேர்ந்த தர்க்கம்...

''இல்லை.''

''அவர்கள் என்ன கெட்டா போய் விட்டார்கள்?''

''யாருக்குத் தெரியும்?''

''இல்லை. அமோகமாக இருக்கிறார்கள். அற்புத மாக இருக்கிறார்கள். நீங்கள் மேல் நாட்டுக்கு போய் வந்தவர் தானே?''

''ஆமாம்.''

''அப்புறம் எப்படி யாருக்குத் தெரியும் என்று என்னை கேட்கலாம்.''

''சரி, நன்றாக இருப்பதாக எதை வைத்து சொல் கிறீர்கள்?''

''எதை வைத்தா...முதலில் ஊரைப் பாருங்கள்— எத்தனை அழகு? எங்காவது ஒரு குப்பை கூளத்தைப் பார்க்க முடியுமா? அடுத்து அங்கே குப்பை அள்ளுபவன் கூட கார் வைத்திருக்கிறான். ஃப்ரிட்ஜ், ஏ.சி. மின்சார அடுப்பு இதெல்லாம் அங்கு பிச்சைக்காரனிடம் கூட இருக்கிறது. நமது சூப்பர் லக்சுரி தான் அங்கே மினிமம் நீட். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியும். இதெல்லாம் இருந்து விட்டால் சந்தோஷம் வந்து விடுமா?''

''இந்த அடிப்படை விஷயங்களுக்கே வக்கத்துப் போய்தானே நாம் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்?''

''அப்படியா?''

''என்ன அப்படியா...என் கேள்விக்கு பதில் கூறுங்கள். உண்மையா இல்லையா?'?

''சரி உண்மை என்றே வைப்போம். இதை எதற்கு சொல்ல வருகிறீர்கள்?''

''இந்த மாதிரி யாத்திரைக் கூத்துக்கள் எல்லாம் இல்லாமலே அவர்கள் முன்னுக்கு வந்து விட்டதைச் சொன்னேன். காரணம்? அவர்கள் கவனமெல்லாம் உழைப்பு முன்னேற்றம் என்றுதான் இருக்கிறது. யாத்திரை பஜனை என்று அவர்கள் நேரம் காலத்தை விரையம் செய்வதில்லை ''

''அப்படியானால் இதெல்லாம் விரையச் செயலா?''

''இல்லையா பின்னே...அந்த ஏழுமலையானா மங்களை நடந்து வரச் சொன்னான். ஏழுமலையானா கோவில் கட்டிக் கொண்டாடுங்கள் என்றான்? ஏழுமலையானா மட்டு பத்துமணிநேரம் வரிசையில் நின்று கும்பிட்டால் தான் உங்களுக்கு அருளுவேன் என்றான்?''

—அடுக்கிக்கொண்டே போனார் அன்பர்.

எனக்குச் சிரிப்பு வந்தது. ஏனென்றால் இன்றைக்கு பரம ஆத்திகர்களாக திகழும் பலர் ஒருகாலத்தில் நாத்திக உணர்ச்சிகளில் நீந்தி மூச்சுத் திணறியவர்கள் தான்!

இருந்தாலும் ஒருநாள் அவர்கள் அதனின்றும் விடுபட்டு கடவுள் சிந்தனை வயப்பட்டு ஆன்மிகநெறியில் வீறுநடை போடுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

நானே அதற்கொரு மெய்யுதாரணம்.

எனது வாசக அன்பர் ஆவேசமாகக் கேட்ட கேள்விகளை எல்லாம் ஒருமுறை எண்ணி பார்க்கிறேன்.

சரி யாத்திரையில் இதற்கெல்லாம் விடையிருக்கிறதா?

இருக்கிறது இருக்கிறது இருக்கிறது என்று மூன்று முறை சொல்வதுபோல் விடையாகவே நின்றார் ஒரு அன்பர்.

யாத்திரை புரியும் அன்பர்கள் ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதத்தில் பக்த ரத்தினம், அதில் ஒருவர் அன்பர் கேட்ட கேள்விக்கெல்லாம் பதிலாகத் திகழ்ந்ததைப் பார்த்தேன்.

அவர் வருடத்தில் பாதி நாட்களை வெளிநாட்டில் கழிப்பவர்.

''என்ன சார் வெளிநாடு...ஜனக்கூட்டம் குறைவா இருந்தா நம்ம தேசமும் அழகாத்தான் சார் இருக்கும்''— என்று ஒரு அசாதாரண பதிலோடு ஆரம்பித்தார்.

ஆனாலும் அந்த அழகுல ஆபத்தும் உண்டு. ஆபத்துன்னா சாதாரண ஆபத்து இல்ல...உயிரே போயிட்ற ஆபத்து...''

அன்பர் அழுத்தமாக விவரித்தார்.

'அமெரிக்கா, நியூயார்க்ல மன்ஹாட்டன்னு ஒரு இடம். சுஜாதா கதைகள்ள படிச்சிருக்கலாம். மகா மட்டமான இடம். அங்க ஒரு தெரு இருக்கு. அதுல எல்லாமே ஆதாம் ஏவாள் சமாசாரம்தான்,

பத்தாதத்துக்கு போதை மருந்துகள்...

வாரத்துக்கு அஞ்சுநாள் நாயா உழைக்க வேண்டியது...மீதி இருக்கற இரண்டு நாள்ல இங்க வந்து உழைச்சதை எல்லாம் கொட்டிட்டு உடம்பு தெம்பையும் இழந்துட்டு திரும்ப வேண்டியது.

இந்த கொள்றுபடில பொறந்ததுதானே எய்ட்ஸ்?

இந்த சனியன் மன்ஹாட்டன்ல மட்டுமில்ல... அமெரிக்கா பூரா.

எனக்குத் தெரிஞ்சு அங்க கொஞ்சம் அழுத்தமா இருக்குற உணர்ச்சி செக்ஸ் உணர்ச்சிதான். அதுக்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது.

அதனாலையோ என்னவோ அப்பா அம்மா தாத்தா பாட்டி அத்தை மாமா சித்தி சித்தப்பான்னு உறவு முறைகளுக்கோ, அதனால ஏற்படற பாசப் பிணைப்புக்கோ அங்க இடமேயில்லை.

சர்ச் பிரார்த்தனைன்னு இருந்தாலும் அதுலல்லாம் ஒரு ஆழமோ அகலமோ கிடையாது. வருஷம் ஒருதடவை கிறிஸ்துமஸ் கொண்டாடறதோட சரி. அதுவும் குதூகலத்துக்காக; பக்திக்காக இல்லை!

இதனால, எல்லாம் இருக்கற அந்த ஊர்ல துளிகூட சந்தோஷம் இல்லாம மனநோயாளியா இருக்கறவங்க எவ்வளவு பேர் தெரியுமா? அதிலையும் வயசாயிட்டா அவங்க பாவம்.

இங்கல்லாம் வயசாயிட்டா அனுபவஸ்தனாகறோம்

அங்க குப்பையாட்டம் ஆயிடறோம். மாசம் ஒரு பண்டிகை. தைப்பொங்கல். தமிழ்வருஷப்பிறப்பு, ஆடி வெள்ளி அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை தீபம்,.

தீபாவளி சதுர்த்தி, நவராத்திரின்னு எவ்வளவு விஷயங்கள் இங்க...ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்க பேசிக்க ப்ரேயர்பண்ண உறவுகளை பலப்படுத்திக்க உனக்கு நான் இருக்கேன். எனக்கு நீ இருக்கேன்னு சொல்லிக்கன்னு இங்க எவ்வளவு விஷயங்கள். இதெல்லாம் எதுவுமில்ல சார் அங்க...

சும்மா கெட்டுகெதர்னு தண்ணி அடிச்சா ஆச்சா? அதுல ஒரு அர்த்தம் வேண்டாம்.

நமக்கு காது குத்தறதுல இருந்து நெத்திக்கு பொட்டு வைக்கறது வரைக்கு விஞ்ஞானப் பூர்வமாகவும், அனுபவப் பூர்வமாகவும் ஒரு பொருள் இருக்கறதை பாக்கறோம்.

நம்ம வாழ்க்கை முழுக்க முழுக்க மனசு, அதோட சந்தோஷம் சார்ந்த வாழ்க்கை. சில அனர்த்தங்கள் அசிங்கங்கள் இதுல இருந்தாலும் அது சொல்பம்தான்.

நமக்கெல்லாம் ஒரு பயம் இருக்கு.

தப்பு பண்ணா தண்டனை கிடைக்கும். பாவம் விடாம தொடர்ந்து வந்து நம்ம தலைமுறையையும் பாதிக்கும்னு ஒரு பயம் இருக்கு.

அதெல்லாம் இல்லைன்னா யார் வேணா எப்படி வேணா இருக்கலாம்னா, காட்டு மிருகங்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? மிருகங்கள் ஒரு ஒழுங்கில்லாம வாழ்ந்தாலும், அது கிட்ட கொடூரமான அணுகுண்டோ அழிக்கற ஆயுதமோ இல்ல.

நாம அப்படிப் பார்த்தா அதைவிட மோசமாச்சே?

அன்பர் மூச்சு விடாமல் பேசினார். நிறுத்தவேயில்லை. பக்தி யாத்திரை, பஜனை, இதெல்லாம் கால விரயம் முட்டாள்தனம் என்று என்னிடம் வாதம்

புரிந்த நண்பருக்கு பதில் சொல்லாமல் சொல்லிவிட்டார் இந்த அன்பர்.

# 10

யாத்திரையின் போது இப்படி ஒரு விடையை அந்த பாலாஜி எனக்கு தருவான் என்று நான் நினைக்கவேயில்லை.

அதே சமயம் யாத்திரையை ஒரு பிக்னிக் போல கருதி அதன் அருமை பெருமை தெரியாமல் நடப்பவர்களுக்கெல்லாம் அந்த பாலாஜி அவர்களின் தவறை உணர்த்தத் தவறியதேயில்லை.

ஒரு பாத யாத்திரையை ஒருவர் பிக்னிக்காகக் கருதுவதா? கேள்வியே உங்களுக்கு ஆச்சரியம் தரலாம்.

திருப்பதி பாத யாத்திரையைப் பொருத்தமட்டில் இது எந்த அளவு உண்மையோ பொய்யோ...சபரிமலை யாத்திரை இன்று அப்படி ஆகிவருவதை நல்ல உள்ளம் கொண்ட உண்மையான பக்தர்கள் மறுக்கவே முடியாது.

லட்ச லட்சமாக பக்தர் கூட்டம் கார்த்திகை பிறக்கு முன்பே கறுப்பு வேட்டிக் கூட்டம் பிறந்து விடுகிறது. உடனேயே அவர்கள் யாராக இருந்தாலும் சாமியாகி விடுகிறார்கள்.

இந்த மதிப்பான வார்த்தைக்கு மட்டுமே அவர்கள் மாலை போட்டார்களோ என்று நினைக்கத் தூண்டும் அளவு இருக்கிறது அவர்கள் செயல்கள்.

எனக்குத் தெரிந்து ஒரு சமூக விரோதி. பலமுறை சிறை சென்று வந்தவர். திடீரென்று ஒருநாள் கறுப்

வேட்டி சட்டை மாலையோடு சாமியானார். நெற்றி நிறைய சந்தனம் குங்குமம் என்று பக்தி மணம். எனக்கு ஆச்சரியம். அவரிடமே கேட்டேன்.

''வருசம் பூராதான் தப்பு பண்றோம். ஒரு 48 நாளாவது சாமி நினைப்பா இருப்போமேன்னுதான்...'' என்றார். எனக்கும் அது சரியாகப்பட்டது. ஆனால் அவர் அப்படி இருக்க ஆசைப்பட்டது மட்டும்தான் நிஜம். அவரால் இரண்டு நாட்கள் கூட விரதப்படி காலம் தள்ள முடியவில்லை.

சிகரெட், தண்ணி என்று ஒவ்வொன்றாக பழைய படி தொற்றிக் கொண்டது.

மூன்று வேளை குளித்து, இரண்டு வேளை சரணம் சொல்லி, ஒரு வேளை மட்டும் உணவு உண்டு, வெறுந் தரையில் படுத்து உறங்கி, திட்டு மாந்தர் கண்களில் கூட படாதபடி ஒதுங்கி இருந்து 48 நாள் அழுக்குணர்ச்சி கள் ஏதுமின்றி ஐம்புலன்களையும் சுருக்கி விரதம் இருந்து பின் குருநாதர் திருவடிகளில் விழுந்து வணங்கி அவர் தரும் நெய்த்தேங்காய் கொண்ட இருமுடியை சுமந்துகொண்டு அதை எங்கும் கீழே வைக்காதபடி நடந்தே மலைக்குச் சென்று ஐயனை தரிசித்து அபிஷே கம் செய்து வீடு திரும்பி மறு பூஜை செய்வது வரை ஒரு ஐயப்ப பக்தர் பூணும் விரதமும் வழிபாடும் மெய் சிலிர்க்க வைக்கக் கூடியது. அதில் அப்பழுக்கு இருக்காது. தீபப்போல ஜோதிசொரூபமாகவே அவர்கள் மாறிவிடு வார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மலைக்குச் சென்று வந்த பின்பும் அவர்களை அந்த விரத காலத்து உறுதியும் அருளும் உடனிருந்து ஒழுங்குடன் வழி நடத்தும். அவர் கள் வாழ்வே மாறிப்போகும்.

ஆனால் இன்று அப்படியா ஒவ்வொரு ஐயப்ப பக்தரும் இருக்கின்றனர்?

சபரிமலையின் புனித நதியான பம்பை நதியில் ஒரு அவுன்ஸ் நீரில் எவ்வளவோ மலத்துணுக்குகள் சேர்ந்திருக்கிறதாம். அத்தனை அசுத்தமாக அதை ஆக்கி விட்ட அளவு ஒரு கூட்டம்.

அந்த மூலிகை மலையே மொட்டையடிக்கப்பட்டது போல ஒரு வறட்சி...

போய் குவியல் குவியலாக குவிகிறோம்.

உரிய முறையில் விரதம் இருந்தால் இத்தனை பேரெல்லாம் போகவே முடியாது.

சாமிக்குத் தேவை மனசுத்தம். அவ்வளவுதான் மத்ததெல்லாம் அலட்டல்...' என்று ஒரு அன்பர் தன் தவறுக்கு வக்காலத்து வாங்கிப் பேசியது எனக்குத் தெரியும்.

அதனால்தான் அந்த புனித மலையில் ஐம்பதுக்கும் மேலானவர்கள் மண்ணோடு மண்ணாக மூடிப்போனார்களோ?

அதை தெய்வ சாபம் என்றும், தற்செயல் சம்பவம் என்று பலப்பல விமர்சனங்கள். எது இருப்பினும் ஒரு புனித யாத்திரை மலிவாகி விட்டது என்பதை யாத்திரை புரியும் அன்பர்களை பார்த்தே சொல்லிவிடலாம்.

ஒரு வாரம் ஊரையெல்லாம் சுற்றிவரக் கிடைத்த சந்தர்ப்பம் என்று சிலரும், இப்படி விரதம் இருந்து மலைக்குப்போய் வந்து விட்டால் பிறகு அந்த வருடம் முழுவதும் எவ்வளவு தவறு செய்தாலும் அது மன்னிக்கப்படும் என்று மேலும் சிலரும்.

அப்படி செய்த தவறுகளின் நெருடல், மற்றும் மன அழுத்தம் காரணமாக இப்படி யாத்திரைக்கு செல்லும்

ஆசையோடு பலரும் யாத்திரை மேற்கொள்வதுதான் பொதுவில் இன்று வழக்கமாக இருக்கிறது.

இப்படி செயற்கையாக, புனிதத் தன்மை, புரிதல் ஏதுமின்றி சர்வ சல்லிசாக நிகழ்த்தும் யாத்திரைகளுக்கும் உரிய விடைகள் கிடைக்கத்தான் செய்கின்றன.

நான் மேற்கொண்ட யாத்திரையிலும் அப்படிச் சிலரைப் பார்த்தேன். எல்லோரும் முன் சென்று விட பின் தங்கிவிட்ட ஒருவர் சாவதானமாக ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக்கொண்டு ஏகாந்தமாக புகைத்தபடியே வந்தார்.

ஒருவர் புகைபிடிப்பவராக இருந்தாலும் யாத்திரை நாளில் விரத காலத்தில் கட்டாயம் புகைக்கக்கூடாது என்பது சமாஜத்தின் பணிவான கட்டளை. அதை அவர் யாருக்கும் தெரியாதபடி மீறினார்.

இருந்தும் அமைப்பினருக்குத் தெரிய வந்து கண்டிக்கப்பட்டார். அதன் 'எதிரொலிகள் பலவித சிந்தனைகளை உருவாக்கியது.

''புகை பிடிக்காதவர்கள் யோக்யமா?

புகை பிடிப்பது ஒரு பலவீனம். முடிந்த அளவு கட்டுப்படுத்தச் செய்கிறேன். அவ்வளவே. அறவே புகைக்கக்கூடாது என்றால் எப்படி? அப்புறம் இந்த பாலாஜிக்கு லட்சக்கணக்கில் உள்ள பக்தர் எண்ணிக்கை ஆயிரக்கணக்குக்கு குறைந்துவிடும்'' என்று அவர் பினாத்திக்கொண்டே வந்தார்.

—புகை பிடிப்பது மட்டுமா ஒழுக்கக் கேடு. எவ்வளவோ விஷயங்கள் அவர் கேள்வியிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. வெளியே தெரியாதபடி உள்ளுக்கு மறைவாக இருக்கும் ஒழுக்கக் கேடான, பக்திக்கு எதிரான விஷயங்களை தெய்வம் என்ன செய்கிறது?

அதைத் திருத்துகிறதா...இல்லை தண்டிக்கிறதா? வேடிக்கை பார்க்கிறதா...என்னதான் செய்கிறது...?

இந்த மாதிரி யாத்திரை புனித எண்ணங்களோடு மட்டுமே நடப்பதாக நினைக்கவோ நம்பவோ தயாரில்லை.

மனிதன் என்றால் தவறுகள் நேரத்தான் செய்யும். சலனம் சஞ்சலம் கோபம் தாபம் எல்லாம் கொண்ட கலவையாகத்தான் இன்று மனிதமனம் இருக்கிறது.

அதை தெய்வம் எப்படி அங்கீகரிக்கிறது?

யாத்திரையில் அது எப்படி பண்படுகிறது?

இந்த கேள்விக்கான விடை சிலரது அனுபவங்களில் பளிச்சிட்டது.

ஒருவர்...

முடி இறக்குவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அருமையான தலைமுடி. நல்ல கர்லிங். என்ன நினைத்தாரோ தெரியவில்லை திடுமென்று முடிவை மாற்றிக் கொண்டார்.

'அற்ப தலைமுடியையா இறைவனுக்குத் தருவது?'

இது நல்ல சமாதானமா... இல்லை ஏய்ப்பா...

விடை அவருக்கு ஊர் திரும்பியவுடன் கிட்டியது. தீராத தலைவலி ஆட்கொண்டது. டாக்டரிடம் காட்டவும் பிரைன் ட்யூமராக இருக்குமோ என்று சந்தேகம் வந்துவிட்டது டாக்டருக்கு. ஸ்கேன் செய்ததில் அது ஊர்ஜிதமானது. அதற்கு சிகிச்சை அளித்ததில் மின்சார சிகிச்சையும் ஒன்று.

அதன் காரணமாக நேரிட்ட அதிர்வில் மொத்த தலையும் வழவழப்பாகி ஒரு முடி கூட இல்லாமல்

போனது. அற்பத் தலைமுடி என்று அவர் நினைத்தாரே அதுதான் வாழ்வில் அவரது முதல் தேவையானது

விகாரம் பிடுங்கி எடுத்தது அப்பொழுதுதான் ஒரு உண்மை உறைத்தது...எதுவும் அற்பமில்லை. அதிலும் அழகு சார்ந்த விஷயங்கள் அமிர்தமானவை... அதனால் தான் பெருமாளுக்கு முடி தருவது முதலில் இருக்கிறது. அந்த நொடி முடியைத் தந்து அழகை தற்காலிகமாக இழக்க நேரிட்டாலும் அந்த அரூபம் பிற அரூபங்களையும் நேசிக்கும் மனதை நமக்குத் தருகிறது.

நம்மைப் போலத்தானே பிறர்?

பிறரைப் போலத்தானே நாம்...?

என்கிற கேள்விகள் கிளைத்தெழுகின்றன. மனச் சலவை நிகழ்கிறது.

சரி...இது முடி தரமாட்டேன் என்று ஒதுங்கிய நபரை தெய்வம் இப்படி தண்டிப்பது முறையா? சரியா...?

இல்லை என்றானது அடுத்தடுத்த சம்பவங்கள். அவர் பாலாஜியிடம் தன் தவறுக்கு மன்னிப்புக் கோரினார். அந்த மன்னிப்பு வேண்டலோடு யாத்திரையிலும் பங்கு கொண்டார். ஆச்சரியப்படுகிற மாதிரி முடி முளைத்து இன்று அவர் பளபளப்பாக இருக்கிறார்.

இருந்தும் யாத்திரைக்கு யாத்திரை அவர் முடி தருகிறார். முதன்முதலாக இதைக் கேள்வியுற்ற நான் இதையும் ஒரு தற்செயல் சம்பவமாகக் கருதினேன்.

முதலில் கடவுள் முடி தா என்று கேட்கவில்லை. கேட்காத ஒன்றை நானாகத் தருகிறேன் என்று முன் செல்கிறேன். பின் நானாக அதை இழக்கப் பிரியமின்றி மறுதலிக்கிறேன். இதில் தெய்வம் ஏமாற இடமில்லை.

எல்லாம் என் விருப்பு வெறுப்பு சார்ந்த சுயநல சிந்தனைகள். இதனால் தெய்வம் அடையும் நட்டம் ஒன்றுமில்லை என்று நான் இவ்விஷயத்தை மிகச்சாதாரணமாக எடுத்துக் கொண்டேன். ஆனால்...

# 11

பாலாஜி விஷயத்தில் என் அனுபவம் மிக விசித்திரமானது. நான் எனது ஆத்திக சிந்தனைகளை மட்டுமல்ல; நாத்திக சிந்தனைகளையும் ஒளிவு மறைவு இல்லாது பகிர்ந்து கொண்டு வருகிறேன்.

பொதுவில் பக்தி என்பதையே பயம் என்று சொல்லும் சிந்தனையாளர் உண்டு. வாழ்க்கை மேல் உள்ள பயம்; சில விஷயங்களை இழந்து விடுவோமோ என்கின்ற பயம்; எந்த நேரத்தில் எது நடக்குமோ என்கிற பயம்; என்று பயம் நிறைந்த வாழ்க்கையில் அதை வெல்ல ஒரு விஷயம் மனிதனுக்கு தேவைப்படுகின்றது.

மிகச் சுலபமாக 'தைரியம்' தான் அது என்று சொல்லி விட முடியாது. தைரியத்தையும் கடந்த ஒன்றாக ஒன்று ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. அப்படிப்பட்ட சமயத்தில் பக்திதான் மனதுக்கு மிக இதமாக பதமான ஒன்றாக வசப்படுகிறது.

பக்தியை பற்றிக் கொண்டு பயங்களின் மேல் நின்று ஏதோ ஒரு தெய்வத்தை நோக்கி என்னைக் காப்பாற்று என்று இறைஞ்சும்போது, அது காப்பாற்றுகிறதோ இல்லையோ மனது இலேசாகி விடுகிறது. இறுக்கம் தளர்ந்து ஒரு பாரம் குறைந்த தன்மை ஏற்பட்டு விடுகிறது.

மனதிலும் தெய்வத்திடம் ஒப்படைத்து விட்டோம். இனி அது பார்த்துக் கொள்ளும் என்கிற நம்பிக்கை வந்து விடுவதால் நம்மால் வாழ்வில் அடுத்தசெயல்களில் பதட்டமின்றி ஈடுபட முடிகின்றது. எல்லாம் சரி...தெய்வம் என்று ஒன்று இருக்கிறதா? அதுநாம் ஒப்படைத்த விஷயங்களை பரிசீலிக்கிறதா? நமது பயத்தைப் போக்குகிறதா?

இதெல்லாம் குயுக்தியான நமது மூளை சில சமயங்களில் எழுப்பும் கேள்விகள். பயம் விலகிய நிலையில்புத்தி இப்படி தாராளமாகக் கேள்விகள் கேட்பதும், அதன் மேல் நின்று ஆராய்ச்சிகள் செய்வதும் அதன் இயல்பாகி விட்டது.

அந்த நிலையில் நமது நீங்கிய பயத்துக்கு விடையாக அது ஒரு தற்செயல் சம்பவமாகத்தான் தெரியும். தானாக நீங்கியதோ பயம் என்பதில் இருந்து பலப்பல வாறு நம்மை நாம் விசாரணை செய்து கொள்வோம்.

மீண்டும் ஒரு துன்பமோ துயரமோ தாக்கும்போது பயம் வரப் பெற்று திரும்ப தெய்வத்திடம் சரண் புகுவோம் அதனால்தான் சான்றோர்கள் தெய்வத்தை எல்லா நாளிலும் நினைக்கச் சொன்னார்கள்.

பிரச்சினை வரும்போது கூடுதலாகவும், பின் அறவே மறந்தும் போகின்ற சராசரி பக்தி நம்மை எப்பொழுதும் குழப்பத்திலேதான் வைத்திருக்கும்.

கிட்டத்தட்ட என் நிலையும் அப்படித்தான்...

எனது பக்தி கடவுளைப் புரிந்து ஏற்பட்டதா... இல்லை பயத்தால் ஏற்பட்டதா? என்று கேட்டுப்பார்த்துக் கொள்வேன். புரிந்து ஏற்பட்டதாகவே தோன்றாது. அது தான் உண்மையும் கூட.

பயம் காரணமாகவும், கடவுள் என்பவர் சர்வ சக்தி படைத்தவர்; அவருக்கு ஜால்ராபோட்டால் அவர் நமக்கு

உதவுவார் என்கிற அசட்டு நினைப்பு காரணமாகவும் ஒன்றை வேண்டியோ எதிர்பார்த்தோ உருவான ஒருபக்தி யாகத்தான் எனது பக்தியும் இருந்தது என்பதுதான் உண்மை

இந்த அசட்டு பக்திதான் சந்தர்ப்பவாதம் செய்யும். ஊரில் ஒரு சாமியார் வந்திருக்கிறார். அவர் பார்த்தாலே ஐஸ்வரியம் தேடி வரும் என்று கேள்விப்பட்டால் அவர் பார்வையில் பட ஓடிப் போய் நிற்கும். அதே சாமியார் ஒரு போலி என்று தெரியவந்தால்' நான் அப்பவே நினைச் சேன்' என்று சொல்லும்.

வியாழக்கிழமை குரு பகவானுக்கு நெய் விளக்கேற் றும். ஏற்றியும் பிரச்சினை தீராத போது 'தெய்வமே இல்லை; அதற்கு கருணையில்லை' என்று பினாத்தவும் வைக்கும்.

சமயங்களில் சில பாவங்களை செய்ய வைத்து விடும். குற்ற உணர்வு நெருடும்போது உலகத்தில் யார் செய்ய வில்லை என்று சமாதானம் சொல்லும்.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் சரியாகி விடும். என்று கணக்குப் போடும். இத்தனைக்கும் நடுவில் நமக்குத் தொடர்ந்து நல்லது நடக்கும் பட்சத்தில் இந்த நல்லவைகளுக்கு நாம் தகுதியானவர் கிடையாதே... அப்படியிருக்க இது எப்படி நடந்தது? ஒரு வேளை எல்லாக் காலத்திலும் மனிதனின் புத்தி பலன்தான் பெரிதோ... கடவுள், வினைப்பயன் எல்லாம் நம் கற்பனையோ? என்று கேட்டு மாய்ந்து போகும். சும்மாவா பெரியவர்கள் சொன்னார்கள், மனம் ஒரு குரங்கு என்று?

இருந்தும் பாலாஜியின் பேசும் திறன், பேரருளை கருணை உள்ளத்தை நான் நிதர்சனமாக உணரப் பெற்றது இந்த யாத்திரையில்தான்; இதில் நேரிட்ட அனுபவ ஞானத்தால்தான்.

எப்படி?

முன்பு அந்த வேங்கடவனுக்கு தலைமுடி காணிக்கை தர விழைந்த ஒருவர் பற்றியும் அவருக்கு நேரிட்ட அனுபவம் பற்றியும் எழுதியிருந்தேன்.

என் அனுபவம் இம்மட்டில் வித்தியாசமானது.

நானும் இதேபோல் ஒருமுறை முடி காணிக்கை தருவதாக ஒரு வகையான சந்தர்ப்பத்தில் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

பின், புத்தி மாறிவிட்டது. அற்ப முடியையா காணிக்கையாகத் தருவது. பெருமாள் இதற்காகவா வீங்கிக் கிடக்கிறார்? எல்லாம் நாம் மேற்கொள்ளும் அபத்தமான வேண்டுதல்கள் என்று புத்தி தன் போக்கில் சால்ஜாப்களை அள்ளி அள்ளி போட்டுக் கொண்டது.

எனவே பெருமாளை மட்டும் தரிசித்துவிட்டு வரு வோம் என்று கிளம்பினேன். நான் முடி துறக்க மறுத்த தற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அப்பொழுது தேவி வார இதழில் என் தொடர் ஒன்று தொடங்க இருந்தது அதன் நிமித்தம் நிறைய புகைப்படங்கள் எடுத்துச் சென்றிருந்தனர்.

விதம் விதமான போஸ்களில்... அந்தப் படங்கள் தேவியில் வரும் சமயத்தில், அந்தபடம் வால் போஸ்டரில் வரும் சமயத்தில் நாம் மொட்டைத் தலையுடன் இருந் தால் நம்மைப் பார்ப்பவர்கள் நம்மை சரியாக உணர முடியாது போய்விடுமே என்கிற அச்சம், ஆசை எல்லாம் என்னில் இருந்தது.

எனவே வேண்டுதல் ஆசையையே தவறான ஒன்றாக ஆக்கிக்கொண்டு விட்டேன். பெருமாளை மட்டும் சேவித்துவிட்டு திரும்பினேன்.

ஆனால் அடுத்தவாரமே தேவியில என் புகைப்படத்துடன் விளம்பரம் வரவில்லை. போஸ்டரிலும் புகைப்படமில்லை. காரணம் கேட்டபோது அதிர்ந்து போனேன். என்னை எடுத்த புகைப்படம் ஒன்றுகூட ஒழுங்காகப் பதிவாகவில்லை. அவ்வளவும் எப்படி தப்பு செய்தது என்றே தெரியவில்லை என்று பதில் வந்தது.

ஆடிப் போய்விட்டேன் ஆனாலும் முடி துறக்க மனம் வரவில்லை. போகட்டும் என்று விட்டுவிட்டேன். இந்த நிலையில் எனக்கு மகள் பிறந்தாள். எங்கள் குல ஆசாரப்படி திருப்பதியில் முடி எடுப்பது என்பது வழக்கம்.

அதற்காக திருப்பதி கிளம்பிச் சென்றோம். வழியில் என் மகளின் தலைமுடி சுருள் சுருளாக என்னை கவர்ந்து மயக்கிக் கொண்டே வந்தது. இதையா அந்தப் பெருமாளுக்குக் கொடுப்பது? பெண் குழந்தைகளுக்கு தலைமுடிதானே அழகு என்று என்னுள் விதவிதமான சிந்தனைகள். இதை என் மனைவியிடமும் பகிர்ந்து கொண்டேன். அப்பொழுது அவள், 'உங்களுக்கு முடி கொடுக்க இஷ்டமில்லையா?' என்று கேட்டாள்.

இப்படிச் சிந்திப்பதன் பொருள் அதுதானே?

நான் மௌனித்தேன். ஒரு புறம் ஆசை. மறுபுறம் பயம்... இன்னொரு புறம் அறிவின் உறுத்தல் இந்த நிலையில் நடந்த சம்பவம் ஒன்றும் ஞாபகத்தில் உள்ளது.

இந்த பிரார்த்தனையெல்லாம் சராசரி மனுஷர் புரியாம பண்ணிக்கற ஒண்ணு... பிரார்த்தனை பண்ணின்டாதான் அனுக்ரகம் பண்ணுவேன்னா அது என்ன கடவுள்?

ராஜாதான் அவனை ஸ்தோத்ரம் பண்றவனுக்கு பொண்ணும் மணியும் பரிசா தருவான். பண்ணாம இகழறவாளை சிறைல போடுவான்.

கடவுளையும் நாம ராஜா மாதிரி நினைச்சுண்டு ட்ரீட் பண்றது மகா தப்பு. அதோட கடவுளுக்கு எதுக்கு அத்தனை ஆடை அணிகலன் கிரீடம் எல்லாம்.

இந்த உலகமே அது படைச்ச உலகம். இந்த தங்கம் வைரம்லாம் இந்த உலகத்துல கிடைக்கற விஷயங்கள். அப்படி கிடைக்கற விஷயங்களே போட்டுண்டு கடவுள் யாரை மயக்க ஆசைப் படறது? நாம கடவுளை அலங்கரிக்கிறதா நினைச்சுண்டு அதை ஆசையோட சின்னமா மாத்திட்டோம். பகட்டோட உருவமா காட்டிட்டோம். அபிஷேகம் ஆராதனைன்னு வீண் பண்றோம். அது படைச்ச உலகத்துல, அது படைச்ச மனுஷாளான நாம, அது படைச்ச பொருளை எடுத்து அதுக்கே கொடுக்கறதை ஒரு பெரிய விஷயமா நினைக்கறோம்.

அதுக்கு பசி ஏது? அதுக்கு ஆசை ஏது? அதுக்கு அடுத்தவாளை கவர வேண்டிய அவசியம்தான் என்ன?

நாம கடவுளை புரிஞ்சு வெச்சிண்டிருக்கற விதமே அபத்தம்—என்று அன்று நீண்டு போனது என் பேச்சு.

மனைவி வாயடைத்துப் போனாலும் பிறகேதுக்கு. அந்த சாமியை கும்பிட இந்தமலைக்கு வந்தேள்?' என்று மடக்கினாள்.

நான் திணறினேன்.

ஒரு பக்கம் சிந்தனை, மறுபக்கம் அதன் மேல் பயம். அது ஏதாவது செய்துவிடும் என்கிற பயம் என்னுள் இருப்பதை உணர்ந்து பார்த்தேன். மொத்தத்தில் கடவுள் பக்தி விஷயத்தில் ஒரு நல்ல தெளிவு என்னில் இல்லாதது பளிச்சென்று தெரிந்தது.

அப்பொழுதுதான் அந்த சம்பவம் நடந்தது. என் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்த

என் மகள் எப்படியோ அந்த திருமலைக் கூட்டத்தில் காணாமல் போய் விட்டாள்.

எனக்கும் என் மனைவிக்கும் ஈரக்குலையே நடுங்கி விட்டது. நல்ல கூட்டம்: நாயாக அலைந்து நாலாபுறமும் தேடுகிறோம். நான் மட்டுமா? என் அப்பா, தம்பி, மாப்பிள்ளை என்று ஒரு படையே அலைந்தது.

ஒரு மணி நேரம் தேடியும் அவள் கிடைக்கவில்லை. ஒரு கடை, ஒரு மனிதர் பாக்கி விடவில்லை. ஒரு சின்னப் பெண் தெரிந்தாலும் ஓடிச்சென்று முகத்தைப் பார்த்து ஏமாந்து போனபோது ஒருவர் வந்தார். விஷயம் கேட்டார். சொன்னேன்.

''பாலாஜி விஷயத்தில் ஏதோ தவறு செய்திருக்கிறீர்கள். அதனால்தான் இப்படி ஆயிருக்கிறது. மன்னிப்பு கோரி அந்த தவறை சரி செய்து கொள்வதாக வேண்டுங்கள் உங்கள் மகள் கிடைத்து விடுவாள்'' என்றார்.

அவர் அப்படி சொல்லும்போது கோவிலின் நேர் எதிரில் துவஜஸ்தம்பம் அருகில் நான் நின்று கொண்டிருக்கிறேன். என் மனைவியும் தேடிக் களைத்தபடி வந்து சேருகிறாள்

வந்தவள் நான் முடி இறக்கும் விஷயமாக காட்டிய கவனத்தை ஞாபகப்படுத்தி அதன் காரணமாகத்தான் இந்த சோதனை நமக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றாள்.

எனக்கு அழுகை வந்தது. என் மகளுக்கு மட்டுமல்ல; நானும் கூட முடி தருகிறேன். மகளை ஒப்படைத்துவிடு. உன் சன்னதிக்கு வந்த இடத்தில் இப்படி ஒரு சோதனை எங்களுக்கு வேண்டாம்' என்று கைகூப்பி பிரார்த்தித்தேன்.

அடுத்த நொடி ஒலி பெருக்கியில் அறிவிப்பு. ஒரு பெண் குழந்தை தேவஸ்தான அலுவலகத்தில் போலீஸ்

வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றுகூறி என் மகளின் அடையாளங்களைக்கூறி பெயரையும் சொன்னபோது சிலிர்த்துப் போனேன்.

பின்னங்கால் பிடரியில் பட ஓடினேன்.

மகள் அங்கு இருந்தாள். ஓடி வந்து கட்டிக் கொண்டாள். மூச்சு வந்தது. அடுத்த அரைமணிப் பொழுதில் முடி இறக்கப் போய் உட்கார்ந்தேன். வரிசையாக என் அருகில் என் தம்பிகள், என் அப்பா, நான், என் மகள்.

ஒரு மொட்டைக்கு யோசித்தேன்.

ஆனால் வரிசையாக ஆறு மொட்டைகள்!

நாங்கள் துறக்கப் போவது முடியையா? இல்லை நம்பிக்கை இல்லாத ஆசாபாசம் மிகுந்த குழப்பமான எண்ணங்களையா?

# 12

ஒரு மொட்டைக்கு யோசிக்கப் போய் வரிசையாக என் குடும்பமே மொட்டையடித்துக் கொள்ள உட்கார்ந்த கதையை குறிப்பிட்டிருந்தேன்.

அந்த அனுபவத்தை என்னென்பது?

அதை உணர்ந்த வேங்கடவன் அந்தத் திருவிளையாடலை நிகழ்த்தினான். கேட்டுப் பார்த்துக் கொள்கிறேன். நான் என்றில்லை; நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் முடி காணிக்கை செலுத்துகின்றனர். நமது சரீரத்திலே மிக அற்பமான ஒரு பொருள் உண்டென்றால் அது தலைமுடிதான்.

அதை வாங்கிக் கொள்ளவா இப்படி திருவிளையாடல்? நிச்சயமாக இல்லை.

யாத்திரையின் போதுதான் பலவாறு பேசிக் கொண்டு நடப்போமே...? அதில் ஒருவர் சொன்னதில் நிறைய பொருள் இருப்பதாக எனக்குப் படுகிறது.

''தலைமுடி அற்பமானதுதான். ஆனால் அதன் தாத்பர்யம் மிகப்பெரியது. ஒருவருக்கு மிகநீண்ட அழகிய தலைமுடி இருக்கிறதென்றால் அதன் பின்னால ஒரு பெரிய பராமரிப்பு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

பார்த்துப் பார்த்து வளர்த்து தைலம் தடவி வாசனைப் படுத்தி, சதா சர்வகாலம் கண்ணாடி முன் நின்று வாரி வாரி அழகுபடுத்திக் கொள்ளும் ஒரு சமாச்சாரம் இந்த தலைமுடி மட்டும்தான். குளிக்காமல் கூட இருந்து விடுவோம். ஆனால் தலை வாராமல் மட்டும் இருக்க மாட்டோம். இப்படி சிரசின் பிரதான வாசத்தின் முக்கிய விளைவை மழித்துத் தருவது ஐந்து நிமிட வேலைதான். ஆனால் திரும்ப அந்த அளவு முடியை அடைய பல மாதங்கள் அல்லவா காத்திருக்க வேண்டும்?

காத்திருந்து வளர்த்துப் பாதுகாத்த ஒன்றை, காத்திருந்துதான் பெற முடியும் என்கின்ற ஒன்றை, காணிக்கையாக பர முன் வருவது என்பது சாதாரண விஷயமா? யோசியுங்கள்'' என்றார் அந்த அன்பர்.

''எல்லாம் சரி...வெட்டி விட்ட பிறகு அதற்கென என்ன மதிப்பு உள்ளது? குப்பையிலும் கேடானதுதானே அது...'' என்று திருப்பிக் கேட்டேன்.

''இருக்கலாம்...முடிகாணிக்கைக்குப் பின்னால் வாக்கும் சொல்லும் அல்லவா இருக்கிறது'' என்று என்னை மடக்கினார் அந்த அன்பர்.

வாக்கும் சொல்லுமா? இரண்டும் வேறு வேறா...? குழம்பிற்று... அவரே விளக்கினார்...

“இந்த பாலாஜிதானே அந்த ராமாயணத்து ராமன். ராமனுக்கு எப்பொழுதும் ஒரு பாணம்; ஒரு சொல் தானே...சொன்னதில் நின்றதால்தானே அவன் காவிய நாயகன் ஆனான்.

அவன் மட்டுமா? சொல்லில் நிற்பவர்கள் அனைவருமே காவிய நாயகர்தானே? சொல்லில் நிற்பது என்பது சாதாரணமானதா?

ஒன்றைச் சொல்லிவிட்டு, பிரச்சினை வரும்போது சொல்லவில்லை எனும் மனிதர்களை நினைத்துப் பாருங்கள். சொல்லில் நிற்பதன் கஷ்டம் புரியும். சொல்லில் நிற்க வேண்டும் என்றால் கேரக்டர் வேண்டும். கேரக்டர் வேண்டும் என்றால் ஒழுக்கம் வேண்டும். ஒழுக்கம் என்பது நற்குடிப்பிறப்பு, நல்ல வளர்ப்பு, நல்ல வாசிப்பு இவைகளால் உருவாவது.

ஆக நல்ல குடியில் பிறந்து, நல்ல குடியில் வளர்ந்து, நல்ல வாசிப்புகளால் பண்பட்டு, நல்ல மனிதப் பாத்திரமாக திகழ்ந்து, சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாமல் திகழும் ஒருவர் எத்தனைப் பெரியவராக இருக்க வேண்டும்? அவரை பார்ப்பதே புண்ணியம் என்றல்லவா வேதங்கள் கூறுகின்றன ...

‘நல்லாரை காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதும் நன்று’

என்கிறது நாலடியார். அவ்வையும், பாரதியும், வள்ளலாரும் எவ்வளவு பாடியிருப்பர்?

அப்படி பாத்திரச் சிறப்பு பெற்ற ஒருவரின் முடி காணிக்கை என்பது சாதாரணமானதா என்ன? அவரே

ஒரு தெய்வீக மனிதர். ஆனால் அவரோ தானொரு அற்பம்; தன்னையும் விஞ்சியது தெய்வம் அதன்தாள் பணிவதும் அதற்காக தன்னையே அர்ப்பணிப்பதுமே சிறப்புகள் தரும் என்றல்லவா முடிகாணிக்கை தருகிறார்.

சிரத்தையே தரத்தான் ஆசை...அதை ஒரு முறை, தந்துவிட்டால் மறுமுறை தர அது வளராதே? எனவே தான் சிரத்தின் மேல் அழகுப் பயிராக வளரும் கேசத்தைத் தந்து நன்றிக் கடன் தீர்க்கிறார்கள்.

முடிகாணிக்கை என்பது ஒரு நன்றி காட்டும் செயல்.

முடி காணிக்கை என்பது சொல்லில் நிற்கும் தீரம்.

முடி காணிக்கை என்பது ஒரு முழுமையான அர்ப்பணிப்பு.

இதை இப்படித்தான் பார்க்க வேண்டும். முடி வேண்டுமானால் அற்பமாக இருக்கலாம். அந்த அற்பத்தை அர்ப்பணிப்பதற்கே இத்தனை தேவை என்றால், நாம் நம்மை அர்ப்பணிக்க எத்தனை பெரிய விஷயங்கள் தேவை என்பதும் அதில் ஒளிந்து கிடக்கும் உண்மை' என்றார்.

காணிக்கைகள் பலருக்கு விஷயமில்லாமல் இருக்கும். ஆனால் காணிக்கை வெளியே எல்லோருக்கும் பொதுவாக [illegible] விஷயங்கள் இருப்பதை அந்த அன்பர் பட்டியலிட்டு [illegible] எனக்குத் தெளிவாக இருந்தது.

பயணங்களில் [illegible]...நான் கூட ஆர்வத்துடன் செயல்பட்டிருக்கிறேன்; அவைகளை ரசித்திருக்கிறேன்; நான் அவ்வாறு செய்தது முழு மனதாக புரியப்படாத நிலையிலும் அந்த பயணத்தில் ஒரு சிறிய சோதனையைத் தந்து எனக்குப் புரிய வைக்க வேண்டியதை புரிய வைத்தது. இக்கட்டுரைத் தொடரில் இவைகளை எழுதி

உங்களோடு பகிர்ந்து கொள்ளுமளவிற்கு வாய்ப்பும் தந்திருக்கிறான் என்றால், அவன் கருணையை என்னென்பது?

அது சரி; கருணை இந்த பாலாஜியிடம் மட்டும் தானா...மற்ற தெய்வங்களிடம் அது கிடையாதா...? ஏன் பாலாஜியை தரிசிக்க மட்டும் இப்படி ஒரு கூட்டம்? எதனால் பாலாஜியின் உண்டியல் மட்டும் இப்படிப் பெருகி வழிகிறது?

இந்த பூஜ்ஜியத்தில் பாலாஜி ஒரு கல்லாக இருந்து கொண்டு ஒரு ராஜ்ய பரிபாலனமே அல்லவா செய்து கொண்டிருக்கிறான்?

பாலாஜிதான் ஒருவேளை முற்றும் முடிவுமான பரம்பொருளா...மற்றையோர் எல்லாம் சாதாரணங்களா? இல்லை; நம்பிக்கைக்கும் ஆசைக்கும் ஏற்ப உருவான சிலா ரூபங்களா?

யாத்திரையின்போது என்னால் இந்தக் கேள்வியை புறந்தள்ள முடியவில்லை.

இதற்கு அந்த பாலாஜி எப்படி விடை தரப்போகிறான்?

கேள்வியோடு நடக்கும் எனக்கு விடை எப்படி வரப்போகிறதோ தெரியாது...ஆனால் ஒரு எழுபது வயது தடிமனான ஒருவர் குழந்தை தத்தி நடப்பது போல திக்கித் திக்கி திணறியபடி நடந்து கொண்டிருப்பது, மனதை சங்கடப்படுத்தியது.

சாதாரணமாக 200 பேர் கொண்ட ஒரு யாத்திரைக் கூட்டம் எங்கள் கூட்டம். இதில் சிலர் நடப்பதற்கென்றே பிறந்தவர்கள். இன்னும் சிலரோ அதில் திருமலை வரை நடக்கக்கூட முடிந்தவர்கள், அவர்களை விட்டு விடுவோம். நடக்க மாட்டாத கூட்டம் என்று ஒன்று இருக்

கிறதே...? எங்கு போனாலும் ஆட்டோ பைக் என்றே பறந்து பழக்கப்பட்ட அவர்களுக்கு நடை என்பது வீட்டுக்குள் மட்டும்தான். வெளியில் அதிக பட்சம் தெருமூலை இல்லையேல் பக்கத்து வீடு என்கிற குட்டித் தூரங்கள். இதனாலேயே தொந்தி விழுந்து தொடை, பருத்து யாத்திரையின்போது சில கிலோ மீட்டர் கூட நடக்க முடியாது போய் படும்பாடு இருக்கிறதே... யப்பப்பா!

இந்தக் கூட்டத்தை சேர்ந்தவர்தான் நான் பார்த்த அந்த எழுபது வயதுக்காரர்.

இத்தனை வயதில் இவருக்கெதற்கு இப்படி ஒரு கடுமை மிகுந்த ஆசை?

அவரிடமே கேட்டேன்.

''ஸ்வாமிகள்...இப்படி நீங்க உங்களை வருத்திக் கணுமா? பஸ்ல போலாமே...ஏன் வயசான காலத்துல இப்படி முடியாத விஷயத்துல மனசை முடிச்சுப் போட்டுக்கறீங்க...''

அவர் என்னைப் பார்த்த பார்வையில் அநியாயத்திற்கு ஒரு ஏளனம்.

அவர் சொல்லத் தொடங்கியதில் நெஞ்சையள்ளும் பிரமிப்பு!

அது...

# 13

திருமலைக்கான பாதயாத்திரையின்போது வயதான நிலையில் தட்டுத் தடுமாறி நடக்கும் ஒரு பக்தரிடம் இந்த நிலையில் நீங்கள் நடக்கத்தான் வேண்டுமா—பஸ்ஸில் போய் தரிசிக்கலாமே என்று கேட்கப் போய், அவர்

சொன்ன பதிலில் ஆடிப்போய் விட்டதாக எழுதியிருந்தேன்.

அது என்ன பதில் என்று சொல்லாமல் தொடர் கதை பாணியில் ஒரு சஸ்பென்ஸோடும் நிறுத்தியிருந்தேன்.

இப்படி இந்த தொடரை எழுதி வருவதற்கு பலத்த வரவேற்பும் விசாரிப்பும் இருப்பதைப் பற்றி நான் கொஞ்சம் பேசியாக வேண்டும்.

நாவலும் சிறுகதைகளும் எழுதிப் பழக்கப்பட்ட எனக்கு கட்டுரை எழுதும் அனுபவம் புதியது. அதிலும் ஆன்மிகக் கட்டுரை எழுதும் அனுபவம் புதியதிலும் புதியது. இப்படிப்பட்ட புதிய அனுபவம் பாராட்டப் படுவதிலும், வரவேற்கப்படுவதிலும் மிக மகிழ்கிறேன். ரத்தமும் சதையும் கூடிப் பெற்ற அனுபவங்களல்லவா?

எழுத்தாளர்களில் பெரும்பாலோர் பக்தியில் இருப்பது அரிது. நானறிய பலஎழுத்தாளர்கள் அப்படித்தான். ஏன் என்றால் அதை ஒரு அச்சமாக மூடமாகக்கருதுவதுதான்.

வாழ்க்கையை, மனிதர்களை, அவர்கள் மனங்களை அலசிப் பார்க்க முடிந்தவர்களுக்கு தெய்வம்-அது சார்ந்த விஷயங்கள் மூடமாகத்தான் தெரியும். அறிவே தெய்வம் என்று ஆராதிக்கத்தான் தோன்றும். மீறி யாருக்காவது பக்தி இருந்தாலும் அவர்கள் அதை பிரகடனப்படுத்திக் கொள்ளவோ, அதில் தாங்கள் இருக்கும் அடையாளங் களைக் கூட பிறர் காணும்படி விட்டு வைப்பதோ கிடையாது.

விதிவிலக்காக சிலர் இருந்து பக்தி செய்யலாம். பகிரங்கத்திலும் திளைக்கலாம், ஸ்ரீ வேணுகோபாலன், பாலகுமாரன் போல...

இப்படி பக்திக்குள் இருந்துகொண்டே இல்லாமல் இருக்கும் என் போன்றோரின் சிந்தனைகள் பெரும்பாலும்

கேள்விகள் மிகுந்தவை. கிட்டும் பதில்களிலும் சந்தேகம் கொள்பவை. உரித்து உரித்துப் பார்ப்பவை. இதுதான் பலரைக் கவர்ந்திருக்கிறது. ஏன் என்றால் இப்படித்தான் இன்று பலர் இருக்கிறார்கள்.

இப்படி நான் பார்க்கும் விஷயத்திற்கு கிடைத்து வரும் வரவேற்பு எனக்குப் பல தெளிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

என்னைப் போலத்தான் நூற்றுக்கு தொண்ணூறு பக்தர்கள் இருக்கிறார்கள் என்பதே அது. எனவேதான் என்னை நோக்கி பல கேள்விகள்; பல பரிமாற்றங்கள். அவை சுவையானவை; சூடானவை; தெளிவைத் தேடி அலைபவை...இந்த யாத்திரை ஞானம் அவைகளைப் பற்றியும் அலசிப் பார்த்து சிந்திக்கும். என் ஒருவனுக்கு ஏற்பட்ட யாத்திரை அனுபவத்தில், அதன் தொடர்ச்சியில் இவை எல்லாமும் இனி சேரும்.

எனது இந்த அனுபவங்கள், அதன் பின் நேரிட்ட தெளிவுகள், வேறு விதமாக வாசகர்கள் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அவைகளை எழுதி அனுப்புங்கள். அல்லது என்னோடு சேர்ந்து தர்க்கம் புரிய வாருங்கள். என்னோடு ஒட்டி நின்றாலும் சரி; வெட்டிக் கொண்டு நின்றாலும் சரி; நமது அனுபவங்களும் —அதை நாம் அலசிப் பார்ப்பதும் தான் முக்கியம் அந்த அலசலில் ஏற்படும் தெளிவுகள் அதனினும் முக்கியம்.

உங்கள் இறையனுபவம் பாலாஜியைச் சார்ந்துதான் இருக்க வேண்டும் என்றில்லை. கந்தனிலிருந்து கர்த்தர் வரை, அல்லாவிலிருந்து அவதார புருஷர்கள் வரை எவரோடும் இருக்கலாம்.

அனுபவம்தான் முக்கியம். அதுதான் பெரியது; அதுதான் சத்யம்!

சரி...

இனி அந்த வயதானவரின் அனுபவத்திற்கு செல்வோமா?

எழுபத்தி நான்கு வயது அவருக்கு...

இந்த பாத யாத்திரையில் பத்தாவது வருடமாக நடந்து வருகிறாராம். (அடேயப்பா!)

. கிட்டத்தட்ட நூறு கிலோ எடையுள்ள சரீரம். இதைத்தான் சுமந்து கொண்டு நடக்கிறார். மிக அதிக அளவில் அடிகள் எடுத்து வைத்துப் போட முடியாது. தொடை உரசும்; புண்ணாகும். ஆகுமென்ன? ஆகிவிட்டது. அதனால் என்ன? ஆயின்மென்ட்டை தடவிக் கொண்டு நடக்கிறார் அவர்.

நூத்துக்கு நூறு சதவிகித மெய்வருத்தம்.

ஏன்... அதற்கும் மேலான வருத்தம் என்று கூடச் சொல்லலாம்.

இந்த வருத்தத்தையா பாலாஜி கேட்கிறான்?

எதற்காக இந்தக் கஷ்டம்?

அவர் பாஷையில் இனி...

'நம்மோட சரீரம் ஒரு பிரமாதமான ஆயுதம். மூளையைக் கொண்டு பூமியையே புரட்டலாம். கை கால்களால் சந்திரன் வரை பறந்து திரும்பலாம். இதெல்லாம் உச்சபட்சமான விஷயங்கள். ஆனா எல்லாரும் இப்படி உச்ச பட்ச அளவுக்கு நடந்துக் கறோமா? அந்த அளவு வேண்டாம்... சொல்ப அளவுக்காவது இந்த சரீர பலத்தை பயன் படுத்திக்கிறோமா? இல்லையே...

என் வரைல அப்பா அம்மா சொத்து வெச்சுட்டுப் போயிருந்தா...ஆகையால பல் தேய்ச்சுக்கக்கூட வேலைக் காரன் வெச்சுக்கற அளவுக்கு போய் சோம்பேறியா யிட்டேன். சதா சர்வகாலமும் சீட்டாட்டம்; இல் லேன்னா பேப்பர் படிக்கறது, நாவல் படிக்கறதுன்னு பொழுது கழியும்.

இதனால உடம்பு சதைபோட்டது. ரத்தத்துல சர்க்கரை கலக்க ஆரம்பிச்சது. நுரையீரல்ல கொழுப்பு படிஞ்சுது.

மாத்திரை மருந்து தற்காலிக நிவாரணம் தந்தது.

ஒரு நாள் ஒட்டு மொத்தமா படுத்துட்டேன்.

கை காலை அசைக்கக்கூட முடியலை. டாக்டர் வந்து பார்த்துட்டு. 'வாதம் பரவ ஆரம்பிச்சிருக்கு'ன்னார். உடம்புல சதையைக் குறைக்கணும். டயட்ல இருக்கணும். இன்சுலின் போட்டுக்கணும். நிதம் ஒரு மணி நேரம் நடக்கணும்னு அடுக்கிண்டே போனார்.

இதுல எது தவறினாலும் படுத்த படுக்கைதான். மலம், மூத்திரம் அள்ளக்கூட வேலைக்காரன்தான் ஊட்டார்.

தத்தளிச்சுப் போனேன். நான் எப்ப இப்படி ஆவேன்னு காத்திருந்தது போல, என் வேலைக்காரர்கள் என்னை மொட்டை அடிக்க ஆரம்பிச்சா கண் எதுக்க திருடுவாங்க; கேட்க முடியாது!

சொத்து கரைய ஆரம்பிச்சது. மனைவி மக்கள்கூட வெறுக்கும் நிலை நோக்கிப் போக ஆரம்பிச்சேன்!

''வெட்டியப்பா'ங்கறது தான் என் பேரே! இத்தனை துன்பத்துக்கு நடுவிலேயும் என்னால தெய்வத்தை நினைக்க முடியலை. ஏன்னா நினைச்சே எனக்குப்

பழக்கமில்லை. காசும் பணமும் இருக்கும்போது பொதுவாவே தெய்வ பக்தி அங்க பிரமாதமா இருக்காது. இருந்தாலும் ஒருஓரமா அடங்கிஒடுங்கி ஏதோ இருக்கேன் பேர்வழின்னு இருக்கும். என் நிலையும் அதுதான்.

இந்த சந்தர்ப்பத்துலதான் என் பக்கத்து வீட்டுக் காரரைப் பற்றி நான் சொல்லியாகணும். ராமமூர்த்திங்கறது அவர் பேர் எல்லா விதத்துலயும் அவர் எனக்கு நேர் எதிர். மொத்தம் அவர் தூங்கற நேரமே ஒரு நாளைக்கு அஞ்சு மணி நேரமோ ஆறு மணி நேரமோ தான். எப்ப பார், எதையாவது பண்ணிக்கிட்டிருப்பார். சைக்கிள் ரிப்பேர், பைக் ரிப்பேர்னு எது வந்தாலும் எல்லாத்தையும் அவரே பார்த்துடுவார். அவ்வளவு ஞானம்—சுறுசுறுப்பு.

அவர்கிட்ட எனக்குப் பிடிச்சது அவருடைய சுறு சுறுப்பு-அடுத்து ஆரோக்கியம்.

எனக்கு ஆரோக்கிய குறைவேற்பட்டபோதுநான் அவ ரைப் பார்த்து ரொம்பப் பொறாமைப்பட்டேன். அவர் திருமலைக்கு வருடா வருடம் பாதயாத்திரை போய் வர்றவர். அவர் மூலமாத்தான் இந்தப் பாதயாத்திரை பற்றியே எனக்குத் தெரிய வந்தது.

அவர் ஒருநாள் என்கிட்ட வந்தார். என் நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டார். 'சார்...திருமலைக்கு வேண் டிக்கோங்க. இந்த உடம்பை அந்த பாலாஜி நினைச்சா சீர்படுத்த முடியும். அப்படி சீர்படுத்தித் தந்தா நடந்தே திருமலை வரேன்னு வேண்டிக்கோங்க சார். தந்தா வாங்க...இல்லேன்னா வேண்டாம்'னார்...''

''அப்ப தந்தாதான் தருவானா?''—இது நான்.

''சார்...அது உங்க பக்தியை பொறுத்தது...''

''இது என்ன பதில். தந்தாதானே அது தெய்வம்? தராட்ட நான் செலுத்தின பக்திக்கு என்ன அர்த்தம்? மனிதன் என்னை சாரி சொல்லி ஏமாத்தலாம். தெய்வம் எப்படி ஏமாத்தலாம்?''

''நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்...''

''பேச்சுக்குக் கூட தெய்வம் விஷயத்துல சொல்லக் கூடாது ராமமூர்த்தி அதுல அவநம்பிக்கை இருக்கே...''

அப்ப முழுசா நம்பிக்கை வைங்கோ. முழுசா குணமாயிடுவேள்'னு சொன்னார் ராமமூர்த்தி.

அந்த நிமிஷம் கை கூப்பினேன். தும்மியளவு சந்தேகமோ சஞ்சலமோ இல்லாத வேண்டுதல்.

''பெருமாளே எனக்கு ஆரோக்கியத்தை தா! நான் இதுநாள் வரை உன்னை நினைச்சதில்லை, நினைக்கும் அவசியத்த நீ எனக்குத் தரலை. இப்ப சேத்து வெச்சு தந்திருக்கே. இப்பவாவது நினைக்க முடியறதேங்கறது என் நினைப்பு. இப்பதான் ஞாபகம் வந்ததாங்கறது உன் கேள்வியா இருக்கலாம்.

நான் ரொம்ப சாதாரண மனுஷன். நான் உன்னை நினைக்கறதால உனக்கு ஆகப்போறது எதுவுமில்லை. நீ என்னை நினைக்கவும் அதுதான் முக்கியம்.

[illegible] நினை... [illegible] நினை....அதற்கு நன்றியா இனி [illegible] நடந்து வரேன். [illegible] -றேன்.

[illegible] கட்டம் இருக் [illegible] -ச்சது நீ [illegible] முடியும்.

[illegible]...

ஒரு மருந்து மாத்திரை நான் சாப்பிட மாட்டேன். என் மருந்தும் மாத்திரையும் இனி உன் நினைவுதான் நாராயணா...கோவிந்தா...ஏழுமலையானே....'

என்று அந்த நிமிடம் மாறத் தொடங்கினேன். நம்புவியோ மாட்டியோ உடம்புல அபார மாற்றம்! சர்க்கரை குறைஞ்சு, சதை குறைஞ்சு, வாதம் குறைஞ்சு ஆரோக்யம் நிறைய ஆரம்பிச்சது.

அந்த வருஷமே திருமலைக்கு நடக்க ஆரம்பிச்சேன். இன்னிவரை நடந்துண்டிருக்கேன் முடங்கிப் படுத்தாலோ பஸ்ல போனாலோ நான் நோயாளின்னு அர்த்தமாயிடுவேன். இந்த நடை கொஞ்சம் சிரமமானதுதான். ஆனா ஆரோக்யமானது! எனக்கு தெம்பளிக்கக் கூடியது. என்னால இந்த வயசுல இது முடியறலேங்கற நினைப்பே எனக்கு எத்தனை டன் ஹார்லிக்ஸ் தெரியுமா? என் நடை உனக்கு கஷ்டமா தெரியலாம். எனக்கு அது இஷ்டம்னா!'

-பெரியவர் விவரிப்பில்தான் எத்தனை பொருள்... எத்தனை பிரமிப்பு...

அது சரி...

இந்த ஆரோக்ய மாறுதல் இவரது மன உறுதியால் வந்திருக்கலாம்; நம்பிக்கையால் வந்திருக்கலாம் அல்லவா? பாலாஜி நினைப்பென்பது பற்றிக் கொள்ளக் கிடைத்த ஒரு கோலாக மட்டுமே ஏன் இருந்திருக்கக் கூடாது?

சினிமாவில் வருகிறமாதிரி பாலாஜியே ஆகாசத்தில் இருந்து இறங்கி வந்து கையசைத்தா அருள் தந்தான்?

இப்படிப்பட்ட கேள்விகளும் என்னுள் எழத்தான் செய்தன. அதை அவரிடம் பகிர்ந்து கொண்டேன்.

அதற்கான அவரது பதிலில்தான் பாலாஜி நூறுசதம் ஒளியாமல் தெரிந்தான்.

அது...?

# 14

வயதான ஒரு பெரியவர்—அவரது கடினமான நடை பயணம்—அதைப் பார்த்து இத்தனை தள்ளாத வயதில் தாங்கள் இப்படி நடந்து வரத்தான் வேண்டுமா, பஸ்ஸில் அல்லது ரயிலில் போய் அந்த வேங்கடவனை தரிசிக்கலாமே என்கிற என் கேள்வி அவர் பதில் என்று முடிந்திருந்தது.

அவர் வேங்கடவன் கருணையால் உடலநலம் பெற்று பிரார்த்தனையாகவும், பிராயச்சித்தமாகவும் இப்படி நடந்து வருவதைப் பற்றியும் கூறிய போது, 'அது வேங்கடவன் கருணைதான் என்று எப்படி கண்டறிந்தீர்கள். நீங்கள் பிரார்த்தித்துக் கொண்ட சமயம் விஷயம் தற்செயலாக கூட நடந்து முடிந்து நீங்கள் ஆரோக்கியமானவராக ஆகியிருக்கலாமே' என்று நான் திருப்பிக் கேட்டதையும் கூட குறிப்பிட்டிருந்தேன்.

அவர் அசரவில்லை.

சிரித்தார்.

'இத்தனை [illegible] கேள்விகளையுடைய நீங்கள் [illegible] நடக்கிறீர்கள்' என்று [illegible].

அவர் [illegible]?

[illegible] அவர்கள் பதிலில் [illegible] எனதச் [illegible]

அந்த [illegible] போலத்தும் [illegible].

யோசித்ததில் நான் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் நடுவில் இருப்பதாக யூகித்தேன். பிறப்பு வளர்ப்பு காரணமாக பக்தி என்னுள் பதுங்கியிருக்கிறது. அறிவு வளர்ச்சி சிந்தனை காரணமாக அவநம்பிக்கையும் கூடவே பதுங்கியிருப்பதை யூகித்து அறிந்து அதை அவரிடமும் கூறினேன்.

''என்னை ஒரு நல்ல பக்தன்னு நான் சொல்ல மாட்டேன். நமக்கு மேல ஒருசக்தி இருக்கு. அதை நான் நம்பறேன். அதே சமயம் அந்த சக்தி சிவனா, பெருமாளா, முருகனா, விநாயகனா இருக்கறதுல கொஞ்சம் இடிக்கறது.

புராணங்கள்ள நிறைய நம்ப முடியாத பொய்கள் இருக்கு. குழப்பம் இருக்கு. தெளிவு இல்லை. கர்ணன் குந்தியோட காது வழியா பொறந்தவன்னா எப்படி சாத்யம்னு விஞ்ஞான மூளை கேள்வி கேட்கத்தானே செய்யும்?

பிறக்கும்போதே கவச குண்டலங்களோட பொறந்தான்னும் சொல்றாங்க. நினைச்சே பார்க்க முடியல இதை...தெய்வீக புருஷர்கள்னா அப்படித்தான். அது பொய் இல்ல வேற விசேஷசக்தி காரணமா அப்படி நடந்திருக்கலாம்னு ஒரு பதில் தரப்படுகிறது. விசேஷ சக்தி படைச்சவன் சராசரி மனுஷனுக்கு மேலானவன். அப்படின்னா எல்லா விஷயத்துலையும் அவன் அப்படி நடந்துக்கணுமே?

ஆனா அவனோ சராசரி மனுஷன் போல தாய்ப் பாசத்துக்கு ஏங்கறான். நட்பு, நன்றின்னு சாகறான். அவனை ஜெயிக்க கடவுளேகூட வேஷம் போட வேண்டியிருக்கு. கூட்டிக்கழிச்சா எதை நம்பறது எதை நம்பக் கூடாதுன்னு தெரியலை. ஆனா ஒண்ணு...நமக்கு மேல

ஒரு சக்தி இருக்கு. அது உண்மை. அதை பல விதத்துல நான் உணர்ந்தேன். கோவிலுக்கு போனா மனசுக்கு சந்தோஷமாகவும் நிம்மதியாவும் இருக்கு... பூஜைகள் செய்தா புத்துணர்ச்சியா இருக்கு. இப்படி பல அனுப வங்களால தெய்வ சான்னித்யத்தை உணருகிறேன்.

ஆனா புராணக் கதைகளையும், இதிகாசங்களையும், கேட்கும்போது எதுக்கு இவ்வளவு பொய்யிங்கற கேள்வி யையும் புறந்தள்ள முடியாது.

மொத்தத்துல தெய்வானுபவம் எனக்குப் பரி பூரணமா சித்திக்கல, கேள்விகளோடயும், குழப்பங்க ளோடயும்தான் இருக்கு. அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? எனக்கு தெளிவு ஏற்படாதவரை நான் இப்படித் தான் இருக்க முடியும்'' என்று ஒரு நீண்ட விளக்கமளித் தேன்.

இருட்டப் போகும் சமயம்...

நாராயணபுரத்துக்கு ஆறு கிலோ மீட்டர் முன்னால் நாங்கள் சாலையோரமாக இப்படிப் பேசி நடந்து கொண்டிருந்தோம்.

அந்த ஆறு கிலோ மீட்டரும் நடுத்தரமான ஒருமலைப் பாதை. அதை நடந்து கடப்பது என்பது ஒவ்வொரு பாதயாத்திரை புரிபவனுக்கும் ஒரு வலியான அனுபவம். கோகோ ஃபால்ஸ் இங்கேதான் இருக்கிறது. மலைத் தூரம் முழுக்க நிதானமான மேடு. எனவே காலில் தொடை நரம்புகளை இழுப்பது தெரியாமல் இழுக்கும். வேதனையைச் சொல்லி மாள முடியாது.

இதைக் கடந்து விட்டால் அந்த திருமலையையே அடைந்து விட்ட மாதிரிதான். அப்படி ஒரு கடினமான பகுதி

இந்தப் பகுதியில்தான் நான், என் நண்பர் மணி அந்த பெரியவர் மூவரும் அந்த சர்ச்சைகளோடு நடந்து கொண்டிருந்தோம்

மிக நிதான நடை

பெரியவர் என் கருத்துக்கு பதில் சொல்லாமல் 'நாராயணா...கோவிந்தா...கோபாலா...' என்று ஜெய கோஷம் எழுப்பத் தொடங்கி விட்டார்

என் நண்பன் மணியும் 'அவருக்கு உனக்கு எப்படி பதில் கூறுவது என்பது பிடிபடவில்லை போலிருக்கிறது' என்றான்.

'இருக்கும்' என்றேன் நானும்...

கொஞ்சம் வலி கூடிப்போகவே சாலை ஓரமாக ஒரு மைல் கல் மேல் போய் உட்கார்ந்தோம்.

பெரியவர் நடந்து கொண்டேயிருந்தார்.

உட்கார்ந்தால் திரும்ப எழுந்து நடையைப் பிடிப்பது சிரமம் என்பது பாத யாத்திரை புரியும் எல்லோருக்கும் தெரியும்.

வயதான அவர் நடந்தபடி இருக்க இப்படி, உட்கார்ந்து விட்டோமே என்று கொஞ்சம் நெருடினாலும் வலி எங்களை ஜெயித்துவிட்டதை என்னென்பது?

உட்கார்ந்து கொண்டேயிருந்தோம்...

எழுந்து நடக்கவே பிடிக்காத மனநிலை. விட்டால் அப்படியே அந்த கல்லிலும் முள்ளிலும் கூட சாய்ந்து ஒரு நல்ல தூக்கம் போடத் தயாராகி விட்டது உடம்பு.

நடுதடுவே வாகனங்களின் வெளிச்சம் எங்கள் மேல் பட்டுப் பட்டு போய்க் கொண்டிருந்தது.

சரி உட்கார்ந்தது போதும் என்று எழும்ப முயன்றேன். என்னால் முடியவில்லை. கால்கள் மரத்துப் போய் விட்டிருந்தன. நாலு எட்டு வைக்க முடியவில்லை.

''யப்பா முடியலைப்பா...ஆயின்மென்ட் போட்டு விடேன்'' என்றேன். நண்பன் மணியும் ஒரு வலி' நிவாரணியை எடுத்துக் காலில் போட்டு தேய்த்து விட்டார்.

இதற்கு நடுவில் யாரோ ஒருவர் தூரத்தில் நின்றபடி எங்களையே பார்ப்பது போல் எனக்கு ஒரு நெருடல்.

''அது யார்னு பார்...'' என்றேன் மணியிடம்.

''யாருப்பா அது?'' மணியும் கத்திக் கேட்டான். எனக்கு பயமாகி விட்டது. சற்றே வழிப்பறியும் அந்த சாலையில் நடக்கும் என்று கேள்விப்பட்டிருப்பதால் பயம் கூடிப்போனது.

அதற்குள் அந்த உருவம் மறைந்து போனது.

சரிதான்...யாரோ வழிப்பறி பேர்வழிதான் என்று முடிவு செய்ததில் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. சட்டென்று எழுந்து மளமளவென்று இருவரும் நடக்கத் தொடங்கி விட்டோம்.

உண்டியல் பணம் ரயில் டிக்கெட் என்று கைவசம் ஒரு முட்டையே இருக்கிறது. அத்தனையையும் திருடன் கொண்டு போனால் என்னாவது?

இழந்துவிடுவோம் என்கிற பயம் மனதை இயக்கிப் பிடித்துத் தள்ளியது.

ஒரு வழியாக நாராயணபுரம் வந்து சுரைக்காய் சாமியார் மடத்தில் ஐக்கியமானோம்.

எங்களுக்கு முன் வந்து விட்டிருந்தார் அந்த பெரியவர்.

''என்ன பெரியவரே...ஒரே மூச்சா நடந்துட்டீங்க போல இருக்கே...''என்று கேட்டேன்.

''ஆமா..கோவிந்தா சொல்லிண்டே நடந்துட்டேன்'' என்றார்.

நாங்கள் பயந்துபோய் நடந்து வந்ததைக் கூறிய போது பெரியவர் சிரித்தார்.

''என்னை கோவிந்த நாமம் தள்ளிவிட்டது.உங்களை உங்கள் பயமே தள்ளிவிட்டதா. சரிதான் ஆளுக்கு தகுந்த மாதிரி கண்ணுக்குத் தோன்றி அருளுகிறான் போலிருக்கிறது, அந்த வேங்கடவன்'' என்றார் பெரியவர்.

அந்தப் பதிலில் ஒரு அசாதாரணமான உண்மை என் கண்ணுக்குத் தெரிந்தது. ஆளுக்குத் தகுந்த மாதிரி தோன்றி என்று அவர் கூறியதுதான் அதில் ஹைலைட்.

பெரியவர் சந்தேகத்திற்கு இடமில்லாத பக்தி வைத்தார். எனவே சந்தேகத்திற்கிடமின்றி அவருக்கு எல்லாம் கிட்டியது.

சந்தேக சஞ்சலங்களோடு இருப்பதாலேயே எனக்கு நடக்கும் விஷயங்களிலும் அதன் சாயலோ?

குழப்பத்தோடு படுத்த எனக்கு சுரைக்காய் சாமியார் மடத்தில் விடை கிடைத்தது.

'நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்...

நீ நம்பிக்கையுடன் ஆகாயத்தில் பறக்க ஆசைப்பட்டாலும் அது நடந்தேறும். பறந்தே தீருவாய்.

விஞ்ஞானம் என்பது ஒரு அளவுகோல், அந்த அளவு கோலால் எல்லாவற்றையும் அளந்துவிட முடியாது. திடப்பொருளை திரவப் பொருளுக்கான அளவுகோலால் அளக்க முடியுமா?

அது அதற்கு ஏற்ற அளவுகோல் உள்ளது.

அதை முதலில் கண்டறிய வேண்டும்.

இல்லாவிட்டால் பிரயாசைகள் வீணாகி மோசமான அனுபவங்கள் சித்தித்து அதனால் பின் ஞானம் வரும்.

கடவுளை அளக்கவும், புரியவும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் பக்திதான் சரியான அளவுகோல்.

அந்த பக்தியோடு இருக்க இருக்க அந்தத் தெய்வத்தின் நீள அகல உயர பரிமாணங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் உணரப்படும்...

-என்னுள் புதிது புதிதாக எண்ணங்கள். யாரோ அருகே படுத்துக்கொண்டு காதோரமாக சொல்வது போலக் கூட ஒரு பிரமை

சுரைக்காய் சாமியாரே நேரில் வந்து ஞானம் போதிக்கிறாரோ என்கிற அளவிற்கு ஒரு சிலிர்ப்பு.

தூக்கமே வரவில்லை... புரண்டு புரண்டு படுத்தேன்.

ஆனால் அந்த பெரியவரோ பெரிய குறட்டையோடு அடித்துப் போட்ட மாதிரி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

யாத்திரைக்காரர்களுக்குதான் பசி, தூக்கம் சுகமா இருக்கும். சுகம் பற்றியெல்லாம் நன்கு தெரியும் என்று பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அன்று அதைப் பார்த்தேன். மெத்தையில் படுத்தால்தான் தூக்கம் வரும் சிலருக்கு

சிலருக்கு எதில் படுத்தாலும் தூக்கம் பிடிபடாது.

சிலருக்கு இன்கம்டாக்ஸ் கவலை, கடன் கவலை என்று தூக்கம் வராது.

ஆனால் யாராக இருந்தாலும் திருமலைக்கு நடக்கையில் தூக்கம் பிடித்தாட்டும்.

உனக்கு தெய்வம் இலவசமாக வழங்கியிருக்கும் ஈடு இணையில்லாத விஷயம் இது என்று அது சொல்வது போலத் தோன்றும்.

ஓய்ந்திருப்பதும் தூங்கிக் கிடப்பதும் மட்டுமே அந்த நிமிடத்தில் அமிர்தமானதாக ஆகிவிடும். கோடி ரூபாயை தூர வைத்து ஓடிப்போய் எடுத்துக்கொள்ளச் சொன்னாலும் மறுத்துவிட்டு படுத்து விடுவோம்.

மனதுக்கும் ஆரோக்யமும் — அது சார்ந்த ஆனந்தமுமே பெரிதாகத் தோன்றும். மற்றவை பிறகே என்றாகும் யாத்திரையில் உணரப்படும் இந்த உணர்வு அழுத்தமாக பதிந்து விடுவதால், அதன் பின் வாழ்க்கையில் எங்கே எவ்வளவு பணத்தைக் கண்டாலும் அது பெரிதில்லை என்கிற நிதானத்தை மனதுக்குள் ஏற்படுத்தி விடுகிறது.

எப்பேர்ப்பட்ட விஷயம்...?

நினைவோடு படுத்திருக்கும் நான் ஒரு கணத்தில் அயர்ந்து விட்டேன். பின் விழித்து எழுந்தபோது பணம் பெரிதில்லை என்று நினைவோடு படுத்த எனக்கு அதை மிகப்பெரிய ஒன்றாக நினைத்து வேங்கடவனுக்கே நாமம் போடப் பார்த்த ஒருவரின் அனுபவம் காதில் விழுந்தது. அது...

# 15

வேங்கடவனோடு பலர் பல விதமாக உடன்பாடு செய்து கொள்கிறார்கள். சிலர் சனிக்கிழமையானால் விரதம் இருக்கிறேன், வியாதி நீக்கம் செய் என்பர். இன்னும் சிலர் முடி காணிக்கை தருகிறேன், நடந்தே மலைக்கு வருகிறேன், பிச்சை எடுத்து உண்டியலில் காசு சேர்க்கிறேன் என்று வசதிக்கும் விதிப்பாட்டுக்கும் ஏற்ப வேண்டிக் கொள்வது வாடிக்கை. நான் யாத்திரையில் சந்தித்த நண்பர் வேங்கடவனோடு வேறுவிதமாக ஒரு பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்.

அவரது ஜாதகத்தைப் பரிசீலித்த ஒரு ஜோசியர் 'உங்களுக்கு வியாபாரம் சரிப்படாது ஆனால் கூட்டு வியாபாரம் செய்தால் அமோகமாக வருவீர்கள்' என்று கூறியிருக்கிறார்.

கூட்டு வியாபாரமென்றால் நண்பர்கள் துணை சேர வேண்டும். அவர்களும் சேர்ந்து பாடுபட வேண்டும். கருத்து வேற்றுமைகள் கூடாது. விட்டுக்கொடுத்தல், நேர்மை எல்லாம் மிக முக்கியம்

இதெல்லாம் இல்லாவிட்டால் அந்த வியாபாரம் கடைத்தேறாது.

இதெல்லாம் நண்பருக்கும் தெரியும். தெரித்தென்ன பயன்? ஒருவர்கூட அவரோடு சேர்ந்து வியாபாரம் செய்ய முன்வரவில்லை.

இந்த நிலையில் அவருக்கு வேங்கடவன் நினைவு வந்தது.

'வேங்கடவனையே பார்ட்னராக்கிக் கொண்டால்?'

மிகப்பெரிய பலமே தனக்கு வந்த மாதிரியாகி விடுமே...?

நண்பர் யோசித்ததையோடு மனைவியிடம் கலந்தாலோசிக்கவும் மனைவியும் பச்சைக் கொடி காட்டி விட்டார்

'மனிதர்களை நம்பினால் மோசம் போகவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் தெய்வம் ஏமாற்றாது. அதே சமயம் அது தொடர்பான ஒரு விஷயம் தோற்கவும் செய்யாது. எனவே இது உன்னதமான ஒரு முடிவு' என்று மனைவி வியாக்யானமெல்லாம் செய்ய அந்த வியாபாரத்தில் வேங்கடவன் பங்குதாரர் ஆனார்.

பங்குதாரர் வெறுமனே அருள் செய்துவிட்டு உட்கார்ந்திருப்பாரா என்ன? அவருக்கும் லாபத்தில் பங்கு தந்து விடுவது தானே முறை? நண்பர் அதிலெல்லாம் குறையே வைக்கவில்லை. லாபம் எவ்வளவு வருகிறதோ அதில் சரிபாதி வேங்கடவனுக்கு...

மனதில் தீர்மானித்ததை வரவு செலவு நோட்டில் எழுதியும் வைத்து, ஒவ்வொரு வருடமும் வசதிப்படும் சமயத்தில் திருப்பதி சென்று அதை உண்டியலில் சேர்த்து விடுவது என்று முடிவும் செய்து பிரார்த்தனையும் செய்து கொண்டு விட்டார்.

அதன் பிறகென்ன?

ஜோதிடர் சொன்னதாலோ, இல்லை நண்பரின் வியாபாரத் திறமை காரணமாகவோ, அதுவுமில்லை வேங்கடவனே பார்ட்னர் என்பதாலோ, அந்த வியாபாரம் சிகரம் ஏறத் தொடங்கியது.

இத்தனைக்கும் எண்ணெய், புண்ணாக்கு வியாபாரம்தான்.

ஆனால் நேரமும் காலமும் ஒருவருக்கு கூடி வந்தால் கந்தல் துணிகூட காசைக் கொட்டும் என்பார்களே... அது நடக்க ஆரம்பித்தது.

ஐம்பதாயிரம் முதல் போட்டு ஆரம்பித்த தொழில் முதல் வருடமே ஐந்து லட்சம் லாபம்.

அதில் சரிபாதி இரண்டரை லட்சம், ஒப்பந்தப்படி வேங்கடவனுக்கு போய்ச் சேர வேண்டும்.

முதல் வருடம் அன்பர் பக்தி சிரத்தையோடு பணத்தைக் கொண்டு போய் உண்டியலில் போட்டுவிட்டார்.

அடுத்த வருடம் பத்து லட்சம் வந்ததாம். ஐந்து லட்சத்தை ஐந்து தவணையாக சேர்த்தாராம். ஆனால் மூன்றாம் வருடம்தான் புத்திப்பிசாசு வேறு மாதிரி ஆட ஆரம்பித்து விட்டது.

இந்த மூன்றாம் வருட லாபம் கிட்டத்தட்ட 18 லட்ச ரூபாய்.

இதில் ஒன்பது லட்சத்தை கொண்டுபோய் உண்டியலில் சேர்க்க வேண்டும்.

'இவ்வளவையுமா உண்டியலில் போடுவது? இதைக் கொண்டு இன்னொரு தொழில் தொடங்கலாமே...

எந்த மடையனாவது இப்படி கஷ்டப்பட்டு சம்பாதித்ததை உண்டியலில் போய் கொட்டுவானா?

கடவுள் நாம் அளிக்கப்போகும் பணத்தை நம்பியா இருக்கிறார்?

அவர் படைத்த பூமி. அவர் படைத்த மனிதர் நாம். நாம் அவருக்கு கொடுத்து ஆகப் போவது எதுவுமே யில்லை.

நாம் செய்து கொண்டிருப்பது ஒருவித முட்டாள்தன மான காரியமே என்பதுபோல எண்ணங்கள் அவருக்குள் பெருக்கெடுத்து அவரை கட்டிப்போடத் தொடங்கி விட்டன.

அவரது மனைவியோ இது தவறு என்று சொல்லி அவரை மாற்றப் பார்த்திருக்கிறார். முடியவில்லை.

''நீயே சொல்லும்மா... கடவுள்தானே மனுஷனுக்குத் தரணும் மனுஷன் கடவுளுக்குத்தர என்ன இருக்கு. நாமெல்லாம் அல்ப மனுஷங்கம்மா. நாம அன்பைத் தரலாம். பக்திய தரலாம் அதுதான் கடவுளும் நம்ம கிட்ட எதிர்பார்க்கறது.

ஒரு துளசி போதும்மா. அந்த பாலாஜி, அதை பல லட்சம் கோடியாவே நினைப்பான்.

இந்த ஒன்பது லட்சம் நான் யாரையும் ஏமாத்தி சம்பாதிச்சது கிடையாது. இது என் உழைப்பு. கஷ்டப் பட்ட உழைப்பு. போதும்மா இரண்டு தடவைதான் உண்டியல்ல சேர்த்திட்டோமே?''

அன்பர் விதவிதமாக சமாதானம் கூறியிருக்கிறார். மனைவியால் அவரை மறுத்துப் பேசவே முடியவில்லை.

ஆனால் பாருங்கள்; அந்த வருடம் அன்பருக்கு சொல்லி வைத்த மாதிரி ஒன்பது லட்ச ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது.

அதாவது, அவரது சரக்கினை ஏற்றி வந்த லாரி கவிழ்ந்து எரிந்தே போய் டிரைவரும் கிளீனரும் இறந்து அவர்கள் குடும்பம் கோர்ட்டுக்குப் போக ஆடிப்போய் விட்டார் அன்பர்.

மனைவி உடனே இது வேங்கடவன் வேலை என்று உணர்ந்து அவனிடமே சென்று கணவனுக்காக மன்னிப்புக் கேட்டார்.

தன் கணவரைத் திருத்தி செலுத்த வேண்டிய தொகையுடன் திருமலைக்கும் அவரை அழைத்து வருவதாக வேண்டிக் கொண்டார்.

அதன்பின் என்ன...? மலைபோல் வந்த அந்த துன்பம் மெல்லப் பனிபோல் நீங்கத் தொடங்கி விட்டது.' கணவரும் தன் தவறை உணர்ந்து காணிக்கையுடன் திருமலைக்கு வந்து காணிக்கை செலுத்தி மன்னிப்பும் கோரி வழிபட்டார், அத்துடன் இல்லாமல் ஆண்டு தோறும் பாத யாத்திரையிலும் பங்குகொள்ள அவர் முடிவு செய்து கலந்து கொண்டு வருகிறார்.

இந்த விஷயங்களை அவர் என்னிடம் யாத்திரையில் பகிர்ந்து கொண்டபோது வழக்கம் போலவே என்னுள் குயுக்தியான கேள்விகள்.

பாலாஜியாகிய திருவேங்கடத்தான் மேலும் எனக்கு சற்று வருத்தம் கலந்த கேள்விகள்.

அன்பர் வேண்டிக் கொண்டார். வேண்டிக் கொண்ட படி நடக்கவில்லை. வார்த்தை தவறிவிட்டார் அதனால் தண்டிக்கப்பட்டார் என்று நான்கு வரிக்குள் விஷயம் அடங்கிவிட்டாலும், எனக்கென்னமோ இந்த விஷயத்தில் பாலாஜி அப்படி நடந்து கொண்டால் மனிதனுக்கும் பாலாஜிக்கும் என்ன வேற்றுமை? என்றெல்லாம் கேள்விகள்...

இது முற்றி, நிச்சயம் பாலாஜி என்னும் தெய்வம் தண்டித்திருக்காது. தற்செயலாக நடந்த ஒரு சம்பவம் தான். அவர்கள் குற்ற உணர்வு காரணமாக அது பாலாஜியின் செயல் என்று நினைத்துக் கொள்ளச் செய்து விட்டது என்றே முடிவுக்கு வந்தேன்.

ஏன் என்றால் நண்பர் தன் மனைவியிடம் சால் ஜாப்புக்காக சொன்னது போல கடவுள்தான் நம்மைப்

படைத்தது... அதற்கு நாம் பணம் தந்து நிரம்பப் போவதே இல்லை. தந்தால் அதில் அன்பு இருக்கிறது. என்பது வேறு... ஆனால் நாம் தராவிட்டால் அது கோபிக்கும். அதற்கு நஷ்டம் ஏற்படும். அதனால் அது தன் சர்வ சக்தியை கொண்டு மிரட்டியும் தண்டித்தும் வழிக்குக் கொண்டு வரும் என்பதை எல்லாம் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை

இப்படி நினைப்பது கடவுளையே கொச்சைப்படுத்துவது போல் என்று கருதினேன்.

அதனால்தான் அப்படி நினைத்தேன்; அதை நான் சொல்லவும் செய்தேன்.

ஆனால் இதை ஒரு வைதீக விற்பன்னர் மறுத்தார்.

''இல்லை இந்திராஜி..திருப்பதியைப் பொறுத்தவரை ஒப்பந்தங்கள் மீறப்பட்டால் தண்டனை உறுதி. அதை அந்த பாலாஜி தரத்தான் செய்கிறான். அதே போல் ஒப்பந்தப்படி நடந்து கொண்டால் பாதுகாவலாக இருந்து நம்மை தீவினைகளில் இருந்து காக்கவும் செய்கிறான்''—என்றார். சொன்னதோடு விடவில்லை! அதை விளக்கவும் செய்தார்.

# 16

இந்த பூவுலகில் எவ்வளவோ குன்றுகள், மலைகள், அருள் தரும் ஆலயங்கள் இருக்கலாம். ஆனால் திருமலை போல் ஒரு அருள் பட்டினம் எங்குமே இல்லை.

கலியுக தர்மத்திற்கென்றே விசேஷமாக மயனால் சிருஷ்டிக்கப்பட்டது திருமலை. இந்த மலையில் கல்லாக, மரமாக, புல்லாக முளைப்பது கூட ஒரு பெரிய பேறு

என்று பல ஆழ்வார்கள் கூறியுள்ளனர் பாடியுள்ளனர். அதற்கெல்லாம் காரணம் இருக்கிறது.

பொதுவில் இந்த உலகில் எவ்வளவோ நாடுகள். ஆனால் நிலப்பரப்பில் இந்தியாவாகிய ஒரு பாரத தேசத்திற்கு இணையாக எந்த ஒரு நாட்டையும் கூற முடியாது.

இத்தனை பரந்த பூமியில் இந்த இந்திய மண்ணில்தான் சீதோஷ்ண நிலை என்னும் தட்ப வெப்பம் மனித வாழ்வின் ஆரோக்கியத்துக்கு மிக உகந்ததாக உள்ளது. பருவங்கள் மிகச்சரியாக பிரிந்து இயங்கி சேவை செய்கின்றன.

ரஷ்யா வெறும் பனிக்காடு.

ஆப்பிரிக்கா வெறும் வனக்கோட்டம்.

அமெரிக்கா இரண்டும் கலந்த கலவை.

இங்கெல்லாம் சீதோஷ்ண நிலைப்பாடுகளில் ஒரு சீர் கிடையாது. ஆனால் இந்திய மண் அப்படி இல்லை. வசந்த காலம் என்னும் ஒரு அற்புத காலம் இங்குதான் பிரமாதமாக உள்ளது.

சித்திரை, வைகாசியில் வெய்யில் பட்டை உரிக்கும். அதன் காரணமாக இயற்கையின் பல கிருமிகள் அதில் மரிந்து சாம்பலாகிப் போகும் பின் காற்றுக்காலம் வந்து ஆய்வுச் செய்யும். அதன் பின் மழை வந்து குளிர வைக்கும். பின் வசந்தம் வந்து வெயில் மழை காற்று மூன்றையும் சீர் செய்து பெற்று ஒரு இதமான காலமாக்கும்.

இதன் நடுவே தாங்க முடிந்த அளவிற்கு ஒரு குளிர் காலம் தோன்றி வருடிச் செல்லும். மரங்கள் கூட அழகாக இலையை உதிர்க்கத் தொடங்கி பின் சக்தி பெற்று புதுத்தழை பெற்றுப் பொலியும். இதன் காரண

மாக மனித மனங்களில் நிலவும் ஒரு வித தன்மை மிக வலுவானது.

இப்படிப்பட்ட ஒரு மண்ணில்தான் தவம் எளிதாகக் கைகூடும். தன்னையறிதல் சுலபமாக நிகழும். இதன் காரணமாகவே பல மகான்கள் இந்த மண்ணிலேயே அதிகம் அவதரித்தனர். புத்தரும் அவர்களில் ஒருவர்.

இந்த தன்மைகளால்தான் அருள் தரும் ஆலயங்களும், க்ஷேத்திரங்களும் இந்திய மண்ணில் மட்டுமே மிக அதிகம் தோன்றின. மகான்களால் அடையாளமும் காணப்பட்டன.

மற்ற மதங்களில் இல்லாத விசேஷ குணங்கள் இந்த மண்ணின் இந்து சமயத்திற்கு மட்டுமே என்று உரித்தாயிற்று. அன்னிய மண்ணில் உருவான கிறிஸ்துவம், இஸ்லாம் இதிலெல்லாம் கட்டுப்பாடுகள், ஆணைகள் மிக அதிகம்.

ஏன் எதற்கு எப்படி என்கிற கேள்விகளுக்கு இடமில்லாதபடியான ஒரே முனைப்பான நம்பிக்கை மட்டுமே சாத்யம்.

ஆனால் இந்து சமயம் நாத்திகனையும் ஆத்திகனையும் சமமாக பாவித்து இருவரையுமே அணைத்து வழி நடத்துவது ஒன்றாக உள்ளது.

அதனால்தான் பல நாத்திகர்கள் பிற்காலத்தில் ஆத்திகம் சார்ந்து மாறினர். அவர்களது நாத்திக சிந்தையே அவர்களை ஆத்திகத்திலும் அதிகமாக இழுத்தது.

வேறு எங்கும் முளை விடாத மூலிகைகள் இந்த மண்ணில் மட்டுமே கிடைக்கும் வாய்ப்பும் சாத்தியமாயிற்று. தீவிரத் தன்மைகள் கொண்ட மதங்களால் இந்த மண்ணில் வலம் வர வேண்டுமானால் முடிந்தது; நிலை பெற முடியவில்லை.

மண்ணின் மாண்புக்காக இதைச் சொன்னேன். இதில் காலத்தின் மாண்பினை கட்டிக் காத்து உணர்த்துவதே திருமலை. பல கோடி மனிதர்களின் பக்தியாலும் நிலைக்கும் ஒரே நகரம் திருமலைதான். இங்கு போல் ஒரு மனித சங்கமமோ, மன ஒருமையோ இந்த உலகில் வேறு எங்குமே கிடையாது. இதனால் கலெக்டில் பவர் இங்கே அதிகம்.

இதை ஞானிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

அதே சமயம் இந்த திருமலை ஒரு பூலோக குபேரப் பட்டினம் ஆகும். குபேரன் செல்வங்களுக்கு அதிபதி. அவன் பெருமாளுக்கே கடன் கொடுத்தவன். பெருமாளுக்குக் கடனா...? பெருமாளைவிட குபேரன் பெரியவனா? இதென்ன மனிதத்தன்மைகள் என்கிற கேள்வி எல்லாம் மிக சூட்சமமானவை;வேறு கோணத்தில் பார்க்கப் பட வேண்டியவை.

பெருமாள் பட்ட கடனுக்கு குபேரனும் அவன் ஆட்களும் மனிதர்களிடம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகக்கூடி அங்கே ஒரு நிர்வாகம் நடந்து கொண்டிருந்தது. தேவ நிர்வாகம்.

அந்த நிர்வாகிகள் தங்கள் வசூலுக்கு பதில் நமக்குத் தருவது அருள். அதை நாம் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியாது. பெற்றுக் கொண்டால் பலனும் கிடையாது. ஆக கொடுக்கவேண்டியதை கொடுத்து அருளைப் பெற்றுக் கொள்கிறோம். இதை நம்மை வழி நடத்தும் கிரகங்களும் ஒப்புக்கொண்டு வழிவிடுகின்றன.

அதனால்தான் செய்த பாவம் காரணமாக ஒரு துன்பத்தை அனுபவிக்கும்போது திருமலை நினைப்பும் வேண்டுதலும் குறுக்கில்நுழைந்தால் ஆறுதலும் விடுதலையும் கிடைக்கிறது.

கலியுகத்தில் மனிதக் கூட்டத்தின் மன அமைப்புக் கேற்ப தர்மத்தை நெடுநாள் வாழவைக்க அந்த நாரா யணன் செய்த திருவிளையாடலால் உருவானதுதானே திருமலை?

அதே சமயம் எல்லோராலும் இந்த மலையில் கால் வைத்துவிட முடியாது. வினைப்பாடு அனுமதிக்க வேண்டும்.

அவனை வணங்கி அவனருள் பெற நமக்குக் கொடுப்பினை இருக்க வேண்டும். இல்லாத நிலையில் திருமலைக்கே போனாலும் மலை ஏறத் தோன்றாது; முடியவும் முடியாது.

அவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டு விட்டால் பின் எப்படி நடந்துகொள்ள வேண்டும்; இடையில் மனம் மாறினால் என்னாகும் என்பதற்கு வேங்கடவனை பங்கு தாரராக்கிக் கொண்ட நண்பரின் செயலே சான்று.

அதன் நிமித்தம் எனக்குள் தோன்றிய கேள்விகளுக் கான விடையில்தான் திருமலையில் ஒரு தேவ அரசாங் கமே நடக்கிறது என்பதைப் பற்றிய விவரம் எல்லாமே கிடைத்தன. அந்த வேங்கடவனிடம் வேண்டிக்கொண்டு பின் அதன்படி நடக்காமல் போனவர்களுக்கு இது மிக நன்றாக புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

ஆனால் மற்றவர்கள் வரையில் அந்த ஸ்தலம் உலகில் உள்ள மற்ற ஸ்தலங்களைப் போலத்தான். இருந்தாலும் ஒரு விஷயத்தைப் பற்றி எல்லோருக்குமே வியப்பு உண்டு. ஜனங்களில் எம்.ஜி.ஆர். மேலான கரிஸ்மா எப்படி இன்றைக்கும் பழைய மவுசு குறையாதபடி இருக்கிறதோ அதே போல திருப்பதிக்கு மட்டும் எதற்கு அப்படி ஒரு கூட்டம்? அங்கு மட்டும் ஏன் எல்லோரும் போய் விழுகி றார்கள்? என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டியவை என்பதுதான் அவர்கள் கருத்து.

பக்தி, நம்பிக்கை என்று இரண்டு வார்த்தைகளில் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லிவிட்டுத் தாண்டிச் செல்ல முடியாது. இந்த பக்தியும், நம்பிக்கையும் மதுரை மீனாட்சியிலிருந்து, பழனி முருகன் வரை எல்லோர் மேலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் திருப்பதி போல் ஒரு கூட்டம் எங்கும் இல்லை.

உலகிலேயே மனிதர்கள் மிக அதிகம் ஒருமுனைப்படும் இடம் திருப்பதி மட்டுமே என்பது வெறுமனே வியப்பதற்கான விஷயமோ இல்லை கின்னசுக்கான விஷயமோ மட்டுமல்ல...?

இந்தக் கேள்விக்குப் பின்னால் மிகப்பெரிய புதிர்கள் உள்ளது; ஞான ரகசியம் உள்ளது. திருமலையை குபேரனின் வகையறாக்களும் தேவ தூதர்களும் நிர்வாகம் செய்கிறார்கள் என்பது அதில் கண்டறியப்பட்டிருக்கும் ஒரு துளி. அவ்வளவே!

மனோதத்துவ நிபுணர்களும் திருமலை பற்றி வியப்புத் தெரிவித்துள்ளனர். எனக்குத் தெரிந்து ஒரு மனோதத்துவ நிபுணர் பாலாஜி பக்தர். ஆனால் இதை அவர் பிரம்ம ரகசியமாக வைத்திருந்தார்.

சாதாரணமாக மெத்தப் படித்தவர்கள், துவக்கம் முதலே செல்வச் செழிப்போடு வளர்ந்து, வருபவர்கள். ஆயிரம் பத்தாயிரத்தை சாதாரணமாக பார்க்க முடிந்தவர்கள் அவ்வளவாக தெய்வ சிந்தனையோடு இருக்க மாட்டார்கள். இருந்தாலும் அது பிறரைப் பார்த்து பழக்கத்தில் வந்த சாதாரண ஒன்றாகத்தான் இருக்கும்.

அதிலும் மனம், அதன் இயல்பு பற்றியெல்லாம் ஆராய்ந்தடிப் பார்ப்பவர்கள்—மனிதனே குரங்கின் பரிணாம வளர்ச்சியால் மனிதனானவன் என்று கூறுகின்றார்கள்.

இயற்கையை வேண்டுமானால் சர்வ சக்தி மிக்கது என்று கூறுவார்களேயின்றி கடவுள் அது சார்ந்த நம்பிக்கைகளை மிக பலவீனமாகத்தான் கருதுவார்கள்.

மனதுக்கு பிடித்துக்கொள்ள ஒன்று கிடைத்து விட்டால் அதற்கு இறுக்கம் தளர்ந்து விடும். இது மனதின் பிறவி இயல்பு. அதிலும் நம்மைப் பாதுகாக்க என்று ஒன்று இருக்கிறது. நாம் அச்சப்படத் தேவையில்லை. எனும் எண்ணமும் நம்பிக்கையும் தான் மனிதனை சந்தோஷமாகவே வைத்திருக்கிறது. நாளைய பொழுதிற்கென மனிதன் இன்றே சேமித்து வைப்பது அந்த நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ளத்தானே?

அதனால்தான் தன்னைப் போலவே அச்சமும் அவநம்பிக்கையும் சார்ந்த தனது சக மனிதர்களை மீறி அவனுக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டு அதன் எதிரொலியாக வேறுவிதமான நம்பிக்கைகள் மனதிற்கு தேவைப்படுகின்றன.

இறை நம்பிக்கை அதில் தலையானது.

அதிலும் உடனுக்குடன் தீர்வு தரும் இறை நம்பிக்கை மற்ற நம்பிக்கைகளை வேகமுடன் முந்துகிறது அதில் வேங்கடவன் முன் நிற்கிறான் என்பது சான்றோர் நம்பிக்கை. இல்லையில்லை எல்லாம் மனித எண்ணங்களின் வலிமை என்பது மனவியல் நிபுணர்களின் கூற்று.

எப்படி?

எங்கே ஜன சமுத்திரமானது ஒருமுகப்படுகிறதோ, எங்கே ஒரு மனது தனது பிரச்சினை நீங்கி விட்டதாக உறுதிபட நம்புகிறதோ, எங்கே மனிதன் கவலை கலக்கம் இவைகளை மூட்டை கட்டிவிட்டு நம்பிக்கை ஒன்றை மட்டுமே மனதில் கொண்டு செயல்படுகிறானோ அங்கே ஒரு collective power — அதாவது, ஒருவித ஒட்டுமொத்த சக்தி உருவாகிறது.

அது அலை அலையாகப்பரவி அங்குள்ள மற்றவர்கள் மனதிலும் தாக்குதலை உருவாக்கி மனதைச்சமன் செய்து இதம் தருகிறது என்பது இவர்கள் விளக்கம்.

திருப்பதிக்கு வருபவன் நிச்சயம் பாலாஜி காப்பாற்று வான் என்கிற நம்பிக்கையோடு வருகிறான், அடுத்து வணங்கி விட்டு வெளியே வரும் போது பாரம் நீங்கியது போல இலேசாக இருக்கிறான். மூன்றாவது தான தருமங் களில் ஈடுபாடு காட்டி சக மனிதர்களின் துயரம் தீர்க்க துளியாவது விழைகிறான்.

அதாவது மனதில் நம்பிக்கை—பின் கவலை நீங்கி விட்ட இன்ப உணர்ச்சி—அதற்கும் பின் சமூக ஈடுபாடு என்று, மூன்று நிலைகளில் திருமலைக்குச் செல்லும் ஒவ்வொருவரும் உள்ளாகிறார்கள். இதெல்லாம் திட்ட மிடாமல், தெரியாமலே நடக்கிறது.

இப்படி மூன்று தன்மைகள் இரண்டறக் கலந்த ஒரு நிலையை மனிதக் கூட்டம் சங்கமிப்பதை வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாது. பார்க் பீச், சினிமா தியேட்டர் என்று பல இடங்களில் ஜனக்கூட்டம் ஒன்று சேர்ந்தாலும் அங்கு வேறு வேறு எண்ணம் கொண்டவர் களாகவே மனிதர்கள் இருப்பார்கள். அதை யாராலும் சட்டம் போட்டோ, திட்டம் போட்டோ கூட மாற்ற முடியாது.

இப்படி நம்பிக்கை, இன்ப உணர்வு, சமூக ஈடுபாட் டோடு மனிதன் எங்கே ஒன்று திரண்டாலும், அங்கே ஒரு பெரிய சக்தி அலை உருவாகும். அது அந்த மனித கூட்டத்தை மேலும் மேலும் சுத்திகரித்து நெறிப் படுத்தும்; வலுப்படுத்தும்; சந்தோஷப்படுத்தும். ஆக மொத்தத்தில், எல்லாம் எண்ணங்களின் வலிமையால் தான் என்பது மனவியல் நிபுணர்கள் கருத்து.

இந்த கருத்தையும் மறுத்துவிட முடியவில்லை.

ஆனால் இப்படி ஒரு கருத்தை உடைய மனவியல் நிபுணர் தன் பர்ஸில் பாலாஜி படத்தை வைத்திருப்பதையும், தன் வருமானத்தில் ஒரு பர்சன்டை பாலாஜிக்கு [illegible] வருவதையும் நான் தற்செயலாக தெரிந்து கொண்டபோது வியந்து போனேன்.

அது பற்றி அவரிடமே கேட்டேன்.

அவர் சொன்னதைப் பற்றியும், வாஸ்துப் பூர்வமாக திருமலை பற்றி வாஸ்து சாஸ்திர நிபுணர்கள் சொல்லியிருப்பதையும் இனி எழுதுகிறேன்.

அதற்கு முன் ஒரு செய்தி.

இந்தக் கட்டுரைத் தொடர் பிறப்பதற்கே காரணமான—எனது யாத்திரை ஞானத்திற்கே அடித்தளம் இட்டுத் தந்த அமைப்பான, ஸ்ரீ வெங்கடேஸ்வர பக்த சமாஜத்தின் புரட்டாசி மஹோத்சவம் பெரம்பூர் 81, பட்டேல் ரோட்டில் உள்ள ஆனந்த நிலையத்தில் வெகு விமரிசையாக நடக்கிறது.

பட்டிமன்றம், உபன்யாசம், அன்னதானம் அகண்ட நாம பஜனை என்பதோடு இந்த சமாஜத்திற்கே தனிச் சிறப்பு சேர்க்கும் ஸ்ரீனிவாச கல்யாண வைபவம் நிகழ்ச்சி பெரம்பூர் ரயில் கல்யாண மண்டபத்தில் படு விமர்சையாக நடைபெறும்.

ஒரு முறை வந்து பார்த்தால் ஆயுளுக்கும் பார்க்க விரும்பும் ஆசையை அது உருவாக்கும். அந்த திருமலையே இடம் பெயர்ந்து பெரம்பூருக்கு வந்து விட்டது போலத் தோன்றும்.

இதை வாசிக்கும் அன்பர்கள் எவ்வளவு பணி இருப்பினும் ஒதுக்கிவிட்டு கல்யாண வைபவத்திலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ள வேண்டுகிறேன்.

இந்த கல்யாணத்தில் வாசக அன்பர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டும் பங்கு பெறலாம். ஸ்ரீனிவாச கல்யாணத்திற்கு ரூ. 125-ம், நித்ய அர்ச்சனைக்கு ரூ. 25-ம் தந்தால் போதுமானது.

ரூ. 1001 நன்கொடை அளிப்பவர்களுக்கு அவர்கள், விரும்பும் ஆங்கிலத் தேதியில் வாழ்நாள் முழுவதற்குமான அர்ச்சனை ஆண்டுதோறும் செய்யப்பட்டு பிரசாதம் அனுப்பித் தரப்படும்.

இப்படிச் சேரும் தொகையைக் கொண்டு ஏழை மாணவர்களுக்கு புத்தக வங்கி அமைத்து உதவுவது, அன்னதானம் செய்வது, ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி செய்வது போன்றவை செய்யப்படும்.

மலைக்கு நடந்து வந்து வணங்குவதற்கும் மேலானது இப்படிச் செய்யும் தர்ம காரியம். இதைப் படித்து தொகை அனுப்ப விரும்புகின்றவர்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

செகரட்டரி ஸ்ரீ வேங்கடேஸ்வர பக்த சமாஜம் சாரிடபின் ட்ரஸ்ட், 81, பட்டேல் சாலை, பெரம்பூர், சென்னை-600 011.

இந்தக் கட்டுரையை வாசித்து வரும் அன்பர்களை மெய்யன்போடு உதவிட வேண்டுகிறேன். அப்படியே நிகழ்ச்சியிலும் பங்குகொள்ள அழைக்கிறேன்.

# 17

நான் விடுத்த வேண்டுகோளுக்கு நல்ல பலன் தெரிந்திருக்கிறது. தமிழகம் என்றில்லாமல் பம்பாய், டெல்லியில் இருந்தும் பல மெய்யன்பர்கள்

வெங்கடேச பக்த சமாஜத்திற்கு பெருந்தொகையை அனுப்பி உதவி இருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் என் நன்றி.

வேங்கடவனின் பரிபூரண அருள் அவர்களுக்கு சித்திப்பதாக...

கடந்த 19—9—99-ம் தேதியன்று பாத யாத்திரை மேற்கொள்ள உள்ள அன்பர்கள் மாலாதாரணம் செய்து கொண்டோம்.

இந்த ஆண்டிற்கான திருமலை விரதம் தொடங்கி விட்டது. வரும் 3-ம் தேதி முன்பே குறிப்பிட்டது போல, பெரம்பூரே வியக்கும் திருக்கல்யாண உற்சவம் ஆரம்பமாகப் போகிறது.

தொடர்ந்து 25-ம் தேதியை ஒட்டி பாத யாத்திரையும் தொடங்குகிறது.

இவ்வேளையில் மாலாதாரண நிகழ்ச்சியின் போது எனக்கு நேரிட்ட அனுபவம் பெரும் சிலிர்ப்பைத் தந்தது. அதைப பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

இந்த கட்டுரைத் தொடரில் அந்த வேங்கடவன் பற்றிய எல்லாவிதப் பார்வையும் பார்த்து விட்டேன் எனலாம்.

சாதாரணமாக பக்திப் பூர்வமாக எழுதப்படுகின்ற விஷயங்களில் அலசி ஆராய்வது இருக்காது. சரணகதியும், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து செயல்படும் விஷயங்களுமே இருக்கும்.

அதில் இந்த யாத்திரை ஞானம் தொடர் வேறு பட்டது. இதில் மனம், அதன் இயல்பு மற்றும் பக்தி

சார்ந்த விஷயங்களின் பலம் மற்றும் பலவீனம் அனைத்துமே அலசப்பட்டு வருவதாகக் கருதுகிறேன்.

அத்துடன் திருமலையையும், அந்த வேங்கடவனையும் எடையிட்டுப் பார்க்கும் ஒரு முயற்சியாகவும் அது இருப்பதை மறுப்பதற்கில்லை.

இது சரியா? தவறா? என்ற கேள்விக்கே நான் சொல்லவில்லை. நான் ஒரு மனிதன். பகுத்தறிவு மனிதனின். பலங்களில் ஒன்று (இல்லையில்லை அவனது பெரிய எதிரியே இதுதான் என்பாரும் உண்டு.)

அந்த பலத்தின் தளத்தில் நின்று நான் செயல்பட்டு வருவதை வாசிக்கும் பலரும் ஒரு நாத்திக உள்ளம் எப்படி பாலாஜியால் ஆத்திகத்துக்கு வந்தது (அ) திரும்பியது என்பதைத்தான் இந்த கட்டுரையில் நான் விவரித்து வருகிறேன் என்றும் நினைக்கலாம்.

மொத்தத்தில் ஒன்று உறுதி. பாலாஜியை பார்த்து கேட்கப்படும் கேள்விகள்... அதற்கு கிடைக்கும் விடைகள்; இவற்றை அலசும் போக்கு; இதுதான் இந்தக் கட்டுரை.

இந்த நிலையில் மாலை தரித்துக் கொள்ளும்போது முற்றிலும் எதிர்பாராதபடி ஒரு சம்பவம் எனக்கு மட்டும் நிகழ்ந்தது.

எந்த சிக்கலும், சிடுக்கும் இல்லாத எனது உருத்ராட்ச மணிமாலை பட்டரிடம் வழங்கப்பட்டு அதை அவரும் பிரசன்ன வெங்கடாஜலபதியின் திருவடியில் வைத்து மீண்டு வந்து சார்த்த முனையும்போது, ஏராள சிக்கல் முடிச்சு...!

வேடிக்கை என்னவென்றால் மற்ற அன்பர்களது மாலைகளில் துளசி கூட அவ்வாறில்லை. மகா நேர்த்தி

யாக துளசியோடு சேர்ந்து கழுத்தில் விழுந்து கம கமத்தது.

என்னுடையதில் சொல்யூஷனுக்கு காத்திருக்கும் புதிர்க் கணக்குபோல,சரி செய்யவே முடியாதபடி சிக்கல்.

கண் எதிரே பார்த்துக் கொண்டிருக்கும்போது மிக நீட்டாக வழங்கப்பட்ட ஒன்று, எப்படி இப்படி யாரோ உட்கார்ந்து திட்டமிட்டு ஒன்றுக்குள் ஒன்றை நுழைத்து போட்டார்கள் என்பதுபோல...மாறியது? கிட்டத்தட்ட அரைமணி நேரம் போராடியும் சிக்கல் தீரவில்லை. மாறாக கை வைத்தவர்கள் சிக்கலைக் கூட்டினார்கள்.

பின் ஒரு கண்ணியை விடுவித்து ஒவ்வொரு சிக்கலாக அவிழ்த்த பிறகே மாலை நேர்பட்டது. அதன் பின்தான் என் கழுத்திலும் விழுந்தது.

இதை ஒரு தற்செயலான சம்பவமாக என்னால் நினைக்க முடியவில்லை. கண் எதிரில் நேர்ந்த ஒரு விசித்ர அனுபவம்.

இந்தத் தொடரில் நான் போடும் முடிச்சுகள், விடைகாண விழையும் விருப்பங்கள் போலவே மாலையும் அமைந்து விட்டது போலவும், அதற்குக் கடைசி வரை விடை இல்லாமல் கண்ணியை கத்தரித்து முடித்த பிறகே சிக்கலைத் தீர்க்க முடிந்தது போலவும் எனக்குத் தோன்றியது.

மாலையில் கண்ணி...என் மனதில் சந்தேகமோ?

எது எப்படி இருந்தாலும் பாலாஜி ஒரு பேசும் தெய்வம் எனும் நிதர்சனத்தைப் பார்த்த பிறகு மனதில் சொல்ல முடியாத பரவசம்.

'நான் உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டே இருக்கி

றேன். அது உனக்குத் தெரிகிறதா? தெரிந்தால் அதை எப்படி எடையிடுவாய்' என்றும் கேட்பதைப் போல் தோன்றியது.

இந்த மாலாதாரணத்தின் போது எனக்கு மட்டுமல்ல இந்த அனுபவம்; வெங்கடேச பக்த சமாஜத்தின் அமைப்பை நிறுவி அதை முறையாக வழிநடத்தி வரும் திரு சேஷன் அவர்களுக்கும்கூட இந்த முறை ஒரு வித்தியாசமான அனுபவம் சித்தித்தது. அதை அவர் என்னிடம் பகிர்ந்து கொண்ட போது எனக்கு மேலும் பிரமிப்பு தட்டியது.

சேஷன் அவர்களைப் பற்றி முன்பே நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். கர்ம சிரத்தையான மனிதர்.

வெங்கடேச பக்த சமாஜம் இன்று பெரம்பூரில் ஒரு பெரிய திருமண மண்டபத்திற்கு ஒப்பான கட்டடத்துடன் உற்சவ மூர்த்தியுடன் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றால் திரு சேஷனும் அவரது நண்பர் குழாமுமே காரணம்.

அவரும் சரி அவரது சகாக்களும் சரி; வேங்கடவனுக்காக தங்களை அர்ப்பணம் செய்து கொண்டவர்கள். பக்தி சிரத்தையோடு சமூக சேவையும் இவர்கள் இலக்கு. அதற்காக மடிப்பிச்சை எடுக்கவும் துளிகூட ·சுணங்காதவர்கள்.

அந்த வகையில் இவ்வாண்டு திரு. சேஷன் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த சமயம் தங்கள் செயல்பாடுகள். பற்றி ஒரு வி.ஐ.பி.யிடம் விவரிக்கும் போது, 'திருமலையில்கூட இப்படி ஒரு உற்சவம் சிறப்பாக நடக்காது. நாங்கள் அதைவிட சிறப்பாக செயல்படுத்துகிறோம்' என்று சற்றே பெருமை மின்ன பேசிவிட்டார்.

இப்படிப் பேசுவதற்கு முன்புவரை நிலவிய ஒருவித சௌஜன்யமான நிலையும், சில உதவிகரமான போக்கு

களும் அதன்பின் அப்படியே மாறிவிட்டது. கிட்டத் தட்ட நான்கு நாட்கள் ஒரே இழுபறியான, அலைச்ச லான போக்கு.

அதன்பின் ஒரு நண்பர் இப்படிப் பேசியதை சுட்டிக் காட்டி, இதன் காரணமாக வேங்கடவன் நம்மை சோதிக்கிறானோ என்னவோ என்று எடுத்துக்காட்டி னார். திரு சேஷனும் 'அடடா, என்னையு மறியாமல் கர்வத்தோடு பெருமைப்பட்டு விட்டேனே' என்று எண்ணி வருந்தி, உண்டியலில் ஒரு பத்து ரூபாயை கட்டிக் காணிக்கையாக செலுத்தினார்.

மறுநொடியே தொலைபேசி அழைப்பு வந்து நல்ல செய்தி காதில் விழுந்தது. மந்திரம் போட்டதுபோல சில மணி நேரத்தில் எல்லாமே மாறி உரியவை கிடைத்து விஷயங்கள் சீராகி விட்டன என்றார்.

'இருபது ஆண்டுக்கும் மேலான இறைபணியில் இருந் தும், அவ்வப்போது அகந்தை துளிர் விடத்தான் செய் கிறது. அதை அவனும் அகற்றத்தான் செய்கிறான்' என்றார்.

வேங்கடவன் விஷயத்தில் அவர் விஷயமே இப்படி என்றால், என் வரையில் எதைச் சொல்ல...?

ஒரு விஷயம் மிக மகிழ்ச்சி தருகிறது. வேங்கடவ னால் கண்டிக்கப் பெற்றாலும் அதுகூரும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. ஆம்... அந்த சாக்கிலாவது அவன் பார்வைக்கும் பரிவுக்கும் உள்ளாகின்றோமே என்பது தான் அது...

மொத்தத்தில் ஒன்று புரிந்தது; தெள்ளத் தெளிவாகப் புரிந்தது; எல்லோரையும் அவன் ஆட்டி வைக்கிறான். சிலர் தவறுதலாக நடந்து கொண்டாலும் அதற்கு ஒரு சரியான காரணம்இருக்கிறது.அந்த தவற்றின் விளைவில்

ஒரு தத்துவமோ, நீதியோ பிறந்து பலருக்குப் பாடமாகிறது.

காரணமில்லாமல் எதுவுமேயில்லை.

எனவே நாத்திகச் சிந்தனைகளை நொந்து கொள்ளத் தேவையில்லை. ஆத்திகச் சிந்தனையிலும் அகந்தை கொள்ள எதுவுமேயில்லை. இரண்டுமே ஒன்றின் இரண்டு பக்கங்கள் போலத்தான் உள்ளன.

நம்பிக்கையோடு, புறத்தைப் பார்த்து புத்தியை தொலைக்காமல், அவ்வப்போது நம்பிக்கை, அவ்வப்போது சந்தேகம் என்று ஒரு நிலைப்பாடு இல்லாமல் தத்தளிக்காமல், சரணாகதி அடைந்து விட்டால்! எல்லாவற்றையுமே அவன் பார்த்துக் கொள்கிறான் என்பது நிதர்சனமாகத் தெரிகின்றது.

அனுபவங்கள் அதைத்தான் உணர்த்துகின்றன. நம்முடைய புத்தியைக் கொண்டு அவனை அளக்கவே முடியாது என்பதும் இந்த அனுபவங்களில் புலனாகிறது.

புத்திதான் எல்லாம் என்றால், எனது மாலையில் ஏற்பட்ட சிக்கலை நானே சரி செய்து கொண்டிருக்க வேண்டும். திரு சேஷனுக்கும் அவரது செயல்பாடு அரணத்தில் மாறாமல் உடன் வெற்றியைத் தந்திருக்க வேண்டும்.

''என்னை சரண் புகுந்த உன்னைத் துக்கப்பட விட-மாட்டேன்' என்கிறது.வேங்கடவன் விஷயத்தில் சத்யம், நிதர்சனம்...!

இப்படி நம்புகின்றவர்களுக்கு அருளத்தான் பூமி இலக்கணப்படி அந்த வேங்கடவன் வாஸ்து சிறப்போடு உள்ள இடத்தை தேர்ந்தெடுத்தானோ என்று கூடத் தோன்றுகிறது.

திருமலை போல் வாஸ்துச் சிறப்பு மிக்க ஒரு இடத்தை பார்ப்பது கடினம். அதற்கு முன் வாஸ்து சாஸ்திரம் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

மண் மீது வாழும் மனிதன் அதன்மேல் நின்று அது தரும் உணவினால் ஜீவித்து அதன்மேல் தவழும் காற்றால் சுவாசித்து அதன் பஞ்சபூத ஆதிக்கத்தில் இருந்து கொண்டுதான் செயல்பட முடிகிறது.

இந்நிலையில் வாழும் இடத்திற்கேற்ப வாழும் நெறி முறைகளும் மாறிவிடுகின்றன. வளமான இடத்தில் வாழும் மனிதன் வளமானவனாக இருக்கிறான்.

வறண்ட நிலத்தில் இருப்பவன் வாழ்க்கையிலும் எல்லா விதத்திலும் வறட்சி தெரியத்தான் செய்கிறது. ஒரு வாழ்வை தீர்மானிப்பதில் நாம் சார்ந்திருக்கும் இடத்திற்குமுள்ள பங்கு இதனால் விளங்கும்.

இந்த இடத்தை வெறும் கல்மண்ணாய் பார்க்காமல், அதன் சக்தியை மூன்றாவது கண்கொண்டு அதைப்பற்றி சொல்லிச் சென்றிருப்பதுதான் வாஸ்து சாஸ்திரம்.

இது கட்டாந்தரையிலும் கனகத்தைப் பெற்றுத் தர வழி காட்டுகிறது.

''மனிதா நீ வாழும் பூமியை அதன் திசைகளை, அவைகளுக்கு உள்ள சக்தியை புரிந்துகொள். அதற்கேற்ப

நீ இந்த மண் மேல் உன் இருப்பிடத்தை அமைத்துக் கொள். முதலில் நீ அதனைப் புரிந்துகொண்டு அமைத்துக் கொள். பின் அதுவே உன் வாழ்க்கையை உமக்கு எல்லா விதத்திலும் வளமாக அமைத்துத் தரும்' என்பதுதான் வாஸ்து சாஸ்திரம்.

அதன்படி அது கிழக்கைப் பற்றியும், மேற்கைப் பற்றியும், வடக்கு தெற்கைப் பற்றியும் கூறி அவைகளின் தன்மையையும் குறிப்பிடுகிறது.

கிழக்கு ஒளி பொருந்தியது, மேற்கு அந்த ஒளியைக் கட்டுப்படுத்துவது. வடக்கு இதன் நேர்த்தியை தன தாக்கிக் கொண்டிருப்பது. தெற்கு இந்த மூன்றின் தாக்கத்தாலும் உள்ள இந்த மூன்றை மிஞ்சிய தன்மை இருக்கிறது என்பது அதன் சுருக்கம்.

இது எப்படி நமது வாழ்க்கைக்கு உதவுகிறது. இதற்கும் திருமலைக்கும் உள்ள தொடர் எப்படிப் பட்டது?

# 18

வாஸ்துவுக்கும் திருமலைக்கும் உள்ள தொடர்பு எப்படிப் பட்டது என்ற கேள்வியோடு நிறுத்தியிருந்தேன்.

அதற்கு முன் சில விஷயங்கள்...

இந்த ஆண்டிற்கான பெரம்பூர் வெங்கடேச பக்த சமாஜத்தின் திருக்கல்யாண உற்சவம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

கட்டுக்கடங்காத கூட்டம்... காணச் சிறப்பான காட்சிகள் என்று அதி அற்புதம்.

இம்முறை நிகழ்ச்சி ஏற்பாடுகளும் வெகு நேர்த்தியாக செய்யப்பட்டிருந்தன. பங்கேற்ற அனைவருக்கும் பாக்கு மட்டைத் தட்டில் அறுசுவை உணவளித்த விதம் அதில் சிகரம்.

அப்படியே மேடையில் திருக்கல்யாண வைபவத்தின் போது அந்த பெருமாளே நேரில் வந்தது போல மூன்று இளம் பெண்களுக்கு பெருமாளின் திருக்கோல அழகைப் பூட்டி அலங்கரித்து அவர்களை மேடையில் நிறுத்தி தெய்வீகத் திருமணத்திற்கு புதுப்பொலிவையும் பார்வையும் உண்டு பண்ணினார்கள்.

காஞ்சியில் இருந்து வந்திருந்த பட்டாச்சாரியார் கண்ணூஞ்சல் பாட்டிற்கு ஆடிய அழகு; அந்த பெண்கள் ஸ்ரீதேவி பூதேவியாக அவரை அடியொற்றி ஆடி பெருமாளுக்கு மாலையிட்ட விதம்... எல்லாமே அற்புதம்; ஆனந்தம்!

பங்கு கொண்டு பார்த்து; ரசித்தவர்கள் பாக்யசாலிகள். அவர்களுக்கு பெருமாள் அனுக்ரஹம் நிச்சயம் நிரம்பவே உண்டு.

சரி...

வாஸ்துவுக்கு வரட்டுமா?

இன்று வாஸ்து மிகப்பெரிய அளவில் பேசப்படும் ஒரு அதிரகசியமான விஷயம். நிறைய வாஸ்து சாஸ்திர நிபுணர்கள் இன்று நாட்டில் இருக்கிறார்கள். இது தொடர்பாக பல புத்தகங்களும் வந்து விட்டன.

அதில் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட அது என்ன என்று கேட்டு அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கி விட்டனர்.

வாஸ்துவிற்கு மட்டுமல்ல இந்தநிலை. ஜெம்மாலஜி எனப்படும் நவரத்னக் கற்களுக்கும். ரெய்கி எனப்படும்

புதியயோகப் பயிற்சி முறைக்கும் கூட இன்று பரபரப் பான ஒரு பார்வை, பேச்சு இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் ஒரு சீசன் என்கிற மாதிரி இதற் கும் ஒரு சீசனோ, என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் வாஸ்து அப்படி இல்லை. அது உண்மையி லேயே ஒரு அறிவியல் சார்ந்த அற்புத விஷயம். அத் தனை சுலபமாக அறிவிற்கு புலப்படாத ஒன்றும்கூட.

வாஸ்துவை வைத்தும், அதன் பலா பலன்களை வைத்து பார்க்கும்போது நமது மதத்தின் மேலும் அதன் அபார விளக்கங்களின் மேலும் மிகுந்த மரியாதை ஏற் படுவதை யாராலும் தவிர்க்க முடியாது.

இந்த பூமியில் வாஸ்து புருஷன் என்று ஒருவன் இருக் கிறான். அவன் நித்ய உறக்கத்தில் இருப்பவன். எப் பொழுதாவதுதான் எழுந்திருப்பான். அப்பொழுது அவனது பார்வை படுவதில் பலவித விசேஷங்கள் இருப்ப தாகவெல்லாம் புராண இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்த மண் அவனது ஆதிக்கத்தில் உள்ள ஒன்று. அவன் திசைகளை கட்டி ஆள்பவன். அவன் அருள் மட்டும் ஒருவருக்கு இருந்து விட்டால் திசைகள் வசப் படும். திசை வசப்பட்டால் அதன்காவல் தெய்வங்கள் வசப்படுவார்கள். அதன்பின் அவர்கள் அனுக்ரஹிப் பார்கள். அது இந்த மண்மேல் பூதஉடல் கொண்டு நாம் வாழும் நாளில் நமக்குப் பேருதவியாக இருக்கும் என்பது தான் வாஸ்துவின் அடிநாதம்.

வாஸ்துவைப் பற்றி இதற்கும் மேலாக விவரிப்பவர் களும் உண்டு. ஒருவன் பரம தரித்திரனாக இருந்தாலும் வாஸ்து சிறப்பு உள்ள ஒரு மனைக்குள் குடி புகுவானா கில் அவன் எல்லா நலன்களும் பெற்று மேம்படுவான் என்

பார்கள். அவனது பாப புண்ணியங்கள். வினைகள் கூட அவனை எதுவும் செய்ய முடியாது. வாஸ்து பலன் அவனைக்காப்பாற்றி இன்பமயமான மனிதனாக ஆக்கி விடும். வாஸ்துவுக்கு அப்படி ஒருசக்தி என்கிறார்கள் இவர்கள்.

அது எப்படி சாத்தியம் என்ற கேள்விக்குள் பதில் மேலும் விரிகிறது.

இந்த மண்ணில் வாஸ்துபலம் என்பது மனிதனுக்கு மட்டுமில்லை தெய்வத்துக்கும் அது வேண்டும் என்பது தான் அதன் உச்சம்...

இந்த மண்ணைப் படைத்த இறைவனையுமா வாஸ்து கட்டி ஆள்கிறது?

ஆம்...என்பதுதான் உண்மை.

நீரென்றால் ஜில்லென்றிருக்க வேண்டும். தாகம் தீர்த்தாக வேண்டும் என்பது எப்படி அதன் பௌதிக இயல்போ, அதுபோல ஒரு சாஸ்திரத்தின் பலாபலன்கள் தெய்வம் மனிதன்என்று எல்லோருக்குமே பொதுவாக இருக்க வேண்டும் என்பது நியதி.

பொதுவில் ஆலயங்களை மனிதன்தான் கட்டுகிறான். அதுவும் அவனது ஷேமலாபங்களுக்காக... அங்கே இறை யருளை வளர்த்துச் சேமித்து மனிதர்களுக்கு அதை பயன் படுத்துகிறான்.

அப்படி இறையருளை சேமித்து வைக்கும் வங்கிகள் தான் ஆலயங்கள்! அந்த வங்கி பழுதில்லாதபடி பாதுகாப் பானதாக இருக்க வேண்டுமல்லவா?

இங்கேதான் வாஸ்து கடவுள் அருளையும் கண்ட் ரோல் செய்யும் மெய்ன் பவர் ஆக மாறுகிறது!

வாஸ்துவை பற்றி சொல்லும் முன் மண்மேல் காற்று மண்டலத்தில் உலாவரும் நவக்கிரகங்களின் கதிர் வீச்சு மற்றும் திசைநாயகர்களின் அருட் கதிர்வீச்சு பற்றியெல்லாம் யோசிக்க வேண்டியுள்ளது. இவை இன்று விஞ்ஞான உலகில் வலம்வரும் ரேடியோ அலைகளை போன்ற ஒன்றே...ரேடியோ அலைகளை ரேடியோ பெட்டியில் ட்யூன் செய்து பிடித்து அதன் சப்தத்தை பாடலாக, பேச்சாக நாம் உணர்வது போல இந்தக் கதிர் அலைகளை ட்யூன் செய்து நமது வாழ்க்கைக்கு பயன்படுத்திக் கொள்ளும் மார்க்கத்தை காட்டுவதுதான் வாஸ்து.

அதன்படி கிழக்குப்புறம் இதில் விசேஷமானது. ஒரு வீட்டின் மேல் கிழக்கில் தடைகள் இன்றி சூரியக்கதிர்கள் ஊடுருவி உள்புக வேண்டும். அதே போல் வடக்குப் புறமும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வடக்குப் புறமானது மிக அதிக அளவில் நிலப்பரப்பை கொண்டு செடி கொடிகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

குறிப்பாக வடகிழக்கு மூலை ஒவ்வொரு வீட்டுக்கும் மிக முக்கியமான ஒன்று. இது பள்ளமாகவும், நீர்நிலை உடையதாகவும் இருக்க வேண்டும். நேர் கோணதிசையான தென்மேற்கு அதற்கு நேர் எதிராக மிக உயர்ந்தும் மிகுந்த பாரமாகவும், செடி கொடிகளை உள்ளடக்கியும் இருந்தால் மிக விசேஷம்.

இப்படியே ஒவ்வொரு கோணங்களுக்கும் பலாபலன்கள் கதிர்களின் அடிப்படையில் பகுத்தறியப்பட்டு கூறப்பட்டுள்ளன.

அமைப்புகள் அந்த வீட்டில் வாழும் நபர்களை பாதித்து நமது எண்ணங்கள், [illegible]. வாஸ்து சாஸ்திரப்படி அமைந்த வீட்டில் வசிப்பவர் மிக மேம்பட்டு முன்னுக்கு வருவதையும், அது இல்லாதவர் மிக சிரமப்படு

வதையும் நானே நூற்றுக்கணக்கான உதாரணத்தில் வைத்துப் பார்த்து அறிந்தேன்.

மனிதனுக்கு மட்டுமல்ல இது...கடவுளுக்கும் கூட. அந்த வகையில் திருமலை ஒரு வாஸ்து சிறப்புமிக்க இடம். இதன் வடகிழக்கு மூலையில்தான் இருக்கிறது திருக்குளம். அது மட்டுமல்ல அந்தக் கோணத்தில் பாபநாச அருவி முதல் பல நீர் நிலைகள் வந்து விடுகின்றன. அதற்கு நேர் கோண திசையான பின்பாகத்தில் உயரமான மலைகள்.

பெருமாளும் கிழக்குப் பார்த்து கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். விமானமும் தங்கத்தில் அமைந்து பிரபஞ்ச கதிர்களை எளிதாக ஸ்வீகரிக்கிறது. உள்ளேயும் வரிசையாக ஏழு நிலைக்கதவுகள். எடையிட்டு சீர் செய்து அமைத்தது மாதிரி பிரகாரம். அவ்வளவும் ஒச்சமில்லாத கருங்கற்கள். இந்த கற்களுக்கு பின்னால் ஒரு கதை உண்டு. மந்திர சப்தங்களை இவை காந்த நாடாபோல் பதிவெடுத்துக் கொண்டு விடுகின்றனவாம்.

அதன் வைப்ரேஷன் எப்பொழுதும் அங்கே நிலவிடும் படி இவை பார்த்துக் கொண்டு விடுகின்றன.

உள்ளே கருவறையும் மிக நூதனமாக பெருமாளின் உச்சிக்கும் கோபுர கலசபாகத்தின் உச்சிக்கும் நேர் இணைப்பாக உள்ளது.

இப்படி வாஸ்துச் சிறப்புள்ள ஆலயமாக திருமலை இருப்பதால் அருள் பொங்குகிறது; மானிடக் கூட்டம் மொய்க்கிறது.

இது இல்லாத ஆலயம் என்னதான் புராணச் சிறப்பும் புனிதமும் பெற்றிருந்தாலும் அந்த அளவு கூட்டமோ வருவாயோ இல்லாமல் சிரமப்படுவதற்கும் உதாரணங்கள் உள்ளன.

*அதற்கு உதாரணம் ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலம் மற்றும் காளஹஸ்தி. இவைகளைப் பற்றி...*

# 19

ஸ்ரீசைலத்தின் புராணச் சிறப்பு சொல்லி மாளாது. ஆனால் திருவேங்கட மலையோடு இதை ஒப்பு நோக்கும் போது இது ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீ சைலத்தில் வசிக்கும் மக்களின் நேத்திரத்தில் மட்டுமே இருக்கின்ற ஒன்றாகவே உள்ளது.

மதுரை மீனாட்சி ஆலயத்தில்கூடப் பொற்றாமரைக் குளம் தென்கிழக்கு மூலையில்தான் இருக்கிறது. இது வடகிழக்கு மூலையில் இருந்தால் ஆலயம் மேலும் பொலிவைக் கொண்டிருக்கும் என்பாரும் உண்டு. இல்லை யில்லை...ஆலயத்து வலப்பக்கத்தில் வைகை ஓடி அது வாஸ்து பலத்தை அளித்து வருகிறது. எனவே தோஷ மில்லை என்கின்றவர்களும் இருக்கிறார்கள்.

வாஸ்துவைப் பொறுத்தமட்டில் ஒரு மனிதனின் வீடு மட்டுமல்ல; ஒரு ஊருக்கும் கூட அது அமைந்த விதத்தை பொறுத்து அது பேரும் புகழும் கொள்ளும் என்கிற கருத்தும் இருக்கிறது. 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய் கிறது'—என்கிற அரசியல்வாதிகளின் கூற்றைப் பார்த் தால் இது உண்மையோ எனத் தோன்றும். நம்முடைய தென்பாகம் இப்பொழுது குமரியோடு முற்றுப் பெற்று நிற்கிறது.

ஆனால் பல ஆயிரம் ஆண்டுக்கு முன் அதையும் கடந்து தென்பாகம் நீண்டிருந்தது. அதை லெமூரியாக் கண்டமாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். காலப் போக்கில் கடல் அந்த கண்டத்தையே விழுங்கி அபகரித்

தது. அதன் பின் அங்கே அன்னை கன்யாகுமரி ஆலயம் உருவாகி அவள் பாரத நாட்டையே மேலும் கடல் கொள்ளாது காத்து நிறுத்திக் கொண்டிருக்கிறாள் என்கிற நம்பிக்கை இன்றும் பலரிடையே உண்டு.

எப்பொழுதும் தென்கிழக்கு மூலை பாரம்மிக கொண்டு மிக உயரமான ஒன்றாக இருப்பது என்பது வாஸ்துச் சிறப்பில் பலம் பொருந்திய ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

அப்படிப் பார்த்தால் இப்பொழுது கிட்டத்தட்ட தென்கிழக்கில்தான் திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலை உலகிலேயே பெரிய ஒன்றாக அங்கு வடிவமைக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

மிகச் சரியாக இந்த நூற்றாண்டின் முடிவில் அது உருப்பெற்று புதிய நூற்றாண்டில் புது காட்சிப் பொருளாகப் போவது என்பது வாஸ்து பலத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது.

வள்ளுவம் உலகையே வென்ற பொதுமறை.

மானுட வாழ்வுக்கான மகத்தான வழிகாட்டி.

எந்த மொழி, மதத்தவராலும் இதை மறுத்திட முடியாது. அப்படி ஒரு மறையைத் தந்த நாடு நமது நாடு. குறிப்பாக தமிழகம் அந்த தமிழகம் இனி வாஸ்து பலம் பெற்று மேலும் சிறப்பு பெறும் என்கிற நம்பிக்கையை இது உருவாக்குகிறது.

எனவே புதிய நூற்றாண்டு எல்லா வகையிலும் உலகத்தில் தமிழ்நாட்டின் சிறப்பை மேம்படுத்துவதாகவும் தூக்கி நிறுத்துவதாகவும் இருக்கும் என்கிற நல்லெண்ணத்தை நாம் திடமாகக் கொள்ளலாம்.

ஒருசேர இந்த சிந்தனை மக்களிடையே உருவாகும் போது அந்த எண்ண அலையே மாபெரும் ஆக்கச்

சக்தியாக உருமாறி அறிஞர்களை, ஆற்றலாளர்களைத் தோற்றுவிக்கும்.

வேங்கடம் அம்மட்டில் நமக்கெல்லாம் ஓர் முன் மாதிரி. இதில் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட இந்த எண்ணத்தைப் போற்றவே செய்வார்கள்.

இப்படி பலதரப்பட்ட சிந்தனைகளை நமக்குத் தரும் வேங்கடத்திற்கான இந்த ஆண்டுக்கான பாத யாத்திரையும் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.

அதற்கான துவக்க நாளன்று பல அரசியல் அமைப்பைச் சார்ந்தவர்களும் பங்கு கொண்டு வாழ்த்தி வழி அனுப்பி வந்தனர்.

அந்த நிகழ்ச்சியில் நானும் பேசும் பாக்யம் கிட்டியது. அந்த சந்தர்ப்பத்தில் இந்த தொடரைப் பற்றியும் பேசினேன்

அதன் எதிரொலியை யாத்திரையின் போது வழி நெடுகிலும் கண்டேன். பல அன்பர்கள் தாங்களாக முன் வந்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதில் சென்னையைச் சேர்ந்த ஏ.வி.எஸ். மூர்த்தி என்பவரது பக்தி அனுபவம் எனக்கு மெய்சிலிர்ப்பைத் தந்தது. அதைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அன்பர் மூர்த்திக்கு பார்த்தசாரதி என்று ஒரு மகன். தனக்குப்பின் தன் பிள்ளைதான் எல்லாம் என்கிற ஆசைக்கும் பாசத்துக்குமுரிய தர்மபுத்திரன்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் வகுப்பில் இருக்கும் போதே அவருக்கு திடும்மென்று பேச்சு போய்விட்டது. இது ஒரு ஆச்சரியமான அதிர்ச்சியான விஷயம்.

நன்றாகப் பேசிக் கொண்டிருந்த ஒரு பிள்ளைக்குத் திடீரென்று பேச்சு போவது என்பது அபூர்வமான ஒன்றாகும். பிறவி ஊமைகளின் நிலைப்பாடு இதில் வேறு. இப்படி திடும்மென்று பேச்சிழந்த பிள்ளையைக் கண்டு மூர்த்தியும் கலங்கிப் போய்விட்டார். காரணத்தை அவரால் கண்டறிய முடியவில்லை. மருத்துவர்களை அணுகினார் அதன் பின் பலவித பரிசோதனைகள் மருந்து மாத்திரைகள் இருந்தும் எந்தப் பலனுமில்லை.

மனிதர்கள் ஒரு கட்டத்தில் கைவிட்டால் அடுத்து தெய்வம்தானே? அதிலும் கலியுகத்தில் இதுபோன்ற கர்ம துன்பங்களைப் போக்குவதற்குத் தானே அந்த வேங்கடவன் மலைமேல் கோயிலும் கொண்டிருக்கிறான்?

மூர்த்தியும் வேங்கடவன் காலடியில்தான் போய் விழுந்தார். நாட்கள் ஓடிற்று. ஆனால் பிள்ளை பேச வில்லை. மூர்த்திக்குள்ளும் தாபம் உடைத்துக்கொண்ட அணைபோல பெருக்கெடுக்கத் தொடங்கி விட்டது.

வேங்கடவனோடு ஒரு யுத்தம் நடத்தவே அவர் ஆயத்தமாகிவிட்டார். அதன் எதிரொலியாக மனதுக் குள் ஒரு புதிய தீர்மானம். அத்தோடு திருமலைக்குப் புறப்பட்டார். பேசாத அந்தப் பிள்ளையையும் உடன் அழைத்துச் சென்றார்.

மெய் வருத்தத்தோடு நடந்தே உச்சியை அடைந்து, தான் முன்பே எடுத்த தீர்மானப்படி வேங்கடவன் முன் சங்கல்பித்துக் கொண்டார்.

'பேச்சு வந்தால் திருமலையை விட்டுச் செல்வது... இல்லையேல் பிள்ளையை அந்த வேங்கடவனிடமே ஒப்படைத்துவிட்டுப் புறப்படுவது' என்பதுதான் அந்த சங்கல்பம்!

இது மிக ஆபத்தான சங்கல்பம். அசாத்ய நம்பிக்கை! பக்தி ஈடுபாடு கொண்டவர்களுக்கே இது இவ்வாறு தோன்றும்.

மாகாளியை தரிசனம் செய்ய ஒரு மீனவன் இப்படித் தான் சங்கல்பமெடுத்துக் கொண்டான். வேத மந்திரங்களுக்கும் அகப்படாதவளை 'மாரியாத்தா காளியாத்தா' என்று மட்டும் பக்தியோடு சொல்லி நீ நேரில் வந்தால் உயிரோடிருப்பேன். அன்றேல் உன்னைக் காணாத உயிர் போகட்டும் என்று ஆற்றில் மூழ்கினான்.

அம்பிகை அவன் முன் தோன்றி தடுத்தாட் கொண்டாள்.

வேடுவன் கண்ணப்பனும் இப்படித்தான், தனது வேட்டைப் பொருளையே பரமனுக்கு நிவேதனமாகப் படைத்தான். அதில் அவன் ஆசார சங்கதிகளை எல்லாம் பார்க்கவில்லை பார்க்கவும் அவனுக்குத் தெரியாது. அவனிடம் இருந்ததெல்லாம் ஆத்மார்த்தமான மெய் அன்பும் பற்றுதலும் மட்டும்தான்.

ஒருநாள் அவனை ஈசன் பரிசோதித்தான்.

அவனது சிலா சொரூபத்திலிருந்து கண்ணில் ரத்தம் வடிந்தது. பதிலுக்கு கண்ணப்பன் தனது கண்ணைப் பிடுங்கி அந்த ஈசனின் கண்ணில் பதித்தான். குருதி அடங்கியது. குருதி மட்டுமா அடங்கியது? சோதித்த ஈசனின் சோதனையும் அடங்கியது. பறந்தோடி வந்தான் ஈசன். பின் நடந்ததை நாமெல்லோருமே அறிவோம்.

இவைகளை எல்லாம் அறிகையில் ஒன்று நன்கு புலனாகிறது. இந்த பக்தி சிகரங்கள் அறிவைப் பின் வைத்து நம்பிக்கையை முன் வைத்தவர்கள்.

அறிவு அடங்கினாலே அதன் இயல்பான வெளிப்பாடுகள் ஆன சந்தேகம், அவநம்பிக்கை போன்றவை தானாகப் பின் சென்றுவிடுகிறது. இந்நிலையில் அன்பும் பக்தியும் துளியும் தடுப்பாரின்றி மலை அருவி போலப் பெருக்கெடுத்துப் பாயத் தொடங்கிவிடுகிறது.

அங்கே சரணாகதி தானாக வந்து விடுகிறது.

இது பக்தியின் உச்சநிலை. இந்த நிலையில் எவர் ஒருவர் இறைவனை அணுகினாலும் அவர்க்கு இறைவன் காட்சியளிக்கத் தவறியதுமில்லை; அவரைக் கை விட்டதுமில்லை.

இப்படி ஒரு சரணாகதி சார்ந்த அவநம்பிக்கை இல்லாத பக்திதான் அன்பர் மூர்த்தியிடம் இருந்தது. அதுதான் இப்படி ஒரு முடிவை அவர் எடுக்கும்படி செய்தது.

சிறிது யோசித்துப் பாருங்கள்.

இதை அவர் வெளியே சொன்னால் கேட்பவர்கள் என்ன சொல்வார்கள். 'பைத்தியமே...அவனை நம்புவது சரி. அதற்காக இந்த அளவுக்கா போவது?' என்று எதிர்க்கேள்விதான் கேட்பார்கள்.

'இது கலியுகம்...தெய்வம் மெல்லத்தான் கருணை செய்யும்'என்று சொல்வார்கள். 'நாம் அவ்வளவு புண்ணியம் செய்திருக்கவில்லை...' என்று தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்வார்கள்.

இந்த கருத்துக்களை எல்லாம் கூர்ந்து பார்த்தால் அதில் பக்தி அவர்களிடம் எந்த நிலையில் உள்ளது என்பது தெரியவரும். கடவுளைக்கூட அவர்கள் துதிப் பொருளாகப் பார்ப்பதும் 'வழிபாடு செய்தால் துன்பம் குறையும்'—'கடவுளின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்

கலாம்' என்பது போன்ற எண்ணங்களும்தான் தெரிய வரும்.

இதெல்லாம் பக்தியின் தள்ளாட்டமான கட்டங்கள். இதை எல்லாம் கடந்துதான் ஒருவரது பக்தி திடப் படுகிறது. இறைவன் எல்லா இடங்களிலும் இருக்கிறான். தொழுவதால் பணிவதால் மட்டும் அவன் வசப்படு வதில்லை.

அதையும் கடந்து அன்பு மயமாகி, பகைவனையும் நண்பனாகக் கருதும் பாங்கு பெற்று, துன்பத்தையும் காரணமின்றி அவன் தருவதில்லை என்கிற ஞானத்துள் நுழைந்து, தனக்கென சுயநலத்தோடு ஒன்றைக்கேட்பதை விடுத்து மனது ஒரு நல்ல முதிர்ச்சி காணும்போது, கண்களை மூடிக்கொண்டாலே போதும். தெய்வம் உள்ளே பிரசன்னமாகி விடுகிறது.

இந்த முதிர்ந்த நிலை ஒருநாள் ஒருபொழுதில் வருவ தில்லை. அது பிறவிகளில் கொஞ்சம் கொஞ்சமாக சித்திக்கிறது. எனவேதான் குழந்தைப் பிராயத்திலிருந்தே பக்தி செய்ய நமது முன்னோர்கள் வழிவகை செய்து தந்தார்கள்.

அறுபது எழுபது வயதில் வானப்ரஸ்தம் போன்ற நிலையை எட்டும்போது வாழ்வியல் அனுபவங்கள் பக்திக்குப் பெரிதும் பலம் சேர்த்திருக்கும்.

அப்பொழுது காம, குரோதங்கள் அடங்கிப் போய் மனது ஸ்படிகமாக இருக்கும். ஒருமுனைப்படுவதும் சரணாகதியும் சாதாரணமாக வரும்.

மூர்த்திக்கும் இப்படித்தான் ஒரு சரணாகதி வந்தி ருக்க வேண்டும்.

இப்படி சரணாகதி அடைந்தவர்களை என்று தெய்வம் கைவிட்டிருக்கிறது? அதிலும் அருட்பெரும்

ஜோதியான ஏழுமலை கைவிட்டால் அப்புறம் இந்த உலகில் வாழ்வதில்தான் என்ன பொருள் இருக்கிறது?

அவனது அவதார நோக்கமே சிஷ்ட பரிபாலனம் தானே?

பாலாஜியும் மூர்த்தியின் புதல்வனைப் பரிபாலித்தான். சந்நிதியில் நின்றுகொண்டு. 'கோவிந்தா! உனக்கே இது அழகா?' என்று கேட்குமுன் அந்தப் பிள்ளை அங்கேயே பேசியது. அற்புதமாகப் பேசியது. எந்தக் கர்மத்தால் பேச்சு போனதோ? பாலாஜி அதை மீட்டுத் தந்து விட்டான்...

இதைச் சொல்லும்போது அன்பர் மூர்த்தியின் கண்ணிரண்டும் குளமாகிவிட்டது. நானும்கூட சேர்ந்து அழுதேன்.

# 20

உலகம் என்று தோன்றியது? மனிதன் எப்பொழுது தோன்றினான் போன்ற கேள்விகள் நிறைந்த உலகில், அதற்கெல்லாம் தெளிவான விடை தெரியாத நிலையில் தான் காலம் உருண்டு கொண்டிருக்கிறது.

இதில் இந்த இரண்டாயிரமாண்டுக்கு மட்டும் ஒரு அடையாளம் இருக்கிறது. குறிப்பிடும்படியான வரலாறு இருக்கிறது. மனிதன் தான் கழிக்கும் நாட்களை ஒரு ஒழுங்குக்கு உட்படுத்தி கழித்திருப்பது இந்த இரண்டாயிரங்களில்தான்...

வெந்ததையும் வேகாததையும் தின்றுவிட்டு வேளை வந்தால் இறந்துவிட்ட மனிதக் கூட்டம் ஒன்று இரண்டு என்று எண்ணக் கற்றுக் கொண்டு கல்வியறிவோடும்,

நாகரீகத்தோடும் வாழத் தொடங்கி இரண்டாயிரம் ஆண்டுகள் முடிந்துவிட்டன.

இந்த இரண்டாயிரம் ஆண்டில் மனிதன் எவ்வளவோ முன்னேறிவிட்டான். பூமி உருண்டை என்று—அந்த உருண்டை அட்ச ரேகை, தீர்க்கரேகை, பூமத்திய ரேகை என்று அந்த உருண்டையை ஒரு விதமாகப் பிரித்தும் கணித்தும் பார்த்தது இதில்தான். பின் வருடத்திற்கு 365 நாட்கள், வாரத்திற்கு 7 நாட்கள் என்று நம் வாழ்வியலுக்கு தேவையான வசதிகளை படிப்படியாக உருவாக்கினான்.

இந்த வளர்ச்சிப் போக்கில் நாம் நின்று வீட்டுக் கூடத்தில் உலகை ஒரு சின்ன பெட்டி மூலம் பார்க்குமளவு வளர்ந்திருக்கிறோம். தூரத்தை சுருக்கி நேரத்தின் அருமையை உயர்த்தி விட்டோம்.

இதன் பின்புலத்தில் மனித ஆற்றலும் அதற்குப் பின்னே பல்வேறுபட்ட கூட்டு சக்திகளும் ஒளிந்திருக்கிறது. அந்தக் கூட்டு சக்தியில் ஒன்று நியூமராலஜி.

இதுவும் கால நேரத்தின் சக்தியை சொல்லும் ஒருவித விஞ்ஞானம்தான்... இந்த கலையானது 2000 ஆண்டு அனுபவத்தோடு உள்ள ஒன்று.

அந்த வகையில் ஒரு ஆயிரமாண்டு கழிந்து அடுத்த ஆயிரத்தின் தொடக்கத்திற்கு நாம் செல்ல உள்ளோம்...

இந்தக் காலக்கட்டத்தில் வாழ்வது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இதைப் புரிந்துகொண்டு இதைப் பயன்படுத்திக்கொள்வதும் நம்கைகளில் இருக்கும் விஷயம்.

தினமும்தான் விடிகிறது—முடிகிறது என்று இதற்கு சாதாரண வர்ணம் பூசிப் பார்க்காமல், பெருமிதத்தோடு

வரும் நூற்றாண்டை எதிர்கொள்ளும் மனப்பான்மை மிக முக்கியம்.

எல்லா நாட்களும் நல்ல நாட்கள்தான். இது பொதுச் சிந்தனை. வரும் நூற்றாண்டு விசேஷமானது. அது என்னை வாழ வைக்கப் போகிறது; உலகம் முழுவதும் துன்பம் விலகி இன்பம் பரவப் போகிறது என்று ஒவ்வொருவரும் நினைப்பதும் முக்கியம்.

இந்தநினைவுதான் பேரலையாக உருமாறி ஒவ்வொருவரையும் வழி நடத்தும். துவக்கம் சிறப்பாக இருந்தால் அதன்பின் அனைத்துமே அதை ஒட்டிச் சிறப்பாகவே இருந்தாக வேண்டும்.

ஒவ்வொருவரும் இந்த புதிய ஆயிரமாண்டினை தன்னம்பிக்கையோடும் பெருமிதத்தோடும் நம்பிக்கையோடும் வரவேற்க வேண்டும்.

தானமும் தர்மமும் செழிக்க வேண்டும் அவரவர் கடமைகளை ஒரு குறைவுமின்றி அனைவரும் செய்திட வேண்டும். பெரியோரிடம் வணங்கியும் கேட்டும் ஆசிகளை பெற்றிட வேண்டும். முடிந்தால் ஆலயங்களுக்குச் செல்லுங்கள்

இவைகளைப் புரிதல் இன்றி பயத்தோடும் குழப்பத்தோடும் அசட்டுத்தனமான நம்பிக்கைகளோடும் செய்யாதீர்கள். கால நேரங்களுக்கு நடுவில் அதைப் பிளந்து கொண்டு பிறந்தவர்கள் நாம். எல்லோருமே... அதை துளியாவது புரிந்து கொள்ள முயலவேண்டும். அந்த முயற்சியில் பலஉண்மைகள் தெரியும். அதில் ஒன்றுதான் 'கொண்டாடப்படுவதே கொள்ளை இன்பம் தரும்' என்கிற உண்மை.

எனவே புத்தாண்டைக் கொண்டாடுங்கள். புரிந்து கொண்டாடுங்கள். அன்றைய தினத்து மகிழ்ச்சி உங்கள்

சந்ததிகள் மூலமாக ஆயிரமாண்டு வரை தொடர வேண்டும்.

அதற்காக நான் அந்த ஏழுமலை ஆண்டவனை மன தார வேண்டுகிறேன்.

அன்பர் ஏவி.எஸ். மூர்த்தி பற்றியும் அவருக்கு நேரிட்ட பக்தி அனுபவம் பற்றியும் எழுதியிருந்தேன். மூர்த்திக்கு அந்த அனுபவம் போல அதன் பின் பலப்பல அனுபவங்கள்...

இன்றும் மூர்த்தி அந்த பக்தி அனுபவங்களை அசை போடும் போது புளகாங்கிதப் பட்டுப் போகிறார்.

ஒரு முறை ஹார்ட் அட்டாக்கிலிருந்தும் அவரை மீட்டுக் காப்பாற்றியிருக்கிறான் அந்த வேங்கடவன். அதன்பின் அவரை எக்காரணம் கொண்டும் மலை ஏறுவது, பாரம் சுமப்பது போன்ற செயல்களைச் செய்யக்கூடாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். டாக்டர்களால் அவரைக் கட்டிப் போட முடியவில்லை என்றுதான் கூற வேண்டும்.

இந்த ஆண்டு எங்களோடு யாத்திரையில் கலந்து கொண்டார். மூர்த்தி துருதுருவென்று ஓடியாடி சர்வீசும் செய்தபடி இருந்தார்.

சென்னை பெரம்பூரில் தொடங்கி 4டி ஸ்டேஷன் வரை அதாவது திருமலைக்கு 13 கி. மீட்டர் முன் வரை, உடன் வந்து எல்லா உதவிகளையும் செய்தவர் அதன்பின் அங்கிருந்து சென்னை திரும்பி விட்டார்.

மலைக்கு ஏறி வந்து அவனை வணங்கினால் தான் ஆயிற்றா? மலைக்குச் செல்லும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலேயே ஆயிரம் தரிசனம், சுகம் இருக்கிறதே...

அன்பர் மூர்த்திபோல ஒவ்வொருவரும் நினைத்தால் திருமலையின் நெருக்கடியே இருக்காது. தள்ளு முள்ளும் தாளாத தவிப்பும் இருக்கவே இருக்காது...

இந்த யாத்திரையில் திருமலை பொது ஜனங்களின் பிடியில் சிக்கித் தவிப்பதைப் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய நிர்வாகம் இருக்கிறது. இருந்தும் அவர்களது ஆளுமை எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதான்...

ஜனக்கூட்டம் பெருத்து கட்டுப்பாடும் அற்றுப் போய் விட்டால் அங்கே என்னவெல்லாம் நிகழும் என்பதற்கு சான்றாகப் பல விஷயங்கள் நடந்தன.

ஐம்பது ரூபாய் டிக்கெட் எடுக்கப் போனபோது அரை மணியில் தரிசனம் கிடைத்து விடும். ஓடுங்கள் என்று கவுண்டரில் கூறியதைத் தொடர்ந்து அனைவரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினோம்.

பாதயாத்திரை புரிந்த கால்கள் என்ன வலியில் இருக்கும் என்று கூறத் தேவையில்லை. அத்தோடும் வந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தோடும் ஓடினோம். ஆனால் 5 மணி நேரம் ஆயிற்று தரிசனம் செய்து வெளியேவர...

இடையில் பசிக்கொடுமை!

எதை எடுத்தாலும் அநியாய விலை வேறு...

அங்கே பொருட்களை விற்பவர்கள் பக்தர்களை பக்தர்களாகவே பார்க்கவில்லை. தங்களிடம் வசமாக மாட்டிக் கொண்ட பாவிகளாகத்தான் பார்க்கிறார்கள்.

ஜனங்களும் அதையெல்லாம் சட்டை செய்யாமல் கிடைத்ததை எல்லாம் வாங்கி மென்று தின்றார்கள். இதில் மூச்சுத் திணறும் அளவு நசுக்கிக் கொண்டு நிற்கும் கொடுமை வேறு.

நானும் ஆனமட்டும் ரிலாக்ஸாகச் செல்ல எவ்வளவோ முயன்றேன். முட்டாமல் மோதாமல் ஒரு சாண் இடைவெளிவிட்டு பாலாஜி நின்று கொண்டிருக்கும் அந்த திருச்சன்னதி வரை போகலாம். இது நம் கையில் இருக்கும் விஷயம். இது நம் சௌகர்யம் சார்ந்த விஷயம் என்று கரடியாகக் கத்திப் பார்த்தேன்.

காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

அந்த ஏழுமலையானை எப்படி வேண்டுமானாலும் சென்று பார்க்கலாம் என்கிற நினைப்புதான் இவர்களை இப்படி வைத்திருக்கிறது.

இதில் தர்ம தரிசன க்யூ வரிசை அசுரவேகத்தில முன்னேறி முன் சென்றது. அவர்கள் எங்களை கேலியோடு பார்க்கும் கொடுமை வேறு.

இது என்ன அநியாயம் என்று நிர்வாகத்திடம் கேட்டால் 'கல்யாண உற்சவம் நடைபெற்றது. அதன் காரணமாகக் கூட்டத்தை பிளாக் செய்து விட்டோம்' என்று கூலாக பதில் சொன்னார்கள்.

கூட்டமோ இதை எல்லாம் கண்டு கொள்வதாகவே இல்லை. பாலாஜியைப் பார்த்து ஒரு சல்யூட் செய்து விட்டால் போதும். தங்கள் பாவத்தை அவன் மன்னித்து விட்டதாகவும், கேட்ட வரத்தை தந்து விட்டதாகவும் நினைத்துக்கொண்டு மகிழ்ப்போடு திரும்புகின்றவர்கள் தான் அநேகம் பேர்.

அந்த ஏழுமலையான் இவர்கள் வரையில் ஒரு அரசனைப் போன்றவன். இவர்கள் துதிக்காகவும், புகழ்ச்சிக்காகவும் வணங்க வேண்டியும் வீங்கிக் கிடப்பவன். எனவே யாரை மிதித்துக் கொண்டும், எப்படி வேண்டுமானாலும் போகலாம். போகும் வழி எங்கும் கரியால் பெயரை வேறு பொறித்து வைக்கலாம்.

இங்கே எழுதாதீர்கள் என்று எழுதி எச்சரிக்கை செய்த இடத்திற்கு பக்கத்திலேயே எழுதலாம். கூடவே தங்களுக்கு இஷ்டமான பெண்ணின் பெயரையும் எழுதி வைக்கலாம்.

'என்ன கொடுமை இது?'

இதற்குப் பெயரா பக்தி...இப்படியா ஒப்பற்ற அந்த தெய்வத்தை அணுகுவது...? எனது இந்த கொந்தளிப் பான கேள்விகளுக்கெல்லாம் விடை எனக்கு வேறு வடிவத்தில் கிடைத்தது. அதைக் கூறுமுன் யாத்திரையில் நிகழ்ந்த இன்னொரு ரசமான அனுபவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பாபநாசம் குமார் என்னும் அன்பர் யாத்திரையில் எங்களோடு இந்தமுறை நடந்துவந்தார். இவர் மறைந்த இசைமேதை பாபநாசம் சிவனின் பேரன். மதுரை ஆல் இந்தியா ரேடியோவில் மிருதங்க வித்வானாக பணி யாற்றுபவர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் மருமகப் பிள்ளை. அதாவது ஜானகி அம்மையாரின் அண்ணன் மகன்.

ஆட்டமும் பாட்டுமாய் எங்களுடன் வந்தவர் குளிக்கும் இடத்தில் தன் பச்சைக்கல் மோதிரத்தை கழட்டி வைக்க அதனை பம்புசெட் மோட்டார் தண்ணீர் கொண்டு சென்றுவிட்டது.

எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை.

அப்பொழுது அவருக்கும் எனக்கும் ஒரு எண்ணம்.

'இப்படி காணாமல் போவதற்கு இது கிடைத்தால் உண்டியிலிலாவது சேர்க்கலாமே...!'—என்று...

சொன்னால் நம்பமாட்டீர்கள். இப்படி நினைத்து கிடைத்தால் அதை உண்டியலில் சேர்த்து விடுவதாக திரு. குமார் வேண்டிக்கொண்ட நொடிப் பொழுதில், அந்த மோதிரம் அகப்பட்டது.

அதன் பின்...

# 21

திரு. குமார் வேண்டிக் கொண்ட மறுநிமிடம் அந்த மோதிரம் கிடைத்து விட்டதாக எழுதியிருந்தேன்.

அவர் வேண்டிக் கொண்டபடி அந்த மோதிரத்தை அவர் உண்டியலில் சேர்ப்பாரா? எனக்கு சந்தேகம் வந்து விட்டது. ஏனென்றால் மனித மனம் எப்பொழுதுமே நொடிக்கு நொடி மாறக்கூடியது.

இனி கிடைக்கவே போவதில்லை என்ற நிலையில் தான். கிடைத்தால் உண்டியலிலாவது சேர்ப்போம் என்று பிரார்த்தித்துக் கொண்டார். அது தொலைந்து போகாமல் அவரிடமே இருந்திருந்தால், அவர் இப்படிப் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பாரா மாட்டாரல்லவா?

எனவேதான் என் புத்தி இப்படி யோசித்தது.

ஆனால் குமார் உறுதியாகப் பிரார்த்தித்துக் கொண்டபடி உண்டியலில் சேர்த்துவிட்டார். கிட்டத்தட்ட 4500 ரூபாய் மதிப்புள்ள பச்சைக் கல் பதித்த மோதிரம்.

ரூமில் காணாமல் போனது முதல் வினோதம். பின் எவ்வளவு தேடியும் கிடைக்காமல் போனது அடுத்த விநோதம். அதற்குப் பின் வேண்டிக் கொண்ட உடன்

அது கிடைத்தது விநோதத்துக்கெல்லாம் விநோதம் அல்லவா?

இப்படி எதனால் நிகழ்ந்தது?

வேங்கடவனுக்கு அந்த குமார் ஏதாவது கடன்பட்டிருக்கிறாரா...? அதை வசூலிக்கத்தான் அந்த பெருமாள் இப்படி நாடகமாடினானா?

இப்படிச் சிலரது புத்திபோயிற்று. நானும் இப்படி கேட்டுக் கொண்டாலும் கூடவே என்னுள் வேறு கேள்விகளையும் தவிர்க்க முடியவில்லை.

அதாவது...இறைவன் இப்படிக் கண்ணாமூச்சி விளையாடி ஒன்றைப் பெற நினைக்கறவனேயில்லை. அவன் படைத்த உலகில் அவனால் படைக்கப்பட்ட மனிதர்களாகிய நாம் அவனுக்குத் தர எதுவுமே இல்லை; நாம் தரவும் முடியாது.

நாம் தர முடிந்ததெல்லாம் ஒன்றுதான். அது பக்தியும் அன்பும்தான்.

எனவே இறைவன் ஒரு மோதிரத்தைப் பெற இப்படி நாடகமாடினான் என்று சிந்திக்கவே நான் தயாரில்லை.

இதைத் தாண்டி இதனுள் ஒரு விஷயம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

இந்த அனுபவம் குமாருக்கு மட்டுமல்ல; திருமலை பக்தர்கள் பல ஆயிரக்கணக்கான பேருக்கு ஏற்பட்டிருக்கிறது.

வேண்டுவதிலும்—வேண்டுதலை நிறைவேற்றுவதிலும் பொருள் இருக்கலாம். ஆனால் அந்தப் பொருள் இறைவனுக்குத் தேவையே இல்லாத ஒன்று. ஆனாலும் அவனுக்குத் தேவையில்லாத ஒன்றினைத் தரவே நாம் போட்டியிடுகிறோம்.

அவனுக்காக இப்படி ஒரு இழப்பினை ஏற்றுக் கொள்கிறோம். பதிலுக்கு அவன் பரிதாபப்பட்டு ஏதாவது தரமட்டானா என்று பார்க்கிறோம்.

இந்த செயல்பாட்டின் முற்றிய நிலைதான் ஞானம்...

உலக வாழ்க்கைக்கும் உயிர் காப்பதற்கும் ஆதாரமாக விளங்கும் பொன்னையும் பொருளையும் முதலில் இழக்கத் துணிந்தால்தான் பின்னர் தன்னையே இழக்கும் துணிவு ஒரு மனிதனுக்கு வரும்.

தன்னையே இழந்தால் தான் முக்தி மோட்சம்.

எனவே அதற்கான பயிற்சிகளைத்தான் திருமலை அளிப்பதாக நினைத்துக் கொண்டேன்.

அது மனிதர்களின் ஆசாபாசங்களோடும் வைராக்கியத்தோடும் விளையாடிப் பார்க்கிறது. அதில் நாம் சொன்னபடி நடந்து கொண்டால் எல்லா விதத்திலும் ஜெயிக்கிறோம். இல்லாவிட்டால் அந்த க்ஷணமே தோற்கிறோம்.

இதை சம்பந்தப்பட்டவர் மட்டுமல்ல அவரைப் பார்ப்பவர்களும் உணர வேண்டும் என்பதற்காகவே, அந்த கோவிந்தன் பக்தர்களிடம் பல திருவிளையாடல்களைச் செய்து காட்டுகிறான்.

இதைச் சரியான கோணத்தில் புரிந்து கொள்பவர்கள் அவனருளால் வேகமாக முன்னுக்கு வந்து வாழ்வாங்கு வாழ்ந்து கரை சேர்கிறார்கள். மற்றவர்கள் முட்டி மோதி அல்லாடிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

திருமலையிலேயே அந்த திருப்பதியானை நம்பாமல் தங்கள் முயற்சிகளும் தகிடு தத்தங்களும் மட்டுமே வாழ்க்கை தரும் என்று கருதி ஜீவிப்பவர்கள் எத்தனை எத்தனை பேர்?

ஸ்வாமி தரிசனம் செய்விக்க பிளாக்கில் பணம் வாங்குபவர்களில் இருந்து—தரிசனம் செய்ய காத்துக் கிடப்பவர்களிடம் நாலணா பொருளை நாலு ரூபாய்க்கு விற்று கொள்ளையடிப்பது வரை எத்தனை பேர்... எத்தனை பேர்...?

இவர்கள் அருளகத்தில் இருந்து கொண்டும் இருளோடு பிணைந்து கிடப்பவர்கள்.

இவர்கள் தங்கள் பாவங்களுக்கும் செயல்களுக்கும் கூட இறைவன்மேல் பழிபோட அஞ்சாதவர்கள்.

ஆனால் இவர்களையும் தாங்கி இவர்கள் வயிறு நிரம்பவும் காரணமாக இருக்கிறான் அந்த கோவிந்தன்.

இன்றில்லை; நாளை இவர்கள் தங்கள் செயல்களை தவறு என்று உணர்ந்து மாறுவதற்கான வாய்ப்பையும் தட்டாமல் அளித்து வருகிறான்.

பலர் இவர்களைப் பார்த்து இறைவன்மேல் கோபம் கொண்டதை நானறிவேன்...

அவர்களில் ஒருவரைப் பற்றியும்—அவரது அனுபவத்தையும் இனி பார்ப்போம்.

சூடும் சுவையும் நிரம்பிய அனுபவம் இது...

முதல் முறையாக திருப்பதிக்கு வந்த அந்த அன்பர், திருமலைக் கூட்டத்தைப் பார்த்து மிரண்டு போய் விட்டார். எங்கே போனாலும் க்யூ! யாரைப் பார்த்தாலும் மொட்டை—இவர்களுக்கு நடுவில் கயிறு முதல் கண்ட கச்சடாவையும் விற்கும் ஒரு வியாபாரக் கூட்டம்.

இவ்வளவு பேரும் இத்தனை செயல்பாடுகளும் அந்த ஏழுமலையான் ஒருவனுக்காக...வேறு எதற்காகவும் யாருக்காகவும் இல்லை.

இத்தனைக்கும் அந்த ஏழுமலையானை யாரும் பிரத்யட்சமாகப் (இப்போது) பார்த்ததில்லை. அவனும் தோன்றியதில்லை.

இப்படி நேரில் பார்த்திராத, தோன்றியிராத ஒருவனை நம்பி இத்தனை பேரா...? இந்த நம்பிக்கையை என்னவென்று சொல்வது?

திருப்பதி எனும் தலத்தில் திரியும் ஒவ்வொரு மனிதனும் அந்த திருப்பதியை நம்பி தரிசிக்க வந்திருப்பவன். மற்ற இடங்களில், ஊர்களில் வாழும் மனிதர்களிடம் இப்படி ஒரே நம்பிக்கை சார்ந்த மனிதர்கள் இருப்பது என்பது சாத்தியமில்லை.

இப்படி ஒரு கூட்டத்தை வேறு யாராலும் எந்த நிலையிலும் கூட்ட முடியாது.

ஒரு அரசியல்வாதி மாநாடு நடத்தி லட்சம் பேரை திரட்டலாம். அவர்கள் ஒரே எண்ணத்துடன், ஒரே மாதிரி நம்பிக்கையுடன் வருவார்களா என்பது சந்தேகம் தான். கடற்கரையில், பூங்காக்களில் கூட கூட்டம் கூடுகிறது அந்தக் கூட்டத்திடம் கூட ஒருமித்த நம்பிக்கையோ ஒரே மாதிரி சிந்தனையோ பக்தியோ இருக்க இடமில்லை.

கோவில் இருக்குமிடத்தில் மட்டும்தான் மனித மனம் நம்பிக்கையுடன் பக்தியுடன் ஒன்றுபடுகிறது. ஒரு மனம் இப்படி ஒன்றுபட்டாலே அது அந்த மனித உடலுக்கு மிகப்பெரிய திடமும் தெம்பும் தரும் ஒன்றாகும் இதை விஞ்ஞான ஆய்வுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. அப்படியிருக்க லட்சக்கணக்கான மனங்கள் இப்படி ஒரு இடத்தில், ஒரு விஷயத்தில் ஒரே நம்பிக்கையோடு ஒன்றுபடும்போது அந்த லட்சம் தேகங்களிலும் வெளிப்படும் விஷயம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

அந்த ஊரே அல்லவா நம்பிக்கை என்னும் பாசிடிவ் அலைகளால் சூழப்பட்டிருக்கும்?

இங்குள்ள கல் மண் கூட இதனால் பாதிக்கப்பட்டு அருள்பிரகாசம் கொண்டிருக்குமே...?

இதை இந்த பிரபஞ்சத்தில் எங்கும் யாராலும் எத்தனை கோடி செலவழித்தாலும் உருவாக்கமுடியாதே?

—இப்படி மேற்படி விஷயங்களை அந்த அன்பர் அலசி முடித்து திருப்பதியில் திரிவதேகூட ஒருவித பாக்கிய மான விஷயம் என்கிற முடிவுக்கு வந்தார். கூடவே இப்படி பாக்கியமான ஒரு இடத்திற்கு வர எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும் என்கிற கேள்வியும் அவருக்கு எழுந்தது.

ஆம்...

மனிதன் சூழ்நிலைகளால்தான் இன்ப, துன்பங்களை அதிகம் அடைகிறான்.

தண்ணீர் கிடைக்காதபடி ஒரு ஊர்.

தாளாத நெரிசலோடு ஒரு ஊர்.

எந்த வளமும் இல்லாதபடி ஒரு ஊர்.

இப்படித்தான் இந்த பூமியில் எத்தனை ஊர்கள் இடங்கள். இவைகளுக்கு நடுவில்தானே வாழ்ந்து மடிகிறோம் நாம்?

இதில் முழுக்க முழுக்க பாசிடிவ் பாய்ன்ட் உள்ள ஒரு இடத்திற்கு நாம் போய்ச் சேர கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்?

இப்படித்தான் அவர் தன் சிந்தனைக்கு ஒரு விளக்கத்தையும் அர்த்தத்தையும் அளித்துக் கொண்டார்.

ஆனால் இப்படி நம்பிக்கையும். பக்தியும் மட்டுமே சார்ந்து கிடக்கும் ஒரு ஊரில், எப்படி பணம் பணம்

என்று அதையே பெரிதாகக் கருதும் மனிதர்கள் ஊடுருவினார்கள்?

நம்பிக்கையோடும் பக்தியோடும் வரும் மனிதர்களை அவர்கள் எப்படி துளிகூட அச்சமின்றி சுரண்டத் தொடங்கினார்கள்?

இந்த சுரண்டலை, கொள்ளையை எப்படி அந்த வேங்கடவனும் வேடிக்கை பார்க்கலாம்?

இதெல்லாம் இங்கே எப்படி சாத்தியமாகிறது? இப்படி அவருக்குள் கேள்விகள் புறப்பட்டன. இந்த மாதிரி சிந்தனைகளும் கேள்விகளும் என்னுள்ளும் இல்லாமல் இல்லை

இன்னும் சொல்லப் போனால் இந்த மாதிரி கேள்விகளுக்கு சரியான விடை கிடைக்காததால்தான் நாத்திகர்கள் தோன்றுகிறார்கள்.

ஒருவன் தவறு செய்தால் அதை அவன் தெரிந்து செய்தால் அவன் தண்டிக்கப்பட்டாக வேண்டும். அதே போல் நியாயமான முயற்சிகள் வெற்றியும் பெற்றாக வேண்டும்.

இதை ஒரு மனிதன் காணும்போது அவனுக்கு தர்மத்தின் மேல் பற்றுதலும், பாவம் செய்யக்கூடாது என்கிற பயமும் ஏற்படும்.

மாறாக பக்தியோடும் நம்பிக்கையோடும் வருபவர்கள் ஏமாற்றமும் துன்பமும் அடைவதும் அவர்களை ஏய்ப்பவர்கள் வாழ்வதையும் காணும்போது மனதில் சலனம் ஏற்படுவது இயல்புதானே?

அன்பருக்கும் அதுதான் ஏற்பட்டது.

'வேங்கடவா நீ இருக்கிறாயா? இருந்தால் இதை எப்படி அனுமதிக்கிறாய்?'

இது சரியா? இல்லாவிட்டால் இவர்கள் புத்திசாலிகளா?

எங்கள் நம்பிக்கையும் பக்தியும் பலவீனமானது என்று கருதி, எங்களை ஏமாற்றி அதற்கு இவர்கள் தண்டனை தருகிறார்களா?

இதில் எது உண்மை? எது பொய்?'

அன்பரின் மனம் விடை தேடி அலையத் தொடங்கியது. அவருக்கான பதிலை விவரிக்கு முன் காம்யார்த்த பக்தி என்ற ஒன்று உள்ளது. அதைப்பற்றி சிந்திப்பது நல்லது. சிந்திக்கலாமா?

# 22

திருமலை என்னும் திவ்ய திருத்தலத்தின் மாண்புகளை எல்லாம் பட்டியலிடும்போது சில சிறுமைகளும் கண்ணில் பட்டு கருத்தை இடித்தது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

அத்தனை மேன்மையும் அருளும் நிறைந்த மலையிலா இப்படி ஒரு சுரண்டலான நிலைப்பாடு...மனிதனை மனிதன் ஏய்த்துப் பிழைக்கும் கொடுமை?

இதை எல்லாம் அந்த பாலாஜியின் பேரருள் ஏன் தண்டிக்கவில்லை... அல்லது திருத்தவில்லை...?

இப்படி இருந்தால் எப்படி பக்தி மார்க்கம் வளரும்? சத்ய தர்மத்தின் மேல் எப்படி நம்பிக்கை ஏற்படும் என்கிற கேள்விகளும் முளைவிட்டு எழுந்தன.

இந்த கேள்விகளில்தான் ஒரு அன்பரும் அதிகம் தடுமாறினார். அப்பொழுதுதான் காம்யார்த்த பக்தி என்ற ஒன்று பற்றிய விஷயங்களும் தெரிய வந்தன...

அது என்ன காம்யார்த்த பக்தி?

இதற்கு விடை தெரிந்து விட்டால் மேலே எழும்பி நிற்கும் கேள்விக்கெல்லாமும் விடை தானாகவே கிட்டி விடும்.

பக்தியை சான்றோர்கள் காம்யார்த்த பக்தி, ஆத்மார்த்த பக்தி, சரணாகதி, முக்தி என்று வகுத்துப் பிரித்துள்ளார்கள்.

எலிமிண்ட்ரி, ஹைஸ்கூல், காலேஜ் என்பது போல இது ஒரு அடுக்கு...

எலிமிண்ட்ரிக்குள் ஒரு குழந்தை நுழையும் போது அதற்கு ஒன்றும் தெரியாது. படிப்பு என்பதும் வாழ்க்கைக்கு அவசியம்தானா? படித்து என்னாகப் போகிறது... சந்தோஷமாக விளையாடுவோம், தூங்குவோம். மனதுக்கு இன்பமான விஷயத்தில் எல்லாம் ஈடுபடுவோம். எதற்கு பாடமும் படிப்பும் பரீட்சையும் என்று அது கேட்டுக் கொள்ளும்...

ஆனால் பெரியவர்களாகிய நாம், அவர்களை அவர்கள் போக்கில் விடாமல் வளைத்து ஒடித்து அடிக்க வேண்டிய இடத்தில் அடித்தும், அணைக்க வேண்டிய இடத்தில் அணைத்தும் அழைத்துச் செல்வோம்.

ஆனால் எங்கேயும் குழந்தைகள் செய்வது தவறு என்றோ, அதற்காகப் பெரிய கவலைகளோ படமாட்டோம்.

அந்த வயதிற்கு அதற்கு என்ன தெரியும்...நாம்தான் நெறிப்படுத்தி கூட்டிச் செல்ல வேண்டும் என்பதுதான் நம் நிலைப்பாடு.

அதே குழந்தை ஹைஸ்கூல் போகும்போது தவறு செய்தால் கண்டிக்கிறோம்...கோபப் படுகிறோம்.

கல்லூரியில் தவறு செய்யும்போது தண்டிக்கக் கூட அஞ்சுவது கிடையாது.

ஆனால் யாரும் சிறு பிராயத்தில் அறியாமல் செய்த தவறுகளை வளர்ந்தநிலையில் செய்வதில்லை.(அப்போது வயதுக்கேற்ற தவறுகளை செய்வதும், செய்யாததும் வேறு விஷயம் )

காம்யார்த்த பக்தியும் அப்படித்தான்...

இந்த பக்தி ஒரு வித வியாபாரம் போன்றது 'உனக்கு நான் ஒன்று தருகிறேன். எனக்கு நீ ஒன்று தா. உனக்கு நான் தேங்காய் உடைத்தால் எனக்கு பரீட்சையில் பாஸ் போடு... கற்பூரம் கொளுத்தினால் என் மனக் குறை நீங்கு...' என்கிற பாங்கு இது.

இதை இறைவன் ஒப்புக்கொண்டு குறை நீங்குகிறான் என்பதுதான் இதிலுள்ள விசேஷம்... காம்யார்த்த பக்தியில் தொடங்கித்தான் ஒரு மனிதன் ஆத்மார்த்த பக்திக்குள் நுழைந்து பின் சரணாகதி அடைந்து முக்தி பெறுகிறான்.

காம்யார்த்தம் தெரியாமல், புரியாமல் ஆத்மார்த்தமும் சரணாகதியும் வசப்படவே படாது. அப்படி காம்யார்த்த பக்தி பற்றி சரியாக தெரியாத புரியாதவர்களே— ஆத்மார்த்தத்தில் நுழைந்து அங்கே சந்தேகங்கள் உண்டாகப் பெற்று அதற்கு விடை கிடைக்காத நிலையில் ஆத்மார்த்தமே தவறானது. கடவுள் தத்துவம் பொய்... டார்வின் தத்துவம்தான்சரி. விஞ்ஞானம்தான் சரியானது என்று காலத்தைக் கழிக்கிறார்கள்.

இவர்கள் தங்களுக்கு பலம் சேர்க்க காம்யார்த்த பக்தி அம்சங்களைக் குறை சொல்லவும் தவறுவதில்லை.

● உலகைப் படைத்த கடவுள் நீ பொங்கல் வைக்காவிட்டால் கோபிப்பார் என்பது முட்டாள்தனம் இல்லையா? ஒரு பொங்கலுக்கு வக்கற்றுப் போய் கோபிக்கும் கடவுள் எப்படி உலகைப் படைத்திருக்க முடியும்?

● கடவுள் இருப்பது உண்மை என்றால், நல்லவன் கஷ்டப்படுவதை அவர் எப்படி வேடிக்கை பார்க்கலாம்? தவறு செய்பவன் சந்தோஷமாக இருப்பதை எப்படி அனுமதிக்கலாம்?

● அர்ச்சனை என்பது துதி பாடுதலாயிற்றே தனக்கான துதியினை மனிதனைப் படைத்து அவனை துதிக்கச் செய்து கேட்டு இன்புறுவது என்பது எந்த வகையில் சரி...?

என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகிறார்கள்.

யாராக இருந்தாலும் காம்யார்த்த பக்தி பற்றி தெரியாத நிலையில் இந்தக் கேள்விகளில் நியாயம் இருப்பதாகவே கருதுவார்கள். ஆழ்ந்த பக்தி உள்ளவர்கள் 'இதெல்லாம் விதண்டாவாதம் என்று ஒரு வார்த்தையில் தள்ளி விடுவார்கள். மேம்போக்கான பக்தி உடையவர்கள் இந்தக் கேள்விகளில் மயங்கி இறையம்சங்கள் அதன் இயல்புகளில் சந்தேகங்களை வளர்த்துக் கொண்டு, ஒரு இரண்டும் கெட்ட மனிதனாகவே இருந்து விடுகின்றார்கள்.

சொல்லப்போனால் இப்படிப்பட்டவர்கள்தான் மிக அதிகம். இதற்கு நடுவில் வாழ்க்கையில் நிரம்பியிருக்கும் புதிர்கள் அவனை அச்சுறுத்துகின்றன.

அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம், திருஷ்டி, கண்ணேறு, சகுனங்கள், கெட்ட கனவுகள் வியாதி என்று பல்வேறு விஷயங்களில் அகப்படும்போதெல்லாம் நம்மை மிஞ்சி

ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது என்று புத்தி ஒரு முறை சொல்லிக் கொள்கிறது.

அப்படியே அந்த சக்தியை மகிழ்வித்து வசப்படுத்திக் கொள்ள என்ன வழி என்று பார்க்கிறது,

காம்யார்த்தம் அதற்கு எல்லாப் பாதையையும் நன்கு காட்டுகிறது. அதற்காகவே யந்த்ர மந்த்ர தந்த்ரங்களை அது உலகுக்கு வழங்கியுள்ளது.

இதில் மந்த்ரம் சப்தத்தால் ஆனது. அதாவது sound; யந்திரம் என்பது இடத்தால் ஆனது, அதாவது space; தந்திரம் என்பது செயலால் ஆனது அதாவது Action.

இந்த மூன்றின் கலவைதான் காம்யார்த்தத்தில் விளைவுகளாகப் பரிணமிக்கிறது. இதன் கிளைகளில்தான் 64 கலைகள் மாந்திரீக வித்தைகள், மோடி, கண்கட்டு போன்றவை உள்ளன

இவை மனிதனுக்கு, தான் வாழும் நாளில் அவன் அச்சத்தை நீக்கி அவனுக்கு உதவி செய்கின்றன. அவனை மேம்படுத்த துணை செய்கின்றன.

எல்கேஜி குழந்தைக்கு மிட்டாய் வாங்கித் தந்து பாடம் சொல்லிக்கொடுப்பது போலான ஒரு செயல் இது. மிட்டாய் நிச்சயம் சிறு வயதில் மட்டுமே அட்ராக்ட் செய்யும் பின் அது அப்படியே மாறிப் போகும்.

அப்படித்தான் காம்யார்த்த பக்தி அம்சத்தில் பலன்களைப் பெற மனிதன் மேற்கொள்ளும் செயல்பாடுகள். ஆலயம் செல்லுதல், வழிபடுதல், உண்டியலில் பணம் போடுதல், முட்டி மோதுதல். மொட்டையடித்தல், தேங்காய் உடைத்தல் எல்லாமே அந்த ரகம்தான்.

நமது வினைப்பாடு எப்படியோ அதற்கேற்ப காம்யார்த்த பக்தி நமக்கு சித்தியைத் தருகிறது. படுபாத

கங்கள் நமது கர்மக் கணக்கில்—பதிவில் இருந்தால், நம் புத்தி காம்யார்த்தத்தை சந்தேகப்பட்டு அதன்பலன்களை வேண்டாம் என்று மறுக்கும். அப்படி ஒன்றே இல்லை என்று கூறும்.

இதனால் கர்ம வினைப்படி அவருக்கான கஷ்ட-நஷ்டங்களை அவர் அடைவார். அதே கர்ம வினைப்படி ஒருவர் கணக்கில் புண்ணியம் நிரம்பியிருந்தால் காம்யார்த்தம் அவருக்குள் நம்பிக்கையை வளர்க்கும். யந்த்ர-மந்திரங்களை அடையாளம் காட்டும். செயலாகிய தந்திரத்தால் அவர் உரிய பலன்களை அடைவார்.

மொத்தத்தில் காம்யார்த்தம் ஒரு ஆபீஸ் இயக்கம் போன்றது. ஆபீசில் வேலை செய்தால் சம்பளம்—அதிலும் கிரேடுக்கு தகுந்த மாதிரி வேறுபாடு. அதே போல்தான் பக்திக்கும் ஈடுபாட்டுக்கும் ஏற்ற அருள். இது ஒரு ஏற்றத் தாழ்வு கொண்ட உள் அமைப்பு.

இந்த ஏற்றத்தாழ்வுதான் நமது சந்தேகத்தை அதிகரிக்கிறது. வெறுப்பைத் தருகிறது. தெய்வம் என்ற ஒன்றே இருக்க வாய்ப்பில்லை. நம்புகின்றவன் முட்டாள் அவனை ஏமாற்றுவதில் தவறில்லை. என்று பலரை நினைக்கச் செய்கிறது.

அதனால்தான் ஸ்தலங்களில் சிலர் துணிந்து தவறான பாதையில் செல்கின்றனர். இன்னும் சிலர் எனக்கு வேறு வழி தெரியவில்லை. என்னை மன்னித்துக் கொள் இறைவா, என்று இறைவனிடமே சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு, குற்ற உணர்ச்சியை துளியுமின்றி அவர்கள் வேலைகளைச் செய்கின்றனர்.

வயிற்றுப்பாடு அவர்களை அப்படிச் செய்ய வைக்கிறது. சிலருக்கு வயிற்றுப்பாடு, சிலரிடம் பேராசை. இந்த வயிற்றுப்பாடும் பேராசையும் உடைய மனிதர்

களில், நிதானமானவன், பூஜை, புனஸ்காரம்,பக்தி வழி பாடு, தானம், தர்மம் என்று செல்கிறான். நிதானம் இல்லாதவன் எல்லாமே பொய், அகப்பட்டதை சுருட்டு, சாமர்த்யமே வாழ்க்கை' என்று செல்கிறான்.

இப்படி இரண்டு விதமான மனிதர்கள் சங்கமிக்கும் இடமாகத்தான் க்ஷேத்ரம் இருக்கிறது.

இந்த க்ஷேத்ரத்தில் ஆயிரம் குறைபாடுகள இருந்தா லும், அவைகளில் புத்தியை செலுத்தாமல்-பக்தியை சிதற விடாமல் செல்கின்றவன், ஆத்மார்த்தத்தில் சுலப மாக நுழைகிறான்,

ஆத்மார்த்தத்தில் நுழைந்து விட்டவனுக்கு எந்த ஒரு மனிதனுடைய தவறும் பெரிதாகவே தெரியாது. 'பாவம் இவன்...என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் செயல் படுகிறான். இவன் வினை இவனை இப்படி வைத்திருக் கிறது' என்று சரியான சிந்தனையைத் தரும்.

அவனை மேம்படுத்த ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கும். அதில் முதலாவது அவனை மன்னிப் பதுதான்... அடுத்து அங்கீகரிப்பது. அதற்கடுத்து அவனை சகிப்பது அதற்கும் அடுத்து அவனுக்குப் புரிய வைப்பது.

இதைத்தான் ஞானிகள் செய்கிறார்கள். ஒருபுறம் காம்யார்த்தக்காரர்களை அனுசரித்தபடி மறுபுறத்தில் அவர்கள் சரணாகதி செய்து முக்தி மோட்ச நிலை எய்து கிறார்கள்.

இந்தப் பட்டியலில் வந்தவர்கள்தான் ராமானுஜர், சங்கரர், மத்வர் போன்ற மகான்கள்... இன்றைய பரமாச் சாரியார்கள், அழகிய சிங்கர்கள் எல்லோருமே...

ஆக, காம்யார்த்த பக்தி பற்றி சிந்திக்கையில் இத் தனை தூரம் பேச வேண்டியிருக்கிறது. ஒரு எலிமின்ட்ரி

பள்ளிக்கூடம்போல் அது இருந்து கொண்டு வாழ்க்கைத் துன்பங்களுக்கு காரணமான வினைகளுக்கு மருந்து தருகிறது.

அதைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டால் நாம் யாரையுமே குற்றவாளியாகப் பார்க்க மாட்டோம். ஆபீஸ் ஒழுங்குகளை கட்டுப்பாடுகளை மதித்து நடப்பவன் ப்ரமோஷன் பெற்று மேலே சென்று விடுவது போல காப்யார்த்த பக்திக்கு இலக்கணமான மந்த்ர யந்த்ர தந்த்ர விதிகளை புரிந்துகொண்டு அதற்கேற்ப பூஜை புனஸ்காரம் சம்ஸ்காரங்கள் விரதங்களில் இருந்தால் கடவுளும் நம்மைக் கைவிட மாட்டார்.

படிப்படியான முன்னேற்றம் வாழ்க்கையில் மட்டுமல்ல மனதிலும் ஏற்படும்.

அறுபது எழுபது வயதை எட்டும்போது ஆசைக்குக் காரணமான உப்பு, புளி, காரம் எல்லாம் அலுத்துப் போகும். பாசநேசமெல்லாம் மாயா ஜாதி என்பது புரிந்து, புத்தி உரிய பலத்தோடு ஆத்மார்த்தம் சரணாகதி முக்தி என்று சென்று முடியும்.

முக்தி தானே உயிரின் இலக்கு?

இந்தச் சிந்தனைகள் யாத்திரையில் வந்த பலரிடம் இருந்தாலும் சிலரிடம் இல்லை. அவர்களில் ஒருவர்தான் என்னுடன் வந்த அன்பர்.

அவர் திருமலையில் உள்ள ஓட்டை உடைசல்களில் மனதை செலுத்திவிட்டு, மலை மேலேயே கோபமும் சந்தேகமும் கொண்ட போதுதான் அவருக்கும் ஏன் எங்களுக்கும், பொட்டில் அடித்து புரிய வைப்பது போல அந்தச் சம்பவம் நடந்தது.

அது...?

# 23

காம்யார்த்த பக்தி பற்றியும் அதன் பலா பலன் களைப் பற்றியும் நான் எழுதியிருந்தேன். பல அன்பர்கள் அதுகுறித்து என்னிடம் தங்களது தெளிவை பகிர்ந்து கொண்டார்கள். பக்தி மார்க்கத்தில் தங்களுக்கு உள்ள குழப்பங்களுக்கு ஒரு தீர்வும் பக்தியின் மேல் மேலான ஈடுபாடும் ஏற்படத் தொடங்கியிருப்பதையும் குறிப் பிட்டார்கள்.

மகிழ்ச்சியாக இருந்தது. அதே சமயம் விரதம் இருப்ப தால் ஏற்படும் நன்மைகள், புனஸ்காரங்களால் ஏற்படும் மாற்றங்கள் குடும்பத்தில் நிலவும் அமைதி போன்ற வைகள் எப்படி இருக்கும் என்ற கேள்விகளும் முளை விட்டன.

அவைகளைப் பற்றி தெளிவாக எழுதும் அளவு எனக்கு ஞானமில்லை என்பதுதான் உண்மை. நானே ஒரு தேடலில் இருப்பவன். குழப்பங்கள், கேள்விகள், தடுமாற் றங்கள் என்னிடமும் மிகுதி.

அவைகளில் இருந்து மீள நான் மேற்கொண்டது தான் இந்த யாத்திரை. அதில் நான் கண்டும் கேட்டும் அனுபவித்தும் உணர்ந்ததை எழுதி வருகிறேன்.

எனவே அவைகளைப் பற்றியறிய காஞ்சிப் பெரியவர் எழுதிய 'தெய்வத்தின் குரல்' முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச் சாரியாரின் 'குறையொன்றுமில்லை' போன்ற நூல்களை வாசிப்பது, சுகி சிவம், நாகை முகுந்தன் போன்றோரின் சொற்பொழிவுகளை கேட்பதும் ஓரளவு தெளிவு தரும்.

மேலும் தெளிவு பெற பலஞானியர்களின் கருத்துக்கள் புத்தக வடிவில் வந்துள்ளன. அவைகளை வாசிப்பதாலும் தெளிவும் திடமும் அடையலாம்.

எத்தனைதான் வாசித்தாலும், கேட்டாலும் சுய அனுபவம்தான் இறுதியில், பெரிய அளவில் துணை செய்யும். அதற்கு துணை செய்வதுதான் யாத்திரைகள்.

அதிலும் திருமலை யாத்திரை மிக சிரேஷ்டமானது. மனதை அற்புதமாகப் பக்குவம் செய்வது. கஷ்ட காலங்களில் தைரியம் தருவது, அச்சம் போக்குவது...அந்த திருமலைத் தெய்வம் துணையாக இருக்கிறது—நாம் நம்பிக்கையோடும், நல்ல எண்ணங்களோடும் நடந்து கொண்டாலே போதும் என்கிற நிலைப்பாட்டை உருவாக்குவது...

எனவே அன்பர்கள் சுய அனுபவத்திற்குள்ளாக வேண்டுகிறேன். அந்த வகையில் காம்யார்த்தம் பற்றி புரியாமல் திருமலையில் நிகழும் சில ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு மனிதனின் பக்தி ஒரு மூடநம்பிக்கை சார்ந்த விஷயம் இங்கே ஊழலும் உத்பாதகமும் செய்பவர்கள் தான் என்னமாய் வாழ்கிறார்கள்?' என்று ஒரு அன்பர் எண்ணியதன் விளைவையும் அதன் எதிரொலிகளையும் இனி கூறப்போகிறேன்.

கள்ளத்தனமாக லட்டுக்களை விற்பது வரிசையில் காத்திருக்காமல் லஞ்சம் கொடுத்து குறுக்கில் உள்ளே செல்ல அனுமதிப்பது. தங்குமிடங்களில் இடம் இருந்தாலும் இல்லை என்பது போன்ற செயற்கையான டிமான்டை உருவாக்குவது, விற்கப்படும் பொருட்களில் தரம் குறைப்பது, விலையை கூட்டுவது என்று திருமலையின் தவறுகளை பட்டியல் போடலாம்.

இவைகளில் ஈடுபடுகின்றவர்கள் நல்ல லாபம் சம்பாதித்து சௌகர்யமாக வாழ்வதைப் பார்க்கும் போது, நமக்கே நம்பிக்கை நாணயத்தில் நம்பிக்கை செத்துப்போகத்தான் செய்யும்.

எங்களோடு வந்த அன்பர் ஒருவர் தன் பர்ஸை பல ஆயிரங்களோடு களவு கொடுத்துவிட்டார். அவ்வளவும் உண்டியலில் போட வைத்திருந்தது. அதை ஒருவன் களவாடி விட்டான்.

அந்த அன்பர் மனம் ஒடிந்து போனார்.

வந்த இடத்தில் இப்படி ஆகிவிட்டதே என்று புலம்பினார். திருடியவனை வைதார்.

அந்தப் பெருமாள் இருப்பது சத்தியமானால் காணாமல் போனது கிடைக்க வேண்டும். திருடியவனும் உரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று சாபம் விட்டார்.

எனக்கும் அது நியாயமாகத்தான் பட்டது. கிட்டத் தட்ட எல்லோருமே அதை நியாயமாக நினைத்தோம் ஒரு அன்பர் மட்டும் இது காரணமில்லாமல் நிகழவில்லை என்றார்.

''என்ன பெரிய காரணம்... என்னய்யா காரணம்?'' —வாக்குவாதம் ஆரம்பமாகிவிட்டது.

''இப்படி ஒரு சம்பவம் இங்கு நடக்கிறது என்றால் அதற்கு நிச்சயம் காரணம் இருக்கிறது...''

''சரி அது என்ன?''

''ஏன் நீங்களே அதை அஜாக்ரதையோடு தொலைத்திருக்கலாம்...''

''சரி தொலைத்து விட்டேன். இங்கு வந்திருக்கும் அத்தனை பேரும் பக்தர்கள் தானே? அடுத்தவர்

பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்று அவர்களுக்கும் தெரியும் தானே? அதில் என் முகவரி உள்ளது. அதைப் பார்த்து அனுப்பலாமே?''

''அதற்கு அவகாசம் தர வேண்டாமா?''

''அப்படியானால் அந்த பர்ஸ் திரும்பக் கிடைத்து விடுமா?''

''நம்புங்கள். கிடைக்கும்...''

''கிடைக்காவிட்டால்...?''

''உங்கள் அவநம்பிக்கை மற்றும் பொருள் மேலுள்ள பற்று உங்கள் வார்த்தைகளில் பளிச்சென்று தெரிகிறது, பக்தியை விட அதுதான் பெரிதாக இருக்கிறது...''

''இதைவைத்து பக்தியை எடை போட வேண்டாம்.''

''வேறு எதை வைத்து எடையிடுவதாம்?''

''பக்திக்கு அடிப்படையே நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை அந்த இறைவனைச் சார்ந்தது. அவன் தருகிறான் அவன் கேட்கிறான். அவன் எடுத்துக் கொள் கிறான் என்கிற ரீதியில்தான் அது சிந்திக்கும். நான் தருகிறேன். நான் தொலைத்துவிட்டேன் என்று 'நான்' அதில் பிரதான பங்கு வகிக்காது...'

''இதை ஒப்புக் கொள்ள முடியாது... எல்லாவற்றை யும் அவனே செய்கிறான் என்றால் நமக்கு கை கால் எதற்கு? மூளை எதற்கு? சிந்தனை எதற்கு?''

''எல்லாம் நாம் இயங்குவதற்குத்தான். அவைகளில் அவன் அருள் இருந்தால்தான் நாம் சரியாக இயங்க முடியும்...''

''இப்படி தொட்டதெற்கெல்லாம் கடவுளைக் கூப் பிடுவதும், நாமே சரி செய்து கொள்ள வேண்டியதற்கும்

அவனையே காரணமாக்கி அவனே சரி செய்ய வேண்டும் என்பதும் அபத்தமான வாதம்...''

—இப்படி பதிலுக்கு பதில் வளர்ந்து கொண்டே போன போது, எங்கள் எதிரில் ஒரு வாலிப பிராயத்து இளைஞனை அவனது தந்தையைப் போன்றவர் கையைப் பிடித்து அழைத்துச் சென்று கொண்டிருந்தார்.

அந்த இளைஞனைப் பார்க்கையிலேயே தெரிந்து விட்டது அவன் ஒரு பைத்தியம் என்று...நன்றாக இருந்த நபர்தான். தலையில் அடிபட்டதில் இப்படி ஆகிவிட்டதாம். பார்க்காத வைத்தியமில்லை, ஒன்றும் பலன் தராத நிலையில் அவர் வேங்கடவனிடம் தன் மகனை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்.

நண்பரின் கேள்விக்குப் பதில் கூறுகிற மாதிரி அவர் சில வார்த்தைகள் கூறியதை இப்பொழுது நினைத்தாலும் சிலிர்க்கிறது.

''எல்லாம் நம்ம கைலன்னு நினைச்சிண்டுருக்கோம் ஆனா மீசைல ஒரு முடி கூட நம்மை கேட்டுண்டு நரைக்கறதில்லை. நம்ம வயிறு நம்ம எஜமானர் தானேன்னு நினைக்கறதில்ல. அதுக்கு சோத்த போட்டுண்டே இருக்க வேண்டியிருக்கு. போடத்தவறினா மயக்கத்துல தள்ளிடறது.

என் பிள்ளைக்கும் அப்படித்தான்... பெரியவங்க வெச்சசொத்து இருக்கு. படிப்பு அந்தஸ்துன்னும் எல்லாம் இருக்கு—வாழறதுக்குத் தான் வாழ்க்கைன்னு வாழ்ந்தான்.

புத்தி இருந்தா போறும்னு சொல்வான். பொழைச்சிக்கலாம்பான். பக்தியும் வேணும்னு அப்ப தெரியல. எந்தப் புத்தி இருந்தா போறும்னு சொன்னானோ, அதுவே இப்ப இல்லை! எல்லாத்துக்கும் விஞ்ஞானம்

பேசறவாளால கூட இதை ஒண்ணும் பண்ண முடியலை. சைன்ஸ்க்கும் ஒரு லிமிட் இருக்குன்னு சொல்லிட்டா.

ஆனா பக்தியால கல்யாணை கரும்பு தின்னுருக்கு. செத்தவன் பொழைச்சிருக்கான். எவ்வளவோ நடந்துருக்கு. அதனாலதான் பக்தியோடு இவனை கூட்டிண்டு இங்க வந்துருக்கேன்...''

அவர் பேசிவிட்டுப் போனார். அந்த ஏழுமலையானே அன்பருக்கு பதில் சொல்ல அனுப்பியது போல் இருந்தது.

அன்று தரிசனம் முடிந்து திரும்பினோம். அவரிடம் சுரத்தே இல்லை. நான் நெருங்கிச் சென்று கேட்டேன்.

' எனக்கு என் பர்ஸ் கிடைக்க வேண்டும். பணத்துக்காக இல்லை. திருமலையானின் அருளை உணர...நான் என் நம்பிக்கையை தெரிவித்துள்ளேன் அவனிடம்'' என்றார். நான் சிரித்துக் கொண்டேன்.

வழியில் அவர் ஒரு பரிட்சை எழுதப் போவது தெரியாமல்...

அது?

# 24

கடந்த ஆண்டில் யாத்திரையில் நேரிட்ட அனுபவங்களைத்தான் இப்பொழுது பகிர்ந்துகொண்டு வருகிறேன். அதன்படி தன் பர்ஸைத் தொலைத்த ஒரு அன்பரின் ஆத்ம விசாரத்தைப் பற்றியும் எழுதியிருந்தேன்.

-அந்த பாலாஜி இருப்பது சத்தியமானால் தனது காணாமல் போன மணி பர்ஸ் திரும்பக் கிடைக்க

வேண்டும். இல்லா விட்டால் நமது பக்தியில் எந்தவித அர்த்தமும் இல்லை என்பதுபோல் அவர் சிந்தித்தது, கருத்து பரிமாறிக் கொண்டது எல்லாம் நமக்குத் தெரியும். இனி அதன் தொடர்ச்சி...

நம்பிக்கையோடும் பக்தியோடும் யாத்திரை வந்த ஒரு பக்தருக்கு இப்படி நேரலாமா? நேர்ந்தால் இப்படித் தானே யாருக்கும் புத்தி போகும் என்று நாமும் வக்காலத்து வாங்கக்கூடும்.

ஆனால் காரணம் இல்லாமல் எதுவுமே நடப்பது இல்லை என்பதுதான் நமது மதத்தின் ஆணித்தரமான கருத்து. ஒரு மனிதனுக்கு நேரும் நன்மை தீமை அனைத்துக்கும் பின்னால் அவனது கர்மம் இருக்கிறது என்கிறது நம் மதம். அவனது பாவ, புண்ணியங்கள்தான் அவனது கர்மத்துக்கு அடிப்படை. எனவே அதற்கேற்பவே அவனது நாட்கள் நகர்கின்றன என்றும் அது கூறுகிறது.

அப்படியானால் திருமலையில் பர்ஸைத் தொலைத்த அன்பருக்கு அப்படி நடக்க அவர் கர்மம் காரணம் என்றாகிறது. இதை பாமர ஜனங்கள் வேறு விதமாகக் கூறுவார்கள். 'என்ன பாவம் செய்தியோ, இப்படி தொலைச்சிட்டு நிக்கறே — உழைச்ச காசா இருந்தா நிச்சயம் திரும்பக் கிடைக்கும். இல்லாட்டி அது போற காசா இருக்கணும்'—என்று அந்த இழப்புக்கு ஒரு சமாதானம் சொல்வார்கள்.

இப்படிப்பட்ட சமாதானங்களாகட்டும்; கர்ம வினை என்று கூறி நம்மை நாமே சமாதானம் செய்து கொள்வதாகட்டும். எதுவுமே சரியில்லை. இப்படி ஒரு விஷயத்தைத் தொலைத்துவிட்டு நிற்பதன் பின்னணியில் இரண்டு விஷயங்கள்தான் உள்ளன என்பது சிலர் கருத்து.

அது என்ன இரண்டு விஷயங்கள்?

ஒன்று அஜாக்ரதை!

இன்னொன்று திருட்டு!

இதற்குமேல் இந்த விஷயத்தைப் பற்றி சிந்திப்பதும் பேசுவதும் அபத்தம் என்பது அவர்கள் கருத்து.

திருமலையில் பர்ஸை நண்பர் அஜாக்ரதையால் தொலைத்தாரா—இல்லை யாராவது அவரிடம் சாமர்த்தியமாக திருடிச் சென்றார்களா என்பது அந்த பர்ஸ் திரும்பக் கிடைப்பதில் இருக்கிறது.

எது எப்படியோ?

இரண்டும் நிகழாமல் தடுத்து அனுக்ரஹிக்க வேண்டியது அந்த பாலாஜியின் கடமை அல்லவா?''

இப்படி ஒரு கேள்வியும் நமக்குள் எழக்கூடும். எவ்வளவோ லட்சம் பேர் அவனை தரிசித்துத் திரும்புகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இப்படி ஒரு அனுபவம் ஏற்படுகிறதா என்ன...எனவே அவர்கள் அனுக்ரஹிக்கப் பட்டவர்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஒரு சம்பவம் இப்படிப் பல கேள்விகளை எழுப்புகிறது. இதற்கான தெளிவு அவரவர் பார்க்கும் விதத்திலும் சிந்திக்கும் விதத்திலும் மட்டுமே இருப்பதாக தோன்றுகிறது அப்படிப் பார்க்கும் விதத்திற்கும், உரிய முறையில் சிந்திப்பதற்கும் கூட நிச்சயம் சில அனுபவங்கள் நமக்கு அவசியமாகின்றது

அன்பருக்கு ஏற்பட்ட அனுபவம் எப்படிப்பட்டது...? அது நம்முள் ஏற்படுத்தப்போகும் தாக்கம் எப்படிப் பட்டது?

கவனிப்போமா?

அன்பர் பர்ஸ் பற்றிய விசாரத்தை பாலாஜியிடம் விட்டுவிட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டார். அதாவது 'பர்ஸ் திரும்பக் கிடைத்தால் பாலாஜி இருக்கிறான். இல்லாவிட்டால் அவன் இல்லை. நாம்தான் அவன் இருப்பதாக நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறோம்'-என்று அவர் தனக்கு ஏற்பட்ட இழப்பை ஒருபோது நம்பிக்கையோடு பிணைத்து ஒரு முடிவிற்கும் வந்து விட்டார்.

சரி அவருக்கு என்னாயிற்று?

பர்ஸ் திரும்பக் கிடைத்ததா...இல்லை அவர் பாலாஜி விஷயத்தில்

அவநம்பிக்கைக்கு உள்ளானாரா? என்ன நடந்தது...?

—இதுதான் இப்பொழுது நம்முன் உள்ள கேள்வி...

காரணமில்லாமல் எதுவும் நடப்பதில்லை என்று நம் மதம் கூறுவதாகக் கூறியிருந்தேன். அதன் பின்புலத்தில் தமது கர்மங்கள் ஒளிந்திருப்பதாகவும் அவைகளே நமது நாட்களை இயக்குகின்றன என்பதும் அதுவே நமது மதத்தின் கருத்தாகவும் இருப்பதையும் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

அது எப்படி?

இதன் கருத்து எந்த அளவு உறுதியானது,வலுவானது என்பதற்கு காஞ்சிப் பெரியவர் மூலமாக நமக்கு விடை கிடைக்கின்றது.

அந்த விடையைத் தெரிந்து கொண்ட நிலையில் நமது அன்பரின் பர்ஸ் தொலைப்பு அனுபவத்திற்குச் செல்வது நல்லது என்று தோன்றுகிறது.

காஞ்சிப் பெரியவர் சமீப காலத்தில் நாமும் நமது சந்ததியினரும் பார்க்க கிடைத்த ஒரு தெய்வீகப் புருஷர்,

மாற்று மதத்தவர்களும் அவர்பால் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் பிரமிப்பூட்டக்கூடியது.

அவரது உரைகளை எல்லாம் தொகுத்து 'தெய்வத்தின் குரல்' என்கிற பெயரில் புத்தகமாக போட்டுள்ளார்கள் இந்த புத்தகத்தை வாசிக்க நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

நமது வாழ்க்கையில் நமக்கு நேரிடும் பலவித குழப்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் விடை அதில் இருக்கிறது. மிக எளியமுறையில் அனந்தமான சொற்களில் பெரியவர் பேசியதை அப்படி புத்தகமாக தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

ஒருமுறை அவரை ஒரு வெள்ளைக்காரர் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தாராம். பேச்சில் மதம் அதன் நம்பிக்கைகள் குறித்த விசாரங்களும் சிந்தனைகளும் தூக்கலாக இருந்தன.

வெள்ளைக்காரர் கர்மவினை என்கிற கான்செப்டை நம்புவதாக இல்லை. 'அதெல்லாம் பொய் மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் அவன் உடல் அமைப்பும், உயிர்த்துடிப்பும் விஞ்ஞானத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டது. அவன் செயல்களை நல்லதென்றும், கெட்டதென்றும் நாம்தான் பாகுபடுத்திப் பிரித்துக் கொள்கிறோம். உண்மையில் நல்லது கெட்டது என்று தனித்தனியே கிடையாது.

இறந்த பிறகு நல்லவரோ கெட்டவரோ எல்லோரும் ஒருவரே... திரும்பப் பிறப்பது என்பதோ பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப சுக துக்கங்களை அனுபவிக்கிறோம் என்பதோ எல்லாம் கற்பனை எங்கள் மதம் எல்லோரையும் மன்னித்து விடுகிறது. மறுபிறப்பு இருப்பதாகவும் அது கூறவில்லை. இறந்து மீண்டும் உயிர்த்தெழுந்த ஒருவர் எங்கள் தேவன் மட்டுமே. அவர் அனைத்துப்

பாவங்களையும் மன்னித்து மோட்சம் தந்து விடுகிறார். என்று கூறிவிட்டு பெரியவரின் கருத்துக்காகக் காத்திருக்க, பெரியவரும் ஆழமான புன்னகையோடு பதில் கூறத் தொடங்கினார்.

''கர்மவினை என்று ஒன்று இல்லாவிட்டால் ஏற்றத் தாழ்வுகள் இல்லாத பிறப்பல்லவா உலகத்தில் ஏற்பட வேண்டும்? ஒரு குழந்தை பணக்காரன் வயிற்றிலும், ஒரு குழந்தை ஏழை வயிற்றிலும் பிறந்து சுகதுக்கங்களை அனுபவிக்க எது காரணம்? அதேபோல் ஒரு குழந்தை கருப்பாகவும், ஒரு குழந்தை சிகப்பாகவும் பிறக்கவும் எது காரணம்?'' என்று பதில் கேள்வியை அவர் கேட்டார்.

'This is quite nature' என்கிற ஒரு பதிலைத் தவிர வேறு பதிலை அந்த வெள்ளைக்காரரால் கூற முடியவில்லை. பெரியவரின் கருத்து சத்தியவாக்காக தொடர்ந்தது.

பிறப்பில் அரியப் பிறப்பு மானிடப் பிறப்பு.

இந்தப் பிறப்பாளருக்குத்தான் ஆறாம் அறிவை இயற்கை அளித்திருக்கிறது. அந்த இயற்கையையே அதன் பின் அவன் புரிந்து கொள்கிறான். அப்படி புரிந்து கொண்டபின் அவன் எப்படி இயற்கையையும் வென்று பரிபூரண துன்பமில்லாத இன்ப நிலையை அடைகிறான் என்பதில்தான் அவனது வெற்றியும் உள்ளதும் அடங்கியிருக்கிறது.

அந்த வெற்றிக்குத் துணை புரிகின்றவைதான் ஆன்மிக சிந்தனைகள். இந்த ஆன்மிகத்தில் நான் இந்து முஸ்லிம் கிறிஸ்துவம் பௌத்தம் சமணம் என்று பல பிரிவுகள். இந்த பிரிவுகளில்தான் கடவுளர்கள் இயக்கம் நன்றாக உணரத் தொடங்கிவிட்டால் இந்த கடவுளர்கள் வேறு; நாம் வேறு அல்ல என்கிற ஒற்றுமை தெரியவரும்.

அதன் பின் நிலைத்த இன்பம். நிலையாத இன்பம் பற்றி ஒரு தெளிவு ஏற்படும்.

அப்படி உணரத் தொடங்குவதில்தான் இருக்கிறது கர்மவினை. முன் செய்த வினைதான் இப்பொழுது நம் பிறப்பில் நம்மைச் செலுத்துகிறது. எனவே இப்பிறப்பில் நாம் செய்யும் செயல்களே வரும் பிறப்பில் நாம் மகிழ்வாக வாழ வழி வகை செய்யும்.

அப்படி வாழும்போது நல்ல செயல்களைச் செய்தும் பழையகர்மங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அது நமக்கு நன்மை செய்யவே வந்தது என்று எண்ணியும் செயல்பட்டால் அடுத்தடுத்த உயிரின் போக்கு உன்னதமாக இருக்கும். என்று பெரியவர் தொடர்ந்து கூற அதை அந்த வெள்ளைக்காரரும் மறுமொழி கூறாமல் ஏற்றுக் கொண்டார்.

பெரியவர் கூற்றை நன்றாகக் கவனித்தால் ஒரு உண்மை புரியவரும்.

நமது இன்றைய இன்ப துன்பங்களுக்கு காரணம் முன்வினை... எனவே நடப்பது அனைத்தும் முன்வினையாலேயே... அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு நிகழ்காலத்தில் நாம் நல்லவிதமாகச் செயல்பட வேண்டும். இதை ஒருவன் சரியாகச் செய்யும் பட்சத்தில் அவன் எதையும் இழந்து விட மாட்டான். மனிதப் பிறப்பில் இருந்தும் விடுதலை கிடைக்கும் என்பது புலனாகிறது.

அப்படியே இந்தக் கருத்தை திருமலை யாத்திரையில் பர்ஸைத் தொலைத்த அன்பருக்குப் பொருத்திப் பார்ப்போமா?

அவர் தனக்கு நேரிட்ட இழப்பை கர்மவினையாக கருதினாரா என்றால் இல்லை? மாறாக அதை மையமாக வைத்து நிறைய கேள்விகள் எழுப்பினார்.

கர்மவினை மேல் நம்பிக்கை வைத்திருந்தால் தனக்கு நேரிட்ட இழப்பு அவர் வரையில் இழப்பாக இருந்திருக்காது. அது ஒரு அனுபவமாக மாறியிருக்கும். ஒரு காரணத்தோடுதான் அது நடந்திருக்கிறது என்பது தெரிய வந்திருக்கும்

'அந்தக் காரணத்தை எனக்கு விளக்குவாயா இறைவா?' என்ற கேள்வி வேண்டுமானால் சரியாக இருந்திருக்கும்...

ஆனால் அவர் எப்படிக் கேட்டாலும் கேட்காமல் விட்டிருந்தாலும் நடந்ததற்கு ஒரு காரணம் இருக்கத்தானே செய்கிறது?

அது என்ன?

அன்றைக்கு அவர் ஒரு பொருளை இழந்தாக வேண்டும் என்பதா? இல்லை. வேறு என்ன...?

அன்பரின் கருத்துப்படியே காத்திருக்கத் தொடங்கிய நானும் மற்றவர்களும் அவரைக் கூர்ந்து கவனித்தோம். அவருக்குத் தொடர்ச்சியாக என்ன ஆகப் போகிறது என்று பார்க்கத் தொடங்கினோம்.

இந்த நிலையில்தான் நாங்கள் யாரும் எதிர்பார்த்திராத நிலையில், ஏன் அவரே எதிர்பார்த்திராத நிலையில் அந்தச் சம்பவம் நடந்தது.

அவர் கைவசம் ஒரு மணி பர்ஸ் கிடைத்தது.

அது வேறு யாரோ தவறவிட்டது.

அதிலும் கட்டுக்கட்டாகப் பணம்! நண்பர் தொலைத்ததை விடவும் கூடுதலாக...

இது என்ன இப்படி?

அன்பர் தொலைத்ததுக்குப் பெருமாள் காம்பன்சேஷன் தருகிறாரா—இல்லை அந்த அன்பரை வேறு விதமாகச் சோதிக்கிறாரா...?

எது எப்படியோ...?

ஆயிரம் கேள்விகள் எழுப்பிய அன்பர் முன், இப்பொழுது ஒரே ஒரு கேள்வி.

இந்தப் பர்ஸை நீ வைத்துக்கொள்ளப் போகிறாயா.. இல்லை உரியவரைத் தேடிக் கண்டுபிடித்துத் திருப்பித் தரப் போகிறாயா?

இந்த கேள்விக்கான விடையில்தான் அவர் கேள்விகளுக்கான விடைகள் இருக்கின்றனவோ?

# 25

பர்சும் கையுமாக நின்ற நண்பர் மனதில் ஆயிரம் கேள்விகள். இது கடவுள் தனக்குக் கொடுத்த காம்பன்சேஷனா...? இல்லை. தன் நேர்மைக்கு வைக்கும் பரீட்சையா...?

உண்மையில் நல்ல கேரக்டர் உடைய ஒருவராக இருந்தால், அடுத்த நொடியே அந்த பர்ஸ் யாருடையது என்பதைக் கண்டறிந்து ஒப்படைக்கத்தான் ஆசைப்படுவார்கள்.

பள்ளி, கல்லூரிகளில் மட்டும் பரீட்சை நடப்பதில்லை. வாழ்க்கையிலும் பரீட்சைகள் உண்டு. அதில் எவ்வளவு மார்க் வாங்கிப் பாஸ் செய்கிறோம் என்பதில்தான் ஒரு மனிதனின் வாழ்க்கை வெற்றி அடங்கியுள்ளது.

சரி; எங்கள் நாட்டின் யாத்திரை வந்த அன்பர் என்ன செய்தார்?

நெடுநேரம் பர்ஸை வைத்துக் கொண்டு யோசித்தவர், அதை உரியவரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார்.

அதற்கேற்ப அதில் விலாசமும் இருந்தது. அதன்படி அவருக்குத் தகவல் தந்து பர்ஸை ஒப்புவிக்கத் தீர்மானித்தார். நாங்களும் அதுதான் நல்ல மனிதனுக்கழகு என்று பாராட்டினோம்.

ஒரு பார்வையாளனாக இருவரை எல்லாவற்றையும் பார்த்து வந்த நான் அன்பரின் செயலுக்குப் பின்னால் நெகிழ்ந்து போனேன்.

'கடவுளே... அவருடைய நம்பிக்கையைக் காப்பாற்று. அவர்தான் ஒரு நல்ல மனிதன் என்பதைக் காட்டிவிட்டார். நீயும் காக்கும் தெய்வம் என்பதைக் காட்டிவிடு - என்று என்னையும் மீறி பிரார்த்தித்துக் கொண்டேன்.

யாத்திரை முடிந்து திரும்பிய பிறகு அவரது முகவரிக்கு அவர் தொலைத்த பர்ஸ் வந்து சேர்ந்ததாகவும் அறிந்தபோது எனக்கு மெய்சிலிர்த்தது.

இது இப்படி என்றால், இதே வேங்கடவன் எதிர்ப்பதமாகவும் விளையாடி வாழ்வின் பரிமாணங்களை உணர்த்திக் காட்டியதை என்னவென்று சொல்வது?

மதுரையில் இப்பொழுது பணியில் இருக்கிறார் கிருஷ்ணமூர்த்தி என்கிற அன்பர். வருமான வரித்துறைப் பிரிவில் இன்ஸ்பெக்டராக இருப்பவர். இவரை வேங்கடவன் சலவை செய்த கதை, ஒரு சோகமான கதை.

திரு. கிருஷ்ணமூர்த்தி ஐம்பது வயது கடந்து விட்டவர் இந்த நிலையிலும் ஆண்டுதோறும் திருமலை, சபரிமலை, திருப்பரங்குன்றம், அழகர்மலை, திருமோகூர் என்று விடாமல் யாத்திரைகள் புரிபவர்; அதுவும் நடந்து...!

யாத்திரையில் எல்லோரும் வேகமாக நடக்கும் போது இவர் மட்டும் ஒருவித நிதானத்தோடு அதே

சமயம் சீராக, நடந்து வந்து கொண்டிருப்பார். இவரது பக்தி எனக்கு ஆச்சரியமான விஷயம்!

ஒரு திருமலை யாத்திரையின் மதர்ப்பே அந்த ஆண்டு முழுக்க என் போன்றவர்களை கட்டிப் போட்டு, விடும் நிலையில், எப்படி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் ஒவ்வொரு கோயிலாக நடந்தே போகிறார்கள், அதிலும் வயதான காலத்தில் என்று நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

அவரது இந்தத் தீவிர பக்திக்குப் பின்னாலே நெகிழ்ச்சியோடும் சம்பவம் ஒன்று உண்டு. அதை அவர் விவரித்தபோது எனக்குள் ஏற்பட்ட எண்ணங்களை வடிக்க வார்த்தைகளே இல்லை.

கிருஷ்ணமூர்த்திக்கு இரண்டு மகன்கள். இதில் பெரியவனை மின்சார ரூபத்தில் வந்து, அந்த இறைவன் கைப்பற்றிச் சென்று விட்டான். சீமந்த புத்திரனை ஒரு கல்லூரி மாணவனை, மின் விபத்தில் இழந்தவுடன், உயிரிருந்தும் இல்லாது போய்விட்டார் கிருஷ்ணமூர்த்தி. அவரது துணைவியாரும் அவரைப் போலவே மகன் நினைவாக மயங்கிட காலச்சக்கரமும் சுழல ஆரம்பித்தது.

நல்ல பக்தர்களாக இருந்தும் அந்த இறைவன் கருணை காட்டாமல் மகனைக் கவர்ந்து சென்று விட்டதால் கிருஷ்ணமூர்த்திக்கு கடவுள் மேலேயே கோபம் வந்தது.

அதிலும் மாண்டவனுக்குப் பெயர் வெங்கடேஸ்வரன்! அந்த பாலாஜியின் திவ்ய நாமமாயிற்றே...! எனவே திருமலைக்கே இனி போகக்கூடாது என்பதுபோல சங்கல்பம் செய்து கொண்டு விட்டார். ஆனால், காலம் அவரை மாற்றி மீண்டும் திருமலைக்கு அழைத்தது. அது தான் விந்தை!

ஃபென்னர் நாகராஜன் என்பவரும் யாத்திரை புரியும் அன்பர்களுள் ஒருவர். இவர்தான் கிருஷ்ணமூர்த்தியை மாற்றியவர்; தேற்றியவர்.

''பிறப்பும் இறப்பும் கர்மப்படி நடப்பவை. என்ன பாவம் செய்தீர்களோ பெற்றமகனை இழந்துவிட்டீர்கள். அந்த இழப்பை வேங்கடவனுக்குச் செய்த காணிக்கையாக நினைத்துக் கொள்ளுங்கள், உங்கள் பிள்ளை அந்த வேங்கடவனைச் சேர்ந்ததாகவும் நினையுங்கள். நடக்கத் தொடங்குங்கள்...நடப்பதும் நல்லதாக இருக்கும் காரணமில்லாமல் எதுவுமே நடப்பதில்லையே...''—என்று தேறுதல் கூறினாராம்.

அது முதல் கிருஷ்ணமூர்த்தியின் மனதும் மாறத் தொடங்கியது. 'தன் நடைப் பயணம், அதனால் உருவாகும் தெய்வீகத் தொடர்புகள், அது உருவாக்கி அளிக்கும் அனைத்தும் இறந்து போன மகனுக்கே போய்ச் சேர்ந்து, அவனுக்கே ஆத்ம சாந்தி தரட்டும். இந்த தந்தை அதையாவது செய்கிறேன். அதே சமயம் ஒரு பேரிழப்பிற்குப் பிறகும் பக்தி குன்றாது நம்பிக்கை வைத்துத் துதிக்கும் எனக்கு, அந்த வேங்கடவன் இனியாவது துணை நிற்கட்டும்' என்பதுதான் கிருஷ்ணமூர்த்தியின் இன்றையப் பிரார்த்தனை.

மனிதர்கள் பல ரகமாக இருக்கிறார்கள். அவர்களை யாத்திரையிலும் பார்க்க நேரிடுகிறது. அவர்களுக்கு இந்த யாத்திரை ஒரு வடிகாலாக, வழிகாட்டியாக எல்லாமுமாக அமைந்து விடுகிறது. கிருஷ்ணமூர்த்திக்கும் அப்படித்தான். யாத்திரையால் அவர் தெம்பு பெறுகிறார் நெறியோடும் வாழ்கிறார். நிறைய தான தர்மங்களும் செய்கின்றார். ஒரு மகனை இழந்தவர் ஊரில் இருப்பவர்களை எல்லாம் மகனாக நினைக்கிறார். ஒரு துயரச் சம்பவம் எப்படி மாறிவிட்டது? பார்க்கும் விதத்தில்தான்

எல்லாம் இருக்கிறதோ? அந்த பார்வையை பக்குவத்தை பக்திதானே தருகிறது? பக்தியின் முற்றிய செயல்தானே பாதயாத்திரை...

இப்படி தனக்குத்தானே துன்புறுத்திக் கொண்டு இறைவனை நிர்ப்பந்தித்து பக்திசெய்வது நல்ல ஒன்றல்ல. இது ஒருவிதமான சுயநலம். இது ஒரு விதமான வீம்பு. இது ஒரு விதமான பேராசை என்கிற விமர்சனங்கள் சில சமயங்களில் பாத யாத்திரை குறித்து வருவதுண்டு.

ஆனால் நானறிய பாத யாத்திரை செய்து ஸ்தலங்களை தரிசிப்பதைப்போல் ஒரு ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான விஷயம் வேறு இருக்க வாய்ப்பே இல்லை.

எப்பொழுதும் உடம்பு வலிக்காமல் மனசும் நோகாமல் வாய்க்கு ருசியாக சாப்பிட்டு கவர்ச்சியாக உடை உடுத்தி ஸ்வர்ணாபரணம் தரித்து உல்லாசியாக இருக்க வேண்டும். அதற்குத்தான் மனிதப் பிறப்பே என்பது சிலர் கருத்து.

ஒவ்வொருவரும் அதன்படி வாழத்தான் பிரயத்தனப்படுகிறோம். ஆனால் அது முடிகிறதா என்பது வேறு விஷயம். வேலைக்குப் போகும் இடத்தில் ஓய்வெடுக்க முயற்சிக்கிறோம் உல்லாசங்களிலேயே எப்பொழுதும் கிடக்க விரும்புகிறோம். மாடிப்படி ஏறுவதுகூட சிரமமாக இருப்பதால், லிஃப்ட் வைத்துக் கொள்கிறோம்

இப்படி சௌகர்யம், சந்தோஷம் உல்லாசம் என்று இருக்கும் சரீரத்தை நடத்தி அழைத்துச் செல்வது என்பது சாதாரணமான ஒரு விஷயமா என்ன? அதிலும் ஏறி அமர்ந்தால் ஏழாயிரம் கிலோமீட்டராக இருந்தாலும் ஏழு மணி நேரத்தில் போய் விடமுடியும் என்கிற வசதி

வாய்ப்புள்ள நாளில், அலைகளை முழுவதும் ஒதுக்கி விட்டு நாராயணா... நாராயணா என்று ஜெபித்தபடி நடக்க எத்தனை துணிவு வேண்டும்? அந்த துணிவைத் தரும் பக்தி என்ன லேசுப்பட்டதா?

பாதயாத்திரையில் பங்கு கொள்ளத் தொடங்கிய பிறகே சரீரம் பற்றிய பிரக்ஞையும் அதை ஆரோக்கிய மாக பாதுகாப்பது எவ்வளவு முக்கியம் என்பதும் எனக் குப் புரிந்தது. என்று கூறும் அன்பர் ராஜாராம்,

'பாதயாத்திரையை வெற்றிகரமாக முடித்த பின்பு எத்தனை கடினமானதையும் முயன்றால் வெற்றிகொண்டு விடலாம் என்கிற எண்ணம் வலுப்பட்டதாகக் கூறும் வைத்யநாதன்,

'யாத்திரையில் பங்கு கொண்டு எல்லாவித சூழல்களி லும் சாப்பிட்டுத் தூங்கி எழுந்து செயல்பட்டதால், வாழ் வில் அசௌகர்யமான சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு அதைத் தாங்கும் மனவலிமை உருவாகியுள்ளது' எனும் ஸ்ரீதர்...

ஆனால், இந்த யாத்திரைக்கு அடித்தளமாகவும் தூண்டுகோலாகவும் திகழ்ந்து, ஆண்டுக்கு குறைந்தது இருமுறை என்று 25 ஆண்டுகளில் 50 முறைக்கும் மேல் யாத்திரை புரிந்தே வேங்கடவனைத் தரிசித்த திரு சேஷன் இந்த யாத்திரை பற்றி என்ன சொல்லப் போகிறார் அது?

# 26

இந்த ஆன்மிகத்தொடரில் நான் பல பேரைப் பற்றி எழுதிவிட்டேன். ஆனால் இவர்களில் திரு சேஷன்

அவர்களின் ஈடுபாடும், அனுபவமும் பலவிதங்களில் வேறுபட்டது.

திருமலை யாத்திரையைப் பொறுத்தவரை இருபத்தைந்தாம் ஆண்டை நெருங்கிவிட்ட சேஷன் சமாஜத்தின் ஒரு பிரதான தூண். கடந்த 24 ஆண்டுகளில் சராசரியாக வருடத்திற்கு இருமுறை நடந்தும், பின் மறுமுறை வாகனங்களில் பயணித்தும் அந்தத் திருமலைக்கு சென்று வந்திருப்பவர்!

கிட்டத்தட்ட அது அந்த நாராயணனின் அஷ்டோத்திர அளவான 108-ஐக்கூட கடந்திருக்கும். தான் தரிசிப்பதற்காக பயணிப்பது என்றில்லாமல், என்னைப் போல் பலரும் மெய்யனுபவம் பெறவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டதில் தோன்றியதுதான் வெங்கடேச பக்த சமாஜத்தின் பாதயாத்திரை வைபவம்!

யாத்திரை நீங்கலான பல கட்டங்களில் சமாஜம் மூலமாக சேவைகள் புரிவது என்பதும் அவரது நோக்கம். அதற்காக அவருக்கு பக்கபலமாகவும், சமயங்களில் அவரையும் விஞ்சுமளவு பக்தி காட்டி சேவை புரியும் பல பக்த ரத்தினங்கள் இன்னும் சமாஜத்தில் இருந்து கொண்டு சேவைபுரிந்து வருகிறார்கள்.

அவரது அனுபவங்களைப் பார்க்கும் முன்பு, இன்னொரு விஷயத்தையும் சொல்ல வேண்டும்.

நமது இந்துமதத்தில் தெய்வங்களுக்கு குறைவே இல்லை. பரம்பொருள் ஒன்றாக இருந்தபோதிலும், 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்கிற நிலைப்பாட்டிற்கேற்ப, 'பிரம்மா, விஷ்ணு, சிவன்' என்றும் அவர்கள் பத்தினிகளைக் கூட கல்வி, செல்வம், வீரத்தை அளிக்கின்றவர்களாகக் கொண்டும் நாம் வழிபாடு செய்து வருகிறோம்.

சரி; எதற்கு இத்தனை தெய்வங்கள்?

அனைத்தையும் தன்னுள் கொண்ட அந்தப் பரம்பொருளான வேங்கடவன்—ஸ்ரீமன் நாராயணனை மட்டும் தொழுதால் போதாதா?

இத்தனை கடவுளர் அம்சங்களையும் பக்தி செய்யத்தான் வேண்டுமா? பலருக்கு இப்படித் தோன்றினாலும் ஆழ்ந்து சிந்தனை செய்தால், நமக்கு இதில் பல உண்மைகள் புலப்படும்.

இன்றைய மனித வாழ்க்கை என்பது வெந்ததைத் தின்றுவிட்டு வேளை வந்தால் செத்துவைக்கிற ஒன்று மட்டுமன்று; வாழும் நாளில் மனிதனின் மனத்தை எத்தனையோ விஷயங்கள் ஆட்சி செலுத்துகின்றன. எத்தனையோ பொருட்கள் நமக்கு தேவையாகவும் இருக்கின்றன!

ஆசை, பாசம், காமம், குரோதம் என்று உணர்வுகளிலும், செல்வம் தரித்திரம் என்று வளத்திலும், ஆரோக்கியம், வியாதி என்கிற நிலைப்பாடுகளிலும்தான் நாம் வாழ்க்கையை கடக்க வேண்டியுள்ளது.

பசியும் துன்பமும் வியாதியும் வேதனையும் உள்ள மனிதன், புரிதலோடு பக்தி செய்து பரம்பொருளைப் பற்றி அறிந்து கொள்வது என்பது அத்தனை சுலபமல்ல.

ஆனால், இந்துவாகப் பிறந்த ஒருவன் அல்லது இந்து மதக் கோட்பாடுகளை புரிந்த ஒருவன் முதலில் வாழும் நாளில் சுலபமாகவும், தெளிவாகவும் தன் தேவைகளை பல்வேறு தெய்வ வணக்கத்தின் மூலம் அடைந்துவிடுகின்றான். பின், வாழ்க்கையைப் பற்றியும், மனிதப் பிறப்பையும் நன்கு புரிந்துகொள்கிறான்.

அப்படியானால் ஒரே கடவுளைக் கொண்ட மற்ற மதங்களில் இம்மட்டில் குழப்பம் நிலவுகிறதா...அவர்கள்

மதித்துத் துதிக்கும் தெய்வமானது, அவர்களுக்கு அவர்கள் கேட்டதைத் தருவதில்லையா என்று குதர்க்க மாக இங்கே கேள்வி கேட்கவேண்டாம்.

மனித மனத்தின் இயக்கத்தைப் புரிந்து அதற்கேற்ப அவனை வழி நடத்துகிறது இந்து மதம்.

ஒரு பெரிய நிறுவனத்தில் நிறைய உட்பிரிவுகள் இருக்கும். குமாஸ்தா, கணக்காயர், மேலாளர், கண் காணிப்பாளர் என்று அந்தப் பிரிவுகள் அவரவர் வேலை யைச் செய்யும். உச்சபட்சமாக முதலாளி என்பவர் இருப்பார்.

அந்த நிறுவனத்தைப் பயன்படுத்த விரும்புகின்றவர் நேராக முதலாளியைத்தான் சந்திக்கவேண்டும். அவர் தான் அனைத்து தேவைகளையும் நமக்கு பூர்த்தி செய்து தரவேண்டும் என்றில்லை. நம் தேவைக்கு ஏற்ப நாம் யாரைச் சந்திக்க வேண்டுமோ அவரைச் சந்தித்தாலே போதும். அவர் மற்றவர்கள் துணையோடு நமக்கு வேண்டியதைச் செய்து கொடுத்துவிடுவார்.

இதில் ஒரு சௌகர்யம் இருக்கிறாற் போல, பக்தி யிலும் நமக்கு ஒரு சௌகர்யத்தை நமது மதம் உருவாக்கி அளித்திருக்கிறது.

ஸ்ரீஹயக்ரீவனைத் துதித்த சுவாமி தேசிகன் கல்வி, கேள்வி வித்தைகளில் மேம்பட்ட மகாஞானியானார். அகிலாண்டேஸ்வரியை துதித்த காளமேகம் கவிச்சக்கர வர்த்தி ஆனான். ஸ்ரீராமனைத் துதித்த தியாகைய்யர் கீர்த்தனைகளைப் பாடியளித்தார். சிவனை தொழுது அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றான். கனகதாரா பாடி சங்கரர் பொன்மழை பொழிய வைத்தார். விநாயகர் அகவல் பாடிய ஔவை நேராக கைலாயம் போய் நின்றாள்.

பாருங்கள்; அருளுவதில் ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. அவரவரும் தன்னைச் சரண் புகுந்தவர்களைக் காத்து ரட்சிக்கிறார்கள். அவர்களே ஒன்று பலவாக முதலிலும், பின் பலரும் ஒன்றுதான் என்று பின்னாலும், புரிய வைக்கிறார்கள்.

சரி; இந்தப் பீடிகை எதற்கு?

காரணம் இருக்கிறது. பாலாஜியின் பரமபக்தரான சேஷன் அவர்களுக்கு வடக்கே அமர்நாத் பனிமலையில் குடிகொண்டிருக்கும் அந்தச் சிவமூர்த்தியை தரிசிக்க வேண்டும் என்பதும் ஒரு ஆசை. அப்படியே ரிஷிகேசர், பத்ரிநாத் என்று எல்லா க்ஷேத்திரங்களுக்கும் சென்று அத்தனை தெய்வங்களையும் வணங்கித் திரும்ப வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன் அவர் விரும்பினார்.

எங்கும் தனியாகச் செல்வது சேஷனுக்குப் பிடிக்காத ஒன்று. சங்கம் அமைத்துக் கொண்டு ஜனக் கூட்டமாக செல்லத்தான் பிடிக்கும்.

எனவே ஒரு இருபத்தி ஆறுபேர் கொண்ட ஒரு குழுவோடு கிளம்பிச் சென்றார். ஆனால், அந்தப் பயணம் அவரது வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தை உருவாக்கி விட்டது.

அவரால் அமர்நாத்தை அடைந்து, அங்குள்ள சிவ சொரூபத்தை தரிசிக்கவே முடியவில்லை. அந்த யாத்திரை ஒரு பெரிய சோதனையாக மறக்க முடியாத அனுபவமாக மாறத் தொடங்கியது.

துளியும் யாரும் எதிர்பாராதபடி பருவ நிலையில் திடீரென பலத்த மாற்றம் நேரிட்டு பனிமலை உருகத் தொடங்கியது. கடும் காற்றும் மழையும் சீறிக் கிளம்பின.

செப்டம்பர் முதல் வாரத்தில் வரவேண்டிய பருவ மாற்றம் ஆகஸ்டு மாத நடுவிலேயே வந்துவிட்டது.

ஆயிரக்கணக்கான பக்த கோடிகளை, அந்தப் பனி மலை அப்படியே அள்ளி விழுங்கத் தொடங்கியது. பனிச் சரிவில் சிக்கி பலர் அப்படியே சமாதியானார்கள்.

இதையெல்லாம் கண்டபடி ஒரு கூட்டம் உயிரைக் கையில் பிடித்தபடி திரும்பிக் கொண்டிருந்தது. அதில் சேஷனும் ஒருவர்.

எந்த நொடியிலும் யாருக்கும், எதுவும் நடக்கும் என்கிற நிலை. ஒவ்வொருவரும் வேண்டாத தெய்வமில்லை.

சேஷனும் அவரது குழுவினரும் அந்த மரண வினாடிகளில் வேங்கடவனை சிக்கெனப் பிடித்துவிட்டனர். ஒவ்வொரு கட்டமாக தப்பிவருகின்றனர். அவர்கள் ஒரு இடத்தை கடந்த மறு நொடி, அங்கு பனிச்சரிவு ஏற்படும்; பின் அந்த இடமே இல்லாமல் போகும்.

திரும்பிப் பார்த்தால், அதிர்வில் இதயம் நின்றுவிடலாம். அப்படி ஒரு மரணத்தின் வாசலில் அது...

ஒரு இடத்தில் குளிர் தாங்காமல் ஒரு குதிரை வண்டிக்காரனும், அவனது குதிரையும் மெல்ல உயிர்விட்டதை கண்ணெதிரே பார்க்க நேர்ந்தது. எந்த ஒரு உதவியும் செய்ய முடியவில்லை.

மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. மருந்தோ உணவுப் பொருளோ எதுவுமே கையில் இல்லை.

எங்களால் என்ன செய்யமுடியும்? அந்த வேளையில் ஓடுவதற்காக உடம்பில் தெம்பிருந்ததை நினைத்து சந்தோஷப் படுவதா இல்லை இப்படி மரணங்களைப் பார்க்க நேர்ந்ததற்காக வருத்தப்படுவதா?''

அந்த அனுபவத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார் சேஷன்.

இந்த நிலையில்-உடன் வந்த குழுவினரில் 10 பேர் பெண்கள். பலர் அதில் வயதானவர்கள். அவர்கள் சேஷனையும், அவரது சகாக்களையும் பிரிந்து வேறு ஒரு பாதையில் போய்விட்ட அவலம் வேறு...

எப்படி இருக்கும் அந்த மனநிலை...?

விஷயம், தமிழக சட்டசபையில் பேசப்படும் அளவு விஸ்வரூபமல்லவா எடுத்தது?

'வேங்கடவா, என்ன இது சோதனை?'

சேஷன் கேள்வியோடு பிரார்த்திக்கிறார். அவனது திருமலைக்கு அத்தனை பேரும் நடையாக நடந்தவர்கள் ஆயிற்றே...? வேங்கடவனும் அதற்கு மேல் சோதிக்கவில்லை...

எல்லைப் பாதுகாப்பு படையில் உள்ள சிலர் மூலமாக பேருதவி அளிக்கத் தொடங்கினான். அதில் ஒருவர் 'யாரோ பத்து பேர் வழி தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர்' என்று கூறி இடத்தையும் குறிப்பிட, சேஷனும் மற்றசகாக்களும் அந்த இடம் நோக்கி புறப்பட்ட சில நிமிடங்களில், அந்த இடத்தையும் பனியும் காற்றும் ஆக்ரமிக்கின்றன.

ஆனால் அந்த இடத்தை நெருங்குவதற்குள் அந்த பத்துபேர் எப்படியோ நடந்து பகல்லூர் என்னுமிடத்தை அடைந்துவிட்டனர்...

அடேயப்பா...அடுத்தடுத்து சோதனை?

சிலரின் சில வார்த்தைகள், சில முடிவுகள் அதன் காரணமாக புறப்பாடுகள் அவை ஒவ்வொரு இடத்தி லும் சேஷனையும் அவரது குழுவினரையும் எப்படியோ பத்திரமாக கரை சேர்த்துவிட்டது; உயிர் மூச்சும் ஒழுங்குபடுகிறது.

சரி; தப்பித்து விட்டோம் என்று கருதி துளி இளைப் பாறிவிட்டு ஒரு சாலையை கடக்கும் போதும் காலன் விடத்தயாரில்லை, ஒரு ஜீப் வடிவில் வந்து சேஷனைத் தூக்கி எறிந்து உயிர்பறிக்க முயல, வேங்கடவனின் கரங்கள் அவரை மாயமாக வந்து தாங்கிப் பிடிக்கின்றன.

ஒன்றுமட்டும் நன்றாகப் புரிகிறது சேஷனுக்கு... 'தனக்கு வேளை வந்துவிட்டது' என்பதுதான் அது. ஆனால், நம்பிக்கை மோசம் செய்யத் தெரியாத வேங்கட வன் அருள் அவரைத் தாங்கிப் பிடிக்கிறது.

பலர் இறந்து போனார்களே...அங்கே ஏன் அந்த அருள் கணக்கு காப்பாற்றவில்லை? பெரிதாகக் கேள்வி எழுகிறது...

திரு. முத்துக்கிருஷ்ணனுக்கும் சேஷனுக்கும் வேறு பாடே இல்லை. சமாஜத்தை உயிராக நேசித்தவர் இவர். 24 ஆண்டுகள் தொடர்ந்து யாத்திரை மேற் கொண்டவர். யாத்திரையில் உண்டியல் சுமந்தபடி நடப்பதை இவரும் இவரது குழுவினரும் பெரிய பாக்ய மாகவே கருதினார்கள்.

'அம்மம்மா மாயம்மா அலமேலு மங்கம்மா' என்று அவர் உண்டியலோடு ஆடிப்பாடுவது இன்னும் கண்ணில் இருக்கிறது. கட்டைப் பிரம்மச்சாரி...தன் பக்தி மார்க் கத்துக்கு இல்லறம் இடையூறு செய்யலாம் என்று நினைத்தாரோ என்னவோ?

அவரை வேங்கடவன் அழைத்துக் கொண்டு விட்டான். அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்படி செய்துவிட்டான். பலருக்கு பல விஷயங்களை அளித்து காத்தவன். 'அபயம்' என்றபோது கைகொடுத்து தூக்கி நிறுத்தியவன், முத்துக்கிருஷ்ணனை மட்டும் ஏன் இத்தனை சீக்கிரம் அழைத்துக் கொண்டான்?

கேள்வி என்னை கொத்திப் பிடுங்கியது. 'வேங்கடவா நீ இருக்கிறாயா...இல்லையா? ஏன் இப்படிச் செய்தாய்' என்று மனது கதறியது.

'அதுசரி... அருளிக்கொண்டே இருந்தால் இருப்பவன்; இல்லாயிட்டால் நான் இல்லாதவனா? ஒரு உயிரின் மாற்றத்தை என் பக்தர்களாகிய நீங்கள் இழப்பாகத் தான் கருதுகிறீர்களா? இயற்கையை அதன் போக்கில் ஏற்க முடியாதவர்களா நீங்கள்?

என்று வேங்கடவன் கேட்பது போல எனக்குத் தோன்றியது.

# 27

இருபத்தி நாலு வருஷங்கள் தொடர்ச்சியாக பாத யாத்திரை புரிந்தவர் திரு. முத்துகிருஷ்ணன். வெங்கடேச பக்த சமாஜத்தின் பல்வேறு நலப்பணிகளுக்கும் துணை நின்றவர். கட்டை பிரம்மச்சாரி. இவரின் மரணம் பலரை உலுக்கி எடுத்துவிட்டது.

நானும்கூட இந்த அகால மரணம் குறித்துப் பலவித மாக யோசித்துப் பார்த்தேன்.

விதி முடிந்துவிட்டது. வேளை வந்துவிட்டது; போய்ச் சேர்ந்துவிட்டார் என்று எல்லா மரணங்களை

யும் போல இந்த மரணத்தை என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

மார்க்கண்டேயனுக்குக் கூட விதி முடியத்தான் இருந்தது. கயிலாய சிவம் வந்து கருணை காட்ட வில்லையா? அதுபோல முத்துக்கிருஷ்ணனை ஏன் வேங்கடவன் காத்து ரட்சிக்கவில்லை?

இப்படிப் பரமபக்தர்கள் கண் எதிரில் நசிந்து போனால் அதைப் பார்க்கும் பக்தர்கள் மனதில் அவநம்பிக்கை உருவாகாதா

காத்து ரட்சிக்க வேண்டிய தெய்வம் ஏன் கண்ணை மூடிக்கொண்டது?

யானைக்கு ஓடி வந்தவன், இந்த முத்துகிருஷ்ண னுக்கு ஓடிவராமல் இருந்துவிட்டானே...?'

கேள்வி...கேள்வி...கேள்விகள்...?

எது வேண்டுமானால் ஆடலாம்—அசையலாம் நம்பிக்கை மட்டும் ஆடி அசைந்து விடவே கூடாது. அதில்தான் உலகம் ஓடிக்கொண்டிருக்கிறது.

சாவதற்கும் ஒரு வயதிருக்கிறது; விதமிருக்கிறது வேங்கடவனின் பக்தர்கள் வலியின்றி மரிக்க வேண்டும். அதுவும் பெண்டுபிள்ளை பேரர்கள் என்று சகலரையும் பார்த்துவிட்டு பெருவாழ்வு வாழ்ந்துவிட்டு மரிக்க வேண்டும். நோய் நொடியின்றி படுத்து உறங்கப் போனார்; தூக்கத்திலேயே உயிர் போய்விட்டது என்று அறியப்பட வேண்டும்.

ஒருவேளை முத்துக்கிருஷ்ணனை பிரம்மசாரிதானே என்று கருதி, அந்த வேங்கடவன் தன்னிடம் அழைத்துக் கொண்டுவிட்டானோ என்னவோ?

இந்தச் சங்கடத்தை என் அருமை நண்பர் எழுத்தாளர் பாலகுமாரன் அவர்களிடம் கூட பகிர்ந்து கொண்டேன்.

''பாலா, இப்படி ஒரு மரணம் நேர்ந்து விட்டது. பெரம்பூரில் தொடங்கி திருமலை தேவஸ்தானம் வரை உண்டியல் தூக்கிவந்த பரமபக்தர் போய்விட்டார் பாலா...அந்த பாலாஜியின் மேல் நம்பிக்கையே போய் விட்டது'' என்றேன்.

''இதனால் பாலாஜிக்கு ஒரு நஷ்டமுமில்லை...''— என்றார் பாலகுமாரன். என்னை அவரின் பதில் சற்று பாதித்தது. அவருக்கும் அது புரிந்தது. தொடர்ந்தார்.

''இந்திரா, வாழ்வில் மரணம் எப்பொழுதும் வேண்டுமானாலும் வரும், எப்படி வேண்டுமானாலும் வரும். அது உயிரின் போக்கில் ஒரு மாற்றம். அவ்வளவுதான்!

மரித்துப்போன முத்துக்கிருஷ்ணன் திரும்பவும் இந்த மண்ணில் பிறந்து குபேர சம்பத்துடன் பிள்ளை குட்டிகளுடன் வாழப்போகிறார். அதற்காகக்கூட அந்தப் பரமன் அவர் விதி விஷயத்தில் குறுக்கிடாமல் இருந்திருக்கலாம். நமக்கென்ன தெரியும்? நம்மால் எல்லாம் சில விஷயங்களை அளவிட முடியாது. நம்மிடம் அதற்கான அளவுகோல் கிடையாது.

வலியுடன் மரித்துப் போனார் என்கிறாய்? இருக்காது; நிம்மதியாகத்தான் மரித்திருப்பார்...

சரீரத்தோடு, உயிரோடு இருந்து சாதித்துக் காட்டியதைவிட அவரது ஆன்ம வழிகாட்டுதல் சமாஜத்திற்கு அதிகம் துணை செய்யலாம்...'' என்றார்.

சற்று இதமாக இருந்தது அந்தக் கருத்து.

உண்மைதான்...உலகில் பல புதிர்களுக்கு அளவு கோலே கிடையாது. இருந்தால் அதைக்கொண்டு அளந்து அதையும் ஒரு வழி பண்ணி விடுவான் மனிதன்.

எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் வரும் என்ற நினைப்பு இருப்பவர்கள்தான் வாழும் காலத்தை பயனுள்ளபடி செலவழிக்க முடியும். நல்ல காரியங் களையும் தள்ளிப்போடாமல் செயல்படுத்த முடியும்.

வாழ்வை நேசிப்பது போலவே மரணத்தையும் நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இருபத்தைந்து ஆண்டுகளாக நடப்பவர்களுக்கு அது இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கக்கூட இந்த ஜீவ விடுதலை நிகழ்ந்திருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் எட்டி உதைத்தாலும் வெட்டிப் பிளந்தாலும் சரணாகதி அடைந்தவர்கள் சஞ்சலத்திற்குள்ளாகக் கூடாது. சத்காரியங்களைத் தொடர வேண்டும். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைப்பதில் உன்னதம் இருக்கிறது.

திரு. சேஷன் கூட மனதை தேற்றிக் கொண்டு, சமாஜ காரியங்களில் இறங்கி விட்டார். 25-ம் ஆண்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்வதில், முன்பையும் விட ஈடுபாடு காட்டி செயல்படத் தொடங்கிவிட்டார்.

வரும் புரட்டாசியில் வழக்கம்போல பாதயாத்திரை புறப்பட இருக்கிறது. திருக்கல்யாண உற்சவம் நடை பெற இருக்கிறது.

அதே பெரம்பூர் ரயில் கல்யாண மண்டபத்தில்தான் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

கல்யாண மண்டப வாடகை மட்டுமே பத்தாயிரம் ரூபாய்க்கு மேல்...அதைக்கூட இந்தமுறை ஒரு அன்பர் ஒரே செக்கில் அளித்து விட்டார். இத்தனைக்கும் அவர்

மாதச் சம்பளக்காரர். சொல்ப வருமானம்தான். இந்த பத்தாயிரம்கூட அவரது நெடுநாள் சேமிப்பு... அதை அப்படியே அறப்பணிக்கு வழங்கிவிட்டார்.

இந்த முறை நான் சமாஜத்திற்குச் சென்றபோது அந்த அன்பரின் கொடை உள்ளத்தைப் பற்றி சிலிர்ப் போடு குறிப்பிட்டார் சேஷன். அவருக்கு அந்த வேங் கடவன் எல்லா நலன்களையும் அருளட்டும்.

இந்தத் தொடரின் போக்கில் பல அன்பர்களின் மெய்யனுபவங்களைக் கூறி வருகிறேன். அதில் சமாஜத் தில் நித்யப்படிக் காரியங்களை சிரத்தையுடன் செய்து வரும் இரண்டு பேரைப் பற்றி விவரமாகக் கூறுகிறேன்.

அவர்கள் இருவருமே தங்களை வேங்கடவனுக்கு அர்ப்பணித்து விட்டவர்கள். அவர்களின் அர்ப்பணிப் புக்கு ஒரு பங்கமும் வராதபடி வேங்கடவனும் அவர்களை யும் அவர்களது குடும்பத்தவர்களையும் ரட்சித்து வரு கிறான். அவர்கள் இருவரில் ஒருவர் ஒரு கட்டத்தில் வேலையை இழந்து விட்டவர். வருமானத்திற்கே வழி இல்லாத நிலையிலும் கடமையை தளர்ச்சியின்றி செய் தார் அவர்.

போட்டிகள் நிறைந்த இந்த உலகில் இன்று அவரது மகன்கள் கல்லூரியில் உரிய இடம்பெற்று நன்கு படித்து, பின்னர் வேலையிலும் அமர்ந்து கைநிறைய சம்பாதிக் கின்றார்கள்.

'எப்படியோ இருந்த குடும்பம். வேங்கடவன் அணைப்பால் இன்று புத்துயிர் பெற்று பொலிவோடு இருக்கிறது' என்று கூறினார் அவர்! தொடர்ந்து அவர் கூறியவை மனதில் பதித்துக் கொள்ளப்பட வேண்டியவை அவை...'

# 28

இரண்டு மெய்யன்பர்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சமாஜத்தில் இருந்து கொண்டு கால் காசு வாங்காமல் சேவை செய்து வரும் அவர்களது அனுபவங்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டியவை.

டி. ஹரிஹரன், எம். சுப்பா ரெட்டியார் ஆகிய இருவர்தான் அந்த மெய்யன்பர்கள். இவர்களோடு சூர்ய நாராயணன், எம். பாலகிருஷ்ணன் போன்றோர்களும் சமாஜ சேவையை, பெரிதாகக் கருதிச் செய்து வருபவர்கள்.

இதில் ஹரிஹரனின் அனுபவம் அலாதியானது. இவர் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸில் பணியாற்றியவர். இன்று அந்த நிறுவனம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை கூறத்தேவையில்லை. பல ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் அதில் பணியாற்றிய பலர் வேறு வேலை வாய்ப்புகள் இல்லாமல் தற்கொலைகூட செய்து கொண்டிருக்கின்றனர்.

ஒருவர் சுடுகாட்டு வெட்டியானாக ஊழியம் பார்த்து வாழ்க்கையை நகர்த்தும் நிலைக்குப் போனதைப் பத்திரிகைகள் வாயிலாக நாமறிவோம்.

இப்படி அந்த நிறுவனம் மூடப்பட்ட நிலையில் பாதிப்புக்குள்ளானவர்களில் ஹரிஹரனும் ஒருவர். ஹரிஹரன் செய்த புண்ணியம் அவர் சமாஜத்தில் உறுப்பினராக இருந்ததுதான்.

திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்கிற முதுமொழிக்கேற்ப அவர் திருவேங்கடவனை கெட்டியாகப் பற்றிக் கொண்டார்.

அவருக்கு இரண்டு மகன்கள். படித்துக் கொண்டிருக்கும் நிலை. அவர்களைத் தொடர்ந்து படிக்க வைக்க வேண்டும். குடும்பத்தையும் நடத்தியாக வேண்டும்.

'அனைத்தையும் வேங்கடவன் ஈடேற்றித் தந்தான்' என்கிறார் ஹரிஹரன்.

''எப்படி?''

''அதுதான் அவன் கருணை வேலை போனது எனது ஊழ்வினையால். தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் கூட 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்று குறிப்பிடுகிறது... வினைகள் யாரை விட்டிருக்கிறது... சொல்லுங்கள் பார்ப்போம்?

அப்படி ஊழ்வினை தாக்கும்போது நமக்கு அதைத் தாங்கும் வல்லமையை இறை அருள்தான் தர முடியும். எனவேதான் வேங்கடவனை பற்றிக் கொண்டேன். பற்றிக் கொண்டேன் என்பதைவிட, என்னையும் என் குடும்பத்தையுமே அவன் வசம் ஒப்புவித்தேன், இதை சஞ்சலமின்றி முழு நம்பிக்கையோடு செய்தேன்... அதன் பின் பழசை எதையும் நினைக்கவேயில்லை. தினமும் சமாஜப் பணிதான்— பிரார்த்தனைதான்.

வழி தானாகப் பிறந்தது. என் மகன்களும் நன்கு படித்தார்கள். நல்ல மார்க் வாங்கினார்கள். குடும்பம் நடத்த, படிக்க வைக்க உதவிகள் கேட்குமுன்பாகவே கிடைத்தது.

தினமும் காலை மாலை இருவேளையும் சமாஜத்தில் திருப்பணி ஆற்ற வந்து விடுகிறார். அமெரிக்காவில் மகனிடம் போய் சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் சமாஜத் திருப்பணி அறுந்து போய் விடுமே என்கிறார்.

வசதி வந்தும் பக்தியில் மாற்றம் இல்லை. 'அவன் என் குடும்பத்தைப் பார்த்துக் கொள்கிறான். அவனை இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன். அதுவும் அவன் அருளால்தான்' என்று கூறிச் சிரிக்கிறார்.

இவரோடு சேர்ந்து சமாஜப் பணியாற்றுபவர் சுப்பா ரெட்டியார். ஆந்திராக்காரர். சொந்தங்களெல்லாமும் ஆந்திராவில் இருக்கிறார்கள். இருந்தாலும் சமாஜம் இருக்குமிடம்தான் என் இருப்பிடம் என்று, பெரம்பூருக்கு அருகில் இருந்து கொண்டு சமாஜப் பணிகளுக்கு வந்து விடுகிறார்.

அவர் வரையில் அவர் செத்துப் பிழைத்தவர். பல வருடங்களுக்கு முன் வந்த ஒரு விஷக் காய்ச்சல், அவர் கதையை முடிக்கப் பார்த்தது.

பிழைத்தால் வேங்கடவனுக்கு திருப்பணி செய்வேன். -என்று அப்போது நினைத்துக் கொண்டாராம். பிழைத்துக் கொண்டு விட்டார். டாக்டர்களுக்கே இவர் பிழைத்தது ஒரு பெரிய ஆச்சரியம்தான்.

''ஆரோக்யமே மகாபாக்கியம். அதைத்தர வேங்கடவனால்தான் முடியும்' என்று திருக்குறள் போலப் பேசுகிறார்.

இவரைப் பொறுத்து எத்தனை கோடி இருந்தாலும் பிரயோஜனமில்லை. உடம்பு ஆரோக்கியமாக நோய்

நொடியற்று இருக்க வேண்டும். மனது பயமின்றி ஏகாந்தத்தில் திளைக்க வேண்டும். இதை வேங்கட வனைத் தவிர யாராலும் தர முடியாது என்பது இவரது திடமான கருத்து...

'இந்த இரண்டையும் ஒரு முறை தந்துவிட்டால் திரும்ப அவன் பெற்றுக் கொள்வதில்லை. நமக்கு அதைப் பேணிப் பாதுகாக்கும் பெரிய பொறுப்பிருக்கிறது. அதற்காகத்தான் திருமலைக்கு நடக்கிறேன். சமாஜத்தில் ஓடியாடிப் பணியாற்றுகிறேன். 'கோவிந்தா கோவிந்தா' என்று கூறி மனதையும் அச்சமில்லாதபடி வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று புதிய கோணத்தில் விளக்கம் அளிக்கிறார்.

நவீன விஞ்ஞான யுகத்தின் எந்த வசதி வாய்ப்பு களும் இவர்களைப் பாதிக்கவில்லை...எந்த ஆராய்ச்சித் தத்துவங்களும் மனதை சிதற அடிக்கவில்லை.

ஒரே குறி...ஒரே பிடி...! நல்லதோ கெட்டதோ எல்லாம் அந்த வேங்கடவன் செயல்தான்! வாழ்க்கை வண்ண மயமாக இருக்கிறதா அதுவும் வேங்கடவனால் தான். சஞ்சலத்தோடு இருக்கிறதா? அதுவும் வேங்கட வனால்தான்...

மாறி மாறி வரும் இவைகளை சமநிலையில் எடுத் துக் கொள்ள அவன் பயிற்சி அளிக்கிறான்...இரண்டுமே மாயை என்று உணர்த்தத்தான் வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் கலந்து கலந்து வருகின்றன. இதில் இரண்டும் ஒரு கட்டத்தில் அலுத்துப் போகும். ஒரு இன்பம் பெரி தாக வரும்போதே அடுத்து பெரிதாக ஒரு துன்பம் வரப் போவதை மனது உணர்ந்து மருகத் தொடங்கிவிடும்.

மாறிமாறி இப்படி எதிர்பார்ப்பிலேயே வாழ்க்கை

போய்க் கொண்டிருக்கிறது. சரியான கண்ணாமூச்சி விளையாட்டாக இருக்கிறது.

*வாழ்க்கையை எப்படி எடையிடுவது?*

*எதைக் கொண்டு அளந்து பார்ப்பது?*

*யாருக்குமே தெரியவில்லை.*

ஜீனோம் என்கிறார்கள், குளோனிங் என்கிறார்கள். ஒருவரைப் போல ஓராயிரம் பேரை உருவாக்கலாமாம். ஆயிரம் வயதுக்கு மேல் வாழ முடியுமாம். விஞ்ஞானி களின் ஆய்வில் தெரிய வந்திருக்கிறதாம்.

இதனால் மனித மனதுக்கு சந்தோஷமோ மலர்ச்சியோ வந்து விடாது என்கிறார்கள் சமாஜத்தில் சேவை செய்கின்றவர்கள்...

உடம்பின் எலும்பு நரம்பு சதைகளில் விஞ்ஞானம் பல மாற்றங்களை செய்யலாம். மனதை அதனால் என்ன செய்ய முடியும்? திருப்பி கேட்கிறார்கள். பக்தி நம்பிக்கை சார்ந்தது. நம்பிக்கை மனம் சார்ந்தது. மனம் நம்பிக்கையோடு வலுவாக இருந்துவிட்டால்தான் வாழ்க்கை. இல்லாவிட்டால் அது முடக்கை. நம்பிக்கையை மிகச் சுலபமாகவும் அள்ளியும் வழங்குவது பக்தி ஒன்றுதான்.

அதில் சரணாகதி நிலையை அடைந்து விட்டவர்களுக்கு, இந்த உலகில் எந்த விதத் துன்பமுமில்லை. நாங்கள் அதற்கு சாட்சிகள் என்கின்றனர் ஹரிஹரையரும் சுப்பா ரெட்டியாரும். அதை ஆமோதிக்கின்றனர் ஸ்ரீமந் நாராயணனும் எம். பாலகிருஷ்ணனும்.

இந்த ஆண்டும் சமாஜம் தனது 25-வது வருட யாத்திரைக்குத் தயாராகி விட்டது. அதன் தொடர்பாக

திருக்கல்யாண வைபவம். புரட்டாசி மாத வைபவங்கள் யாத்திரை புறப்பாடு எல்லாம் நடைபெற இருக்கிறது.

இந்த இருபத்தைந்து இந்த புதிய நூற்றாண்டில் ஐம்பது, நூறு என்று வளரப் போவது நிச்சயம்; சத்தியம்! இந்த யாத்திரைகள் மனிதனுக்குள் தெய் வத்தை காட்டும் யாத்திரைகள். வாழ்வியல் ஞானத்தை அவனுக்கு ஊட்டும் யாத்திரைகள்...இந்த யாத்திரையில் மட்டுமல்ல... அனுதினமும் சொல்வோம். 'கோவிந்த கோவிந்த கோவிந்தா...நாராயணா வேங்கடரமணா ஏழுமலை வாசா...!' இதைச் சொல்பவர்களுக்கு மட்டு மல்ல கேட்பவர்களுக்கும் நல்லதே நடக்கும்; நன்மை களே கிடைக்கும். கிடைக்கட்டும்.